www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி


පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 15 | மார்ச் 2008 | பக்கம் 20 | விலை 20/= | சுழற்சி 111



# இலங்கையின் தலைவிதி யார் கையில்?



**இலங்கைத் தமிழ் மக்களை பாதுகாக்கும்** பொறுப்பை "சர்வதேச சமூகம்" எடுத்துக்கொள்வதற்கான பொறுப்புக் கூறல் பிரகடனத்தை (R2P) ஐக்கிய நாடுகள் சபை செய்யுமா என்பதே தற்போது பெரிதாகக் கலந்துரையாடப்படும் விடயமாக இருக்கிறது. லண்டனில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கிவரும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கான குழு சிறுபான்மை இனங்களை அச்சுறுத்தும் நாடுகளில் இலங்கையையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் தமிழ் முஸ்லீம் மக்களுக்கு பாதுகாப்பில்லை என்று குறிப்பிட்டுள்ளது. கடந்த ஒன்றரை வருடத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பதவியில் இருக்கும் ஐந்து முக்கிய நபர்கள் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர். இலங்கையில் மனித உரிமைகள் அதிகமாக மீறப்படுவதால் இங்கு ஐ. நா மனித உரிமைகள் கண்காணிப்பு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது. அதனை இலங்கை அரசாங்கம் மறுத்து வருகிறது.

தற்போது நடைபெற்று வரும் யுத்தம் தொடருமானால் 2008 ஆண்டில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் தொகை மேலும் 5 லட்சத்துக்கு அதிகமானதாக இருக்கும் என்று ஐ. நா சபையின் அறிக்கை கூறுகிறது. 2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 70 பதினா யிரமாகும். 2007 ஆண்டில் 3 லட்சத்து 8 ஆயிரமாகும்.

இன்றைய யுத்தமானது பழிக்குப்பழி வாங்கும் விதத்திலான பொதுமக்கள் மீதான தாக்குதல்களாக மாறியுள்ளது. தமிழர்கள் கைது செய்யப்படுவதும் காணாமல் போவதும் அதிகரித்துள்ளது. கடத்தல்கள் நாளாந்தம் அதிகரித்த வண்ணம் செல்கின்றன. இந்நிலையில் தான் ஐ. நா சபை இலங்கை பாதுகாப்பற்ற நாடு என்றும் அங்கு பாதுகாப்பை நிலைநாட்ட சர்வதேச சமூகம் தலையிடலாம் என்றும் அதற்கான பிரகடனத்தை வெளியிடலாம் என்றும் பரவலாகப் பேசப்படுகிறது. இலங்கையின் மோதல்கள் குறித்து அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் நோர்வே, ஜப்பான், இந்தியா போன்றன கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வெளியிட்டு வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான நிதியுதவியை நிறுத்தியுள்ளது. ஜப்பான் நிலைமைகளை அவதானித்து உதவிகளை நிறுத்த நேரிடலாம் என்று கூறியுள்ளது.

இவை அடிப்படையில் இலங்கை அரசிற்கு எதிரான செயற்பாடுகளாகவே கொள்ளப்பட வேண்டும். ஐ. நா. வின் பிரகடனத்திற்கு முன்பே நிதியுதவிகளை கணிசமான அளவில் நிறுத்திய ஐரோப்பிய ஒன்றியம் ஒருவகையான பொருளாதாரத் தடையையே விதித்துள்ளது எனலாம்.

அவற்றின் தீர்மானங்களும் செயற்பாடுகளும் அவற்றின் அக்கறைகளுக்குட்பட்டதாகவே இருந்தபோதும் தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அரசியல் தீர்வை காணாமல் யுத்தத்தை முன்னெடுப்பதால் இலங்கை அரசு சர்வதேச ரீதியான கண்டனங்களுக்கும் தனிமைப்படுத்தல்களுக்கும் உட்பட்டு வருகிறது. இவ்வாறான வெளித்தலையீடுகள் கொசோவோ போன்ற நிலைமையை இலங்கையில் விரைவில் ஏற்படுத்தும் என்ற அதீதக் கற்பனைகளை வளர்க்க வேண்டியதில்லை. என்றாலும் அதுபோன்ற மோசமான ஒரு குழப்பச் சூழலை நோக்கியே நிலைமைகள் வளர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. இப் போக்கைத் தடுத்து நிறுத்தும் முழுப் பொறுப்பும் மகிந்த அரசாங்கத்திற்கே இருக்கிறது. இந்தியாவின் அனுசரணையுடன் 13 வது திருத்தத்தின் கீழான மாகாணசபையை மீண்டும் வடக்கு கிழக்கில் அமுல்படுத்தப் போவதாகக் கூறும் பம்மாத்தைக் கைவிட்டு ஆகக் கூடிய

2ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# விசாரணை செய் அல்லது விடுதலைசெய்

## புதிய - ஜனநாயக கட்சியின் கோரிக்கை



எமது புதிய- ஜனநாயக கட்சித் தோழர்களான வெ. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன், எஸ். மோகன்ராஜ், என். கிருஷ்ணப்பிரியன் ஆகியயோர் கைது செய்யப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகி உள்ளது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட அவர்கள் இன்றுவரை நீதிமன்ற விசாரணைக்கு நிறுத்தப்படவில்லை. மலையகப் பிரதேசத்தில் நமது கட்சி வாலிபர் இயக்கம் தொழிற்சங்கம் என்பனவற்றின் வளர்ச்சிக்காக முன்னின்று அரசியல் பணியாற்றியவர்கள் மேற்படி தோழர்கள். மூன்று ஆசிரியர்களும் இரண்டு ஆசிரிய நியமனம் கிடைத்தவர்களுமான எமது தோழர்கள் அரசியல் ரீதியில் பழிவாங்கும் நோக்குடனேயே விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நமது கட்சியினதும் மக்களினதும் கோரிக்கை எமது தோழர் களை நீதிமன்ற விசாரணைக்கு நிறுத்த வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண் டும் என்பதேயாகும். விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்ற எமது கட்சியின் நிலைப்பாடு எமது தோழர்களுக்கு மட்டுமல்ல. அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிங்கள முஸ்லீம் மலையக அரசியல் கைதிகள் அனைவருக்குமாக முன்வைக்கும் கோரிக்கையாகும்.

### இலங்கையின்

1ம் பக்க தொடர்ச்சி

அதிகாரப் பகிர்வுடனான சுயாட்சியை தமிழ் மக்களுக்கு வழங்குவதுடன் முஸ்லீம் மக்களுக்கும் மலையகத்தமிழ் மக்களுக்கும் உரிய சுயாட்சியையும் உறுதிசெய்ய வேண்டும். அதுவே அர்த்தமுள்ள அரசியல் தீர்வாக அமைய முடியும். ஆனால் இதனை இலங்கை அரசாங்கம் செய்யப் போவதில்லை என்ற போக்கே மகிந்த ராஜபக்ஷதலைமை எடுத்துக்காட்டி வருகிறது. இருப்பினும் நியாயமான சுயாட்சி தவிர வேறுவழிகளால் இலங்கையில் அமைதியை நிலை நாட்டவோ. அந்நிய தலையீடுகளிலிருந்து நாட்டின் இறைமையையும், சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் பாதுகாக்கவோ முடியாது என்பது நிதர்சனமாகும்.

அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் இந்தியாவும் சேர்ந்து இலங்கையில் "சர்வதேச சமூகம்" தலையிடும் பிரகடனத்தை வெளியிட உதவலாம் என்று ஜே.வி.பி அதன் விமர்சனத்தை முன்வைத்துள்ளது. இவ்வாறான சூழ்நிலைமைக்கு ஜே.வி.பி, ஹெல உறுமய போன்றவற்றின் பேரினவாத வெறித்தன. நிலைப்பாடும் செயற்பாடுகளும் தான் காரணமாகும் என்பதை அவர்கள் காண்பதில்லை.

அதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடும், அமெரிக்காவின் நிலைப்பாடும் ஒத்ததாகவே இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்த ஒத்த நிலைப்பாடு என்பது என்ன என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. தீர்வு பற்றிய உடன்பாடு எவ்வாறிருந்தபோதும் இலங்கையின் மேலாதிக்கம் செலுத்துவதில் அமெரிக்காவும், இந்தியாவும் ஒத்த நிலைப்பாடு கொண்டதாக இருக்கலாம். ஆனால் அவ் ஒத்த நிலைப்பாடு என்றும் நிரந்தரமானதாக இருக்க முடியாது. அதிலும் அவற்றிடையே போட்டியும் முரண் பாடுகளும் உள்ளுர இருந்து வரவே செய்கின்றன. இவ்விரு தரப்பினரது இணக்கப்பாடாயினும் முரண்பாடாயினும் அவற்றால் பாதிக்கப்படுவது இலங்கையாகவே இருக்கும்.

இலங்கை பாதுகாப்பற்ற நாடு என்பதும் அந்நிய சக்திகள் தலையிக்கூடிய நிலை இருக்கிறது என்பதை வெளிப்படுத்தும் சர்வதேச பிரகடனம் வெளிவந் தால் அது இந்தியாவுக்குச் சாதகமானதாகவே இருக்கும். அதனூடாக இலங்கை- இந்திய (1987) உடன்படிக்கையில் ஏற்பாடு செய்ய ப்பட்டுள்ள இலங்கையில் இந்தியாவின் "அமைதி காக்கும்" பொறுப்பை இந்தியா மீண்டும் கையேற்க முற்படலாம். அதன் மூலம் "அமைதி காக்கும் இந்தியப் படையை இங்கு அனுப்பி வைக்கலாம். சர்வதேச சமூகத்தின் அந்நிய தலையீடு என்பதில் இந்தியா விலக்கப்பட்டதாக இருக்காது. அதற்கான சாத்தியங்கள் வலுவடைந்தே வருகின்றன.

ஏற்கனவே இலங்கையின் பொருளாதாரத்தை இந்திய மேலாதிக்கம் கபளீகரம் செய்துள்ளது. அரசியலிலும் போதிய அழுத்தங்களை கொடுத்து வருகிறது. ஜனாதிபதி மஹிந்தவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் சந்தித்துக்கொண்டதில் இந்திய அழுத்தம் இல்லாதிருக்க முடியாது. இதனைத் தொடர்ந்து பாதுகாப்பிலும் இந்தியா வெளிப்படையாகத் தலையிடாது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. இந்தியாவிற்கான ஆறு நாள் பயணம் மேற்கொண்டு இலங்கை யின் ராணுவத் தளபதி சென்றுள்ளார். அண்மை யில் கடற்படைத் தளபதியும் சென்று வந்தார்.

ஆக வருகின்ற காலங்கள் இலங்கை நாட்டின் தலைவிதியை முற்றாக அந்நிய சக்திகளே தீர்மானிக்கப் போகின்றன என்ற ஒரு அபாயச் சூழலே அதிகரித்து வருவதையே காண முடிகின்றது. இதற்கான முதன்மைப் பொறுப்பை மகிந்த சிந்தனை அரசாங்கமும் ஜே.வி.பி. , ஹெல உறுமய மற்றும் தீவிர பேரினவாத சக்திகளே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**புதிய பூமி**

**புதிய சந்தா சேருங்கள்**

2008ம் ஆண்டில் புதிய பூமிக்குரிய சந்தா முடிந்த சந்தாதாரர்கள் புதுப்பிக்கும் படி வேண்டப்படுகிறனர். மேலும் புதிய சந்தா செலுத்துவோர் உடன் அனுப்பிவையுங்கள். காசோலை அனுப்புவோர் K. Senthivel என்ற பெயரில் எழுதவும். காசுக கட்டளை அனுப்புவோர் அதே பெயரில் Grandpass தபால் நிலையத்தில் பணம் பெறும் படி எழுதவும். தபால் செலவு அதிகரிப்பால் சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகிறோம்.

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| ஒரு வருடம் | - 400 ரூபா |
| ஆறு மாதம் | - 200 ரூபா |

**வெளிநாடுகள்**

| | |
|---|---|
| ஐரோப்பா | -30 ஈரோ |
| ஏனைய நாடுகளுக்கு | - 40 டொலர் |

**புதிய பூமி**
**47, 3 வது மாடி**
**கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி**
**கொழும்பு- 11.**

### தனக்குத் தானே பிறந்த நாள் வாழ்த்து

மும்மொழிகளிலும் நாளேடுகளில் ஒருவருக்கு அரைப் பக்கத்திற் பிறந்தநாள் வாழ்த்துக்கள் வெளியாகியிருந்தன. அவர் வேறெருவருமல்ல. இலங்கையின் அதி பெரிய என்.ஜி.ஓ செல்வந்தரான குமார் ரூபசிங்ஹ தான். சர்வதேச என்.ஜி.ஓ நிதியிலிருந்து அவர் வழியாகப் பொசிகிற என்.ஜி. ஓக் காசு அவருக்கு வாழ்த்து விளம்பரம் போட உதவியுள்ளது.

யுத்த எதிர்ப்புத் முன்னணியை மெல்லக் கைகழுவிப் பேர்களை மாற்றி இப்போது "பிரயத்தனம்" என்கிற மக்கள் இயக்கம் ஒன்றை நாளாந்தம் தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலம் நடத்தி வருகிறாரே. இதற்கான பணம் யாரால் எதற்கு வழங்கப்படுகிறது?

போர் நிறுத்த உடன்படிக்கை முடிவுக்கு வந்தது பற்றியும் இந்தப் பிறந்தநாள் கொண்டாட்டக்காரர் தினக்குரலில் கட்டுரை எழுதியிருந்தார். எதிர்வரவுள்ள போர்ச் சூழலில் தமிழ் மக்களுக்கு நாட்டை விட்டுப் புலம்பெயர்வது தான் ஒரே வழியாக உள்ளது என்பது தான் அவரது பரிந்துரை. போராடுவதுு எதிர்த்து நிற்பது என்பதெல்லாம் என்.ஜி.ஓ அகராதியில் இல்லாத விடயங்களாயிற்றே!

## நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

### இவர் செய்தால் பம்மாத்து, அவர் செய்தால் வேறுகதை

ஜே.வி.பி. விலைவாசி உயர்வை எதிர்த்து நடத்திய அண்மைய ஆர்ப்பாட்டங்களின் போது சக்தி..சிரச தொலைக்காட்சி நிருபர்கள் "பொது மக்களைச்" சந்தித்துக் கருத்துக்களைத் தொலைபரப்பினர். ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டம் ஒரு பம்மாத்து ஏகோபித்த கருத்தே இருப்பதாகக் காட்டப்பட்டது.

ஜே.வி.பி. தலைவர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்ஹவின் அரசியல் நடத்தையை மெச்சி ஒரு கருத்துத் தெரிவித்த போதும் அது பற்றி அதே நிறுவனம் தனது "பொது மக்களின்" கருத்தைக் கேட்டு அதுவும் பம்மாத்து என்று காட்ட முற்பட்டது. ஜே.வி.பியின் பம்மாத்துப் பற்றி மக்கள் அறியலாம், அறியாமலிருக்கலாம். ஆனால் அவர்கள் சொல்கிற விடயங்கள் சரியா பிழையா என்பதை ஒரு ஊடகம் கொஞ்சங் கவனிக்க வேண்டும்.

இதே ஊடக நிறுவனம் யூ.என்.பி. விலைவாசி உயர்வுக்கு எதிராக நடத்துகிற போராட்டங்கள் பம்மாத்தானவை என்பதை ஏன் அம்பலப்படுத்தாது? அமைதி பற்றி யூ.என்.பியின் கபட நாடகத்தை ஏன் அம்பலப்படுத்தாது?

தங்களது வியாபாரத்துக்கும் பழுதில்லாமல் அடிக்கக் கூடியவர்களை அடிப்பதும் நடுநிலை வேடம் போடுவதும் ஒரு கலை. அதில் மேற்படி ஊடகத்தினர் நல்ல பயிற்சி பெற்றுள்ளனர் என்பது நிச்சயம்.

### ஈழத் தமிழரும் இரண்டாவது மனமும

கருணாநிதி இலங்கைத் தமிழர் விடயத்தில் இலங்கை அரசாங்கத்தைக் கண்டிக்கவும் இந்திய ஆட்சியாளர்களைத் தமிழர் சார்பாக நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தவும் தயங்குவதற்குக் காரணம் ஜெயலலிதாவும் தமிழ்நாடு காங்கிரஸும் என்று நாங்கள் நம்ப வேண்டுமென்று சிலர் விரும்புகிறார்கள். கருணாநிதியின் தில்லுமுல்லு அரசியலைப் பற்றி யாரும் பேசுவதை அவர்கள் விரும்புவதில்லை.

ஜெயலலிதாவும் பாரதிய ஜனதாவும் சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றிக் கூடத் தான் எதிர்த்தும் பேசி வருகிறார்கள். இந்த அரசியல் இழுபறிகட்கும் அப்பால் சுற்றுச் சூழலில் அக்கறையுள்ள பலரும் இத் திட்டத்தால் கடலின் உயிரினங்களும் மீனவர்களும் கரையோரப் பிரதேசங்களும் பாதிக்கப்படும் என்று ஆதாரங்களுடன் பேசி வந்துள்ளார்கள்.

அதெயல்லாம் புறந்தள்ளி சேது சமுத்திரத் திட்டத்தைத் தொடருமாறு டில்லியை வற்புறுத்துகிற கருணாநிதி இலங்கைப் பிரச்சனையில் டில்லி என்ன செய்தாலும் அதிற் குறுக்கிட மாட்டேன் என்று சொல்லி வருகிறார்.

மகள் கனிமொழிக்கு ஒரு சின்ன அமைச்சர் பதவியைப் பெற்றுத்தரப் போராடக் கூடிய ஒரு பாசமுள்ள தந்தை அவர். ஈழத் தமிழர்கள் அவருடைய குடும்பத்தினரா என்ன! தனது இதயங் குமுறுகிறது என்று சொல்லிக் கொள்வார். ஆனால் எதுவுமே செய்ய மாட்டார்.

"இரண்டு மனம் வேண்டும்" என்று ஒரு பாட்டுண்டு. கருணாநிதிக்கு நிச்சயமாக இரண்டு மனங்கள் உண்டு.

### தனித்துவமான எழுத்து

மல்லிகை 43ஆம் ஆண்டு மலரில் விமர்சகர் செ.யோகராசா பல விடயங் களையும் பற்றிக் கவிதை எழுதி வருகிற மாக்சியக் கவிஞராகச் சிவசேகரம் மட்டுமே உள்ளார் என்ற விதமாக எழுதியிருக்கிறார். முருகையன் என்கிற ஒரு கவிஞரை அவர் அறியமாட்டாரா? கவிதைகளின் சிறப்புப் பற்றிப் பேசும் போது இடதுசாரிகளிடமிருந்து சிவசேகரம் வேறுபடுகிறதாக அவர் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடுகிற சிறப்புக்கள் இடதுசாரிகள் அல்லாதவர்களிடம் இருந்து பிற இடதுசாரிகளிடம் இல்லை என்றால் அந்தக் கருத்துக்குப் பெறுமதி இருக்கும்.

இடதுசாரிப் படைப்பாளிகள் கலை உணர்வு அற்றவர்கள் என்று எண்ணும் மனநிலையிலிருந்து யோகராசா இன்னும் விடுபடவில்லை என்றே கூற வேண்டும். கொஞ்சம் அகலமாகவும் ஆழமாகவும் தேடினால் உண்மைகள் அதற்கு மாறானவை என்று விளங்கும்.

### பிழைக்கத் தெரிந்த கலாநிதி

வடக்கு – கிழக்கைத் தமிழரிடம் ஒப்படைத்து விட வேண்டுமென்று கலாநிதி விக்ரமபாகு கருணாரத்தின அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். அவருக்கு இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை பற்றித் தெரிந்தது அவ்வளவுதானா? வடக்குக் கிழக்கைத் தமிழரிடம் என்றால் எந்தத் தமிழரிடம், எப்படி என்றெல்லாம் சொல்லமாட்டார்.

புதிய இடதுசாரி முன்னணியைக் குழப்பிய போது அவரோடு கூட நின்றவர் முஸ்லிம் விடுதலை முன்னணி என்கிற அமைப்பின் தலைவர் முஜிபுர் ரஹ்மான். அவர் முஸ்லிம் தேசிய இனம் என்று ஒன்று இருப்பதாகக் கற்றுத் தரவில்லையா? இப்போதெல்லாம் தமிழ்த் தேசியவாதிகள் மகிழுகிற விதமாக எதையாவது சொல்வதுடன் அவருடைய அரசியல் முடிந்து விடும். அவர்களும் தம் பங்குக்கு இவருடன் மேடைகளிலும் புகையிரத நிலைய முன்பும் வந்து நின்று கடன் தீர்ப்பார்கள். மிகுதிக்கு அவர் என்ன அரசியலா நடத்துகிறார்? என்.ஜி.ஓ. பிழைப்பல்லவா நடக்கிறது!

### கோடரிக் காம்புகள

குஜராத் முதல்வராகத் தெரிந்தெடுக்கப்பட்டவரும் கடந்த ஐந்தாண்டுகட்கு மேலாக அங்கு முஸ்லிம் விரோத அரசியலை முன்னெடுக்கிற பாரதிய ஜனதா கட்சியின் அதி முக்கிய தலைவருமான நரேந்திர மோடி பிற்படுத்தப்பட்ட குயவர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று கேள்விப்பட்ட போது கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருந்தது. பிறகு யோசித்துப் பார்த்த பின்பு அதில் அதிசயப் பட அதிகம் இல்லை. சாதி வெறியர்களும் மத வெறியர்களும் தாழ்த்தப்பட்ட, இடைநிலைச் சமூகங்களை வைத்தே காரியங்களைச் சாதித்து வந்துள்ளனர். தலித்தியம் பேசுகிறவர்களாலும் பலவாறான சந்தர்ப்பவாதக் கூட்டுக்களை வைத்துத் தங்களது காரியத்தைப் பார்த்துக் கொள்ளுகிறார்கள். அவர்களை நம்புகிற தாழ்த்தப்பட்ட மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். மாயாவதி முதல் திருமாவளவன் வரை நடக்கிறது ஒரே கதைதான்.

# பழிக்குப் பழி படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்!





இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை காரணமான யுத்தம் சுமார் முப்பது வருடங்களாக இடம் பெற்று வருகின்றது. ஆரம்பத்தில் போராளிகளை முளையில் கிள்ளி விடுவது என்று தொடங்கிய அரச படைகளின் கொலைகள் இறுதியில் தமிழ் மக்களைக் கொன்றழிக்கும் அரச பயங்கரவாதமாக வளர்ச்சி கண்டது. இன்று நாளாந்தம் தரை ஆகாயம் கடல் என்ற மூன்று வழிகளாலும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை ஆயுதப்படைகளை இலக்கு வைத்து தொடங்கப்பட்ட தமிழ் இயக்கங்களின் கொலைகள் பின்பு துரோகிகளையும் சகோதர இயக்க உறுப்பினர்களையும் காவு கொண்டு வந்தது. இன்றும் அந் நிலை தொடர்கிறது.

இப்போது நாலாம் கட்ட ஈழப் போர் என்ற மகுடத்தின் கீழ் விடுதலைப் புலிப் போராளிகள் மட்டும் கொல்லப்படவில்லை. சாதாரண அன்றாட வாழ்வில் ஈடுபட்டிருக்கும் தமிழ் மக்கள் வகை தொகை இன்றியும் குழந்தைகள் சிறுவர்கள் மாணவர்கள் பெண்கள் ஆண்கள் எனக் கோரமாகக் கொல்லப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் அரச தகவல் விபரத்தில் புலிகளாகவே எண்ணிக் கணக்கு வெளியிடப்படுகிறது. இன்று குறிப்பாக ஒவ்வொரு நாளும் வன்னி மீதான விமானத் தாக்குதல் இடம் பெற்ற வண்ணமே உள்ளன. புலிகளின் இலக்குகள் என்று கூறப்பட்ட போதிலும் பொது மக்களே இலக்காக்கப்படுகின்றனர்.

இத்தாக்குதல்களுக்குப் பழிவாங்குவது என்ற நிலையில் தெற்கில் சாதாரண சிங்கள மக்கள் இலக்கு வைத்துக் கொல்லப்படுகின்றனர். பஸ் பிரயாணிகளும் மாணவர்களும் கிராமிய மக்களும் விவசாயிகளும் படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இதனைப் புலிகள் இயக்கம் செய்வதாக நம்பப்படுகிறது.

தேசியவாத நிலைப்பாடு என்பதற்கு மக்கள் என்ற வரையறை இருப்பதில்லை. அது சொந்த இன மக்களையும் சரி, மாற்று இன மக்களையும் சரி மனிதர்களாக மதிப்பதில்லை. இது பெருந் தேசியவாத வெறிக்கும் பொருந்தும். குறுந்தேசியவாத நிலைப்பாட்டிற்கும் பொருந்தக் கூடியதாகும். எந்தவொரு போராட்டத்திலும் மாற்றங்களிலும் மக்களே அடிப்படையான மாபெரும் சக்தியாவர். இதனாலேயே "மக்களே மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி" என மாஓசேதுங் எடுத்துரைத்தார். எனவே எந்தவொரு நீதியான போராட்டமும் சொந்த இன மக்களையே அன்றி மாற்று இன மக்களையோ பழிக்குப் பழி என்ற வகையில் கொன்றழிப்பதை இலக்காகக் கொள்ள முடியாது.

இவ்வாறு யுத்தத்தில் பங்கெடுக்காத அன்றாட வாழ்வில் ஈடுபட்டுள்ள சாதாரண தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இலக்கு வைத்துக் கொல்லப்படுவதும் பழிக்குப்பழி எனக் கூறி படுகொலைகளுக்கு ஆளாக்கப்படுவதும் இரு புறத்திலும் உடன் நிறுத்தப்பட வேண்டும். நீதி நியாயத்தின் அடிப்படையில் மனித நேயத்தின் பேரால் இருபுறத்துப் படுகொலைகளும் தடுத்து நிறுத்தப் படவேண்டும் என்பதே அனைத்து மக்களதும் உரத்த வேண்டுகோளாகும்.

# நீதி மன்றங்களை நாடுவது அதிகரிப்பு

இன்று நீதிமன்றங்களிடம் நியாயம் கோரி குறிப்பாக உயர் நீதிமன்றத்திற்குச் செல்வோரின் தொகை அதிகரித்து வருகின்றது. இவ் வழக்குகளை அவதானிக்கும் போது ஒரு விடயத்தை அவதானிக்க முடிகிறது. அதாவது அரசாங்க நிர்வாகத்தின் அன்றாட செயற்பாடுகள் அனைத்திலும் முறைகேடுகள் நியாயமற்ற நிலைப்பாடுகள் தொடர்கின்றன என்பதேயாகும். குறிப்பாக பொலீஸ் மற்றும் பாதுகாப்புத்துறையினர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் செயற்படும் தன்மையானது அடிப்படை மனித உரிமை மீறல்களாகவே இருக்கின்றன. பட்டப் பகலிலே பலர் முன்னிலையில் கடத்தப்படுவதும் காணாமல் போவதும் இடம் பெறுகின்றன. அவ்வாறு காணாமல் போனோர் பற்றிய எவ்வித தகவல்களும் மாதங்கள் வருடங்களாகியும் தெரியவில்லை. தம்மவர்களை இழந்து தவிப்போர் நீதிமன்றங்களுக்குக் கூடச் சென்று வழக்கிட முடியாத கையிறு நிலையில் இருந்து வருகின்றனர்.

அதேவேளை நாட்டின் உயர் சட்டவாக்க சபை எனப் புகழ்ந்துரைக்கப்படும் பாராளுமன்றத்தின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கே உரிய பாதுகாப்பு இல்லை. அதனால் அவர்கள் உயர் நீதிமன்றம் சென்று அங்கு வழங்கப்பட்ட உத்தரவின் பேரிலேயே பாதுகாப்பைத் தேட வேண்டிய நிலை. அதற்குப் பின்பும் கூட முழுமையற்ற பாதுகாப்பு அற்ற நிலையில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்து வருவதாக அறிக்கைகள் தெரிக்கின்றன.

இந் நிலையில் சாதாரண மக்களின் பாதுகாப்பு நிலவரம் எவ்வளவு மோசமானதாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். வசதி வாய்ப்பு உள்ளவர்கள் ஒரு சிலர் உயர் நீதிமன்றம் சென்று வழக்கிட்டு வாதாடவும் தீர்ப்புப் பெறவும் முடியும். ஆனால் வசதியற்ற பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் அவ்வாறு நீதிமன்றம் செல்ல முடியாது. நமது தலைவிதி இது தான் என்று கூறித் துன்பத்தில் உழல வேண்டியது தான்.

இத்தகைய மோசமான நிலைக்கு ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் மட்டும் காரணம் அல்ல. முதலாளித்துவ ஆட்சியமைப்பும் அதனால் கட்டிக் காக்கப்படும் பொருளதார அரசியல் சமூகப் பண்பாட்டு கட்டமைப்புகளுமே அடிப்படைக் காரணமாகும். இதனை அனைத்து மக்களும் உணரும் அரசியல் விழிப்புணர்வே இன்றைய தேவையாகும்.

# காங்கேசன் சீமேந்து ஆலை இந்தியாவுக்கு தாரை வார்ப்பு

அன்று நாலாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு. தரமான சீமெந்து. நியாயமான விலை. இவ்வாறு தான் காங்கேசன் துறையில் அமைந்திருந்த சீமெந்து தொழிற்சாலை இயங்கி வந்தது. நாட்டின் சீமெந்து தேவையின் கணிசமான பகுதியை காங்கேசன் சீமெந்து ஈடுசெய்தது. 1990ல் இருந்து ராணுவ நடவடிக்கையாலும் யுத்தத்தாலும் அந்த தொழிற் சாலை பாழடிக்கப்பட்டது. தொழிலாளர்கள் ஊழியர்கள் வேலை இழந்து குடும்பங்கள் கதியற்றுப்போயின.

இன்று வலி வடக்கின் பெரும் பகுதி ராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தின் பிடிக்குள் இருந்து வருகிறது. சீமெந்து தொழிற்சாலையும் துறைமுகம் உட்பட அனைத்துமே ராணுவத் தின் கீழ் தான். இத்தகைய மனித நடமாட்டத்திற்கும் தமது சொந்த இருப்பிட வாழ்வுக்கும் மறுக்கப்பட்டிருக்கும் சூழலில் தான் காங்கேசன் துறை சீமெந்து ஆலையை இந்தியப் பெரு முதலாளிய நிறுவனமான பிர்லா குழுமத்திற்கு இலங்கை அர சாங்கம் தாரைவார்த்துக் கொடுத்துள்ளது.

இனிமேல் பிர்லா கம்பனிதான் காங்கேசன்துறை சீமெந்து ஆலையை நடாத்தப் போகிறது. தொழிலாளர்கள், ஊழியர் கள், உற்பத்தி சம்பளம், சீமெந்து விலை நிர்வாகக் கட்டமைப்பு யாவற்றையும் இந்திய பெரு முதலாளித்துவ குழுமமான பிர்லா கம்பனியே வழி நடத்தப் போகிறது. இத் தொழிற்சாலையை அண்டியுள்ள காங்கேசன் துறை துறைமுகமும் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் வந்து கொள்ளும். நாட்டின் வளங்களை அந்நிய பல் தேசியக் கம்பனிக ளுக்குத் தங்கு தடையின்றி அள்ளிக் கொடுத்து வந்த யூ.என்.பி– சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்கங்கள் தொடர்ந்தும் தேச விரோத செயல் களில் ஈடுபட்டு வருகின்றன. யுத்த சூழலில் ராணுவப் பிடியில் உள்ள காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையை இந்தியா விடம் கையளித்துக் கொண்டதில் பேரினவாத மகிந்த ஆட்சிக்கு தகுந்த உள்நோக்கம் இருக் கவே செய்கிறது. இது போன்ற உலகமயமாதல் தனியார்மய நடவடிக்கைகளைத் தான் யுத்தத்தின் மறைவில் இதுவரை செய்து வந்தார்கள். அந்தக் கைங்கரியம் இப்போதும் தொடர்கி றது. அதன் அண்மைய உதாரணமே காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை இந்திய முதலாளித்துவத்திடம் ஒப்படைக்கப்பட்டமையாகும்.

# அமைச்சர்களும் அரிசி மாவும்

**சில மாதங்களுக்கு முன்பு** கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டது. அவ்வேளை சில அமைச்சர் கனவான்கள் மக்க ளுக்குப் புத்தி போதனை நடாத்தினர். குறிப்பாக நுகர்வோர் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனா வாய் புலம்பிக் கொண்டார். மக்கள் கோதுமை மாவின் பாவனையைக் கைவிட்டு அரிசி மாவைப் பயன்படுத்த வேண்டும் என்றார். அதற்குத் தகுந்ததாற் போல் அரிசி மாவைப் பொதி செய்து நியாய விலையில் விநியோகிக்கப்படும் என்றார். மாவும் போச்சு பொதியும் போச்சு மக்களுக்கு கிடைத்தது விலை உயர்வு மட்டும் தான்.

இப்பொழுது விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன என்ன சொல்கிறார். மக்கள் அரிசிப் பாவனையை அதிகளவாகப் பாவித்தபடியினால் தான் அரிசித்தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் என்ற ஒரு புதிய கயிற்றை விட்டிருக்கிறார். என்னே கண்டு பிடிப்பு. இவ் விரு அமைச்சர்களும் சேர்ந்து இனிமேல் மக்கள் கோதுமை மாவையும் அரிசியையும் ஏன் சாப்பிடவேண்டும். மூன்று வேளையும் மரவள்ளிக் கிழங்கைச் சாப்பிட்டால் விலை ஏற்றத்தையும் தடுக்கலாம் உடற்பலத்தையும் பெறலாம் என்று ஆலோசனை கூறினாலும் ஆச்சரியப்பட முடியாது.

நூற்றி இருபது வரையான அமைச்சர்களும் அவர்தம் உறவினர்கள் மற்றும் அவர்களை அண்டிய பரவாரங்களும் சகல வழிகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் தான் அரைகுறை அல்லது முழுப்பட்டினியுடன் வாழ்ந்து வருகின்றனர். இது தான் மகிந்த சிந்தனையின் மகிமையாகும்.

# கருணாநிதியார் ?

**புவி வெப்பத்தை தணிக்க, விழிப்புணர்வை** ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் 2 இளைஞர்கள் உலகப் பயணம் தொடங்குகிற நிகழ்ச்சியை முதல்வர் கருணாநிதி கொடியசைத்து துவக்கி வைத்திருக்கிறார். நிகழ்ச்சியில் பேசிய கருணாநிதி, உலக வெப்பத்தைத் தணிக்க முயற்சி எடுப்பதைப் போலேவே மனித வெப்பத்தை தணிக்கவும் முயற்சி எடுக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார். மனிதர்கள் விடுகிற சிறு அளவு மூச்சுக்கூட புவி வெப்பத்தை அதிகப்படுத்துகிறது என்ற விளக்கத்தையும் கொடுத்திருக்கிறார். அந்த நிகழ்ச்சிக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் தலைமை தாங்கியிருக்கிறார். அதை விடவும் முக்கியமான செய்தி, அந்த இரண்டு இளைஞர்களும் பயணம் செய்ய ஹுண்டாய் கார் கம்பெனி நிர்வாக இயக்குநர் கார் சாவியையும் கொடுத் திருக்கிறார். இடது சாரி தலைவரும் திராவிடத் தலைவரும் உலகமயமாக்க முதலாளியும் சேர்ந்து புவி வெப்பத்தை தணிக்க புறப்பட்டிருக்கிறார்கள்!

ரூ. 4000 ஆயிரம் கோடியில் ஹுண்டாய் கார் கம்பெனியை விரிவுபடுத்த இருப்பதே தமிழக அரசின் புதிய தொழில் கொள்கைகளுக்கு முதலாளிகளிடமிருந்து கிடைத்துவரும் வரவேற்புக்கு சாட்சி என்று ஆளுநர் உரை மகிழ்ச்சி தெரிவிக்கிறது. தமிழக முதல்வர் ஆனந்தப்படுகிறார். ஆனால் அந்த ஹுண்டாய் தொழிற்சாலையில் தொழிற்சங்கம் கூடாது என்கிறது நிர்வாகம். ஆலையில் மயான அமைதியை விரும்பும் நிர்வாகத்தின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடும் தொழிலாளர் முன்னோடிகள் பழிவாங்கப்படுகிறார்கள். ஆலையில் போராட்ட வெப்பம் நாளும் அதிகரித்து வருகிறது. ஆலை வாயிலில் தொழிற்சங்கக் கொடி ஏற்றுவதற்கு கூட நிர்வாகம் தடை போடுகிறது. அந்த அளவுக்கு ஹுண்டாய் நிர்வாகம் விடுகிற மூச்சில் தொழிற்சங்க விரோத வெப்பம், தொழிலாளர் விரோத வெப்பம் அனலாய் கொதி க்கிறது. ஹுண்டாய் நிர்வாகியின் தோள் மீது கை போட்டுக் கொண்டிருக்கும் முதலமைச்சர் அந்த வெப்பத்தை தணிக்க என்ன செய்யப் போகிறார்? கருணாநிதிக்கு மிக நெருக்கமாக இருக்கும் தா. பாண்டியன் தொழிலாளர் விரோத வெப்பத்தை தணிக்க தலைமை தாங்குவாரா?

ஹுண்டாய் ஆலையில் சங்கக் கொடியேற்றுவதை தடுத்து தொழிற்சங்கத் தலைவர் சவுந்தர்ராஜன் உட்பட தொழிலாளர்களை போலீஸ் கைது செய்திருக்கிறது. இதுபற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பாலபாரதி சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கிறார். செய்தி ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன. ஆனால் அந்த செய்திகளில் ஹுண்டாய் தொழிற்சாலையின் பெயர் இடம்பெறவில்லை. பாலபாரதியே ஆலையின் பெயரை சொல்லாமலேயே கேள்வி எழுப்பினாரா? தணிக்கை (பெயரை நீக்கிவிட்டு) செய்து செய்தி தரப்பட்டதா? பத்திரிகைகளே பெயரைக் குறிப்பிடாமல் செய்தி வெளியிட்டு ள்ளனவா? என்பது போன்ற நியாயமான கேள்விகள் யாருக்கும் எழக்கூடும். ஒன்று தெளிவாகிறது. கட்சிகள், அரசாங்கம் தொடங்கி செய்தி ஊடகங்கள் வரை அனைத்து மட்டத்திலும் ஹுண்டாயின் செல்வாக்கு கொடிகட்டி பறக்கிறது.

**நன்றி: மாலெ தீப்பொறி. பெப்ரவரி 2008. சென்னை.**

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டத் தொழிலாளர்களும் கூட்டு ஒப்பந்தமும்

## ஒரு கண்ணோட்டம்

இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரித் தொழிற்சங்கங்களுக்கு ஒரு நீண்ட வரலாறு இருந்து வந்துள்ளது. அதில் தொழிற்சங்க உருவாக்கம் கோரிக்கைகள் போராட்டங்கள் கூட்டு ஒப்பந்தங்கள் வெற்றிகள் என்பனவற்றுடன் தோல்விகள் துரோகங்கள் காட்டிக் கொடுப்புகளும் இடம் பெற்று வந்துள்ளன. இவ்வாறு கம்யூனிஸ்ட் இடதுசாரித் தொழிற்சங்கங்கள் எழுபதுகள் வரை நாட்டின் பல்வேறு தொழிற்துறைகளிலும் தொழிற்சங்கப் போராட்டங்களை நடாத்தி கோரிக்கைகளை வென்றெடுத்த வரலாற்று நிகழ்வுகள் இடம் பெற்று வந்துள்ளன. இவற்றின் நடுவே ஒப்பந்தங்கள் செய்யப்பட்டும் வந்துள்ளன. அவ் வேளைகளில் ஒப்பந்தங்களில் தொழிலாளர்களின் நலன்கள் உரிமைகள் பற்றி மிகக் கவனமாகவும் நுணுக்கமாகவும் ஆராயப்பட்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். உடனடியாக மட்டுமன்றி எதிர்காலத்தில் வரக்கூடிய நாணய மதிப்பிறக்கம். பணவீக்கம் வாழ்க்கைச் செலவின் உயர்வு பொருளாதார வளர்ச்சி வீதம் போன்றனவற்றை கவனத் தில் கொண்ட தூரநோக்குடன் கணிதாம்ச ரீதியில் நோக்கப்பட்டே ஒப்பந்தக் கோரிக்கைகள் அணுகப்பட்டு முன்வைக்கப்பட் டன. தோழர் சண்முகதாசன் போன்ற கம்யூனிஸ்ட் தொழிற்சங் கத் தலைவர்கள் தமது விவேகத் தையும் தந்திரோபாயங்களையும் தூரநோக்கில் கொண்டிருந்தனர். இவை மட்டுமன்றி எச்சந்தர்ப்பத் திலும் முதலாளித்துவ நிறுவனங்களுக்கும் அவற்றின் உரிமையாளர்கள் நிர்வாகிகள் போன்றோருக்கு விட்டுக் கொடுக்கவோ அடிபணியவோ விலைபோகவோ தயாரில்லாத நிலைப்பாடு அண்றைய இடதுசாரித் தொழிற்சங்கத் தலைமைகளால் பின்பற்றப்பட்டு வந்தது. தோழர் சண் தலைமையிலான இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்த செங்கொடிச் சங்கம் உட்பட சகல தொழிற் சங்கங்களும் மேற் கூறிய விதத்திலேயே உறுதியான நிலைப்பாட்டுடன் செயல்பட்டு வந்தன.

இத்தகைய தொழிற் சங்க வரலாற் றுப் பின்புலத்தில் வைத்தே அண்மைய காலகட்டத்தில் தொழிற்சங்க கோரிக்கைகள் போராட்டங்கள் ஒப்பந்தங்களை நோக்க வேண்டியுள்ளது. குறிப்பாக 2007 நவம்பர் மாதத்தில் தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளத்திற்கும் இடையில் ஏற்பட்ட கூட்டு ஒப்பந்தம் பற்றி பார்ப்பது அவசியம். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் மூன்று பெரிய தொழிற்சங்கங்களும் (இ.தொ.கா,- இ.தே.தோ.தொ.ச- தொ.ச.கூ.க.தொ. சங்கங்கள் மற்றும் ம.ம.மு தொ.ச உட்பட தொழிலாளர்களிடமிருந்து சந்தாப் பணத்தைப் பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருந்த வருகின்றன. காலத்திற்குக் காலம் செய்யப்படும் ஒப்பந்தங்களில் பல குறைபாடுகள் உள்ளவையாகவும்- சில சரத்துக்கள் சட்டவலுவற்றவையாவும் இருப்பதை அவதானிக்கலாம். இருக்கும் சுரண்டல் அமைப்புக்குப் பங்கம் விளைவிக்காத அளவிலேயே இவ் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் மூலம் தொழிலாளர்கள் கட்டுப்பத்தப்படுகின்றனர்.

அந்த வகையிலேயே தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றிற்கு 30/= ரூபா அதிகரிப்புடன் மாத வருமானம் ஆகக் குறைந்தது 5000/= என்ற அடிப்படையில் 21 தோட்டக் கம்பனிகளுக்கும் மூன்று தொழிற்சங்களுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட 2007ம் ஆண்டு நவம்பர் முதலாந் திகதி அமுலுக்கு வந்ததாகக் கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தம் கூறுகிறது. இதில் வேடிக்கை என்ன வென்றால் ஜனாதிபதி தலையிட்டு இந்த ஒப்பந்தத்திற்கு வருவதற்கு தோட்டக் கம்பனிகளை நிர்ப்பந்தித்தார் என்றே என்றும் கூறப்படுகிறது. இது ஜனாதிபதியின் கருணை எனத் தோட்டத் தொழிலாளர்களுக்கு காட்டும் முயற்சியுமாகும். ஜனாதிபதி தலையிட்டு தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் கூட்ட முடிந்தது என இந்தத் தொழிற்சங்கங்கள் கூறுவதைப் பார்த்தால் எதிர்காலத்தில் தொழிற்சங்கங்களே தேவையில்லை, அவ்வப்போது ஜனாதிபதியிடம் சென்று மனுக்கொடுத்து உரிமைகளைப் பெற்று விடலாம் என்றே கொள்ளப்படுகிறது. நூற்றாண்டுகளாக உக்கிப்போன தகரங்களையுடைய லயன் வீடுகளை நவீன குடியிருப்புக்களாக்குவதற்கும் அதே ஜனாதிபதியை நாடலாம் தானே. இவ்வாறு தோட்டத் தொழிலாளர்களின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஜனாதிபதியானவர் தீர்வு கொடுப்பாரா? அவர் கொடுத்த தீர்வு நியாயமானதா? பிரச்சினைகளும் தீருமா? இவ்வாறான ஏமாற்றுகள் மூலமே மலையகத் தமிழ் மக்களை வழி நடாத்துகின்ற சகல ஆதிக்க தொழிற்சங்கத் தலைமைகளும் கடந்த அறுபது வருடங்களாக வனாந்தரத்துக்கு இட்டு வந்துள்ளன.

சம்பள நிர்ணய சபைகளை இந்த நாட்டில் ஏற்படுத்துவதில் முன்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் பாரிய பங்காற்றியமை இங்கு அவதானிக்கப்பட வேண்டும். இந்த சம்பள நிர்ணய சபைகளின் தீர்மானத்தின் படி 2007 மே மாதம் முதலாந் திகதி அமுலுக்கு வந்ததன் பிரகாரம் ஒரு தொழிலாளிக்கு ஆகக் குறைந்த சம்பளம் 6000/= ரூபாவாகும்.

2005 ஆகஸ்ட் முதலாந்திகதி அமு லுக்கு வந்த வரவு செலவுத்திட்ட நிவாரண வாழ்க்கைப்படி 1000/= ரூபாவும் சம்பள நிர்ணய சபைக ளின் ஊழியர்களுக்கும் பொருந்தும் வகையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதால் சம்பள நிர்ணய சபையின் கீழ் வரும் ஊழியர்கள் 2007 மே மாதம் முதலாந் திகதியிலிருந்து 6000 ரூபாவை ஆகக் குறைந்த சம்பளமாகப் பெறுகின்றனர். ஆனால் கூட்டு ஒப்பந்தங்களின் கீழ் வரும் ஊழியர்களுக்கு அல்லது தொழிலா ளர்களுக்கு வரவு செலவுத் திட்ட நிவராண வாழ்க்கைப் படி 1000/= ரூபா கிடைக்காதென அதன் 3ம் சரத்தின் 4ம் பிரிவு கூறுகிறது. ஜனாதிபதி தலையிட்டுப் பெற்றுத் தந்ததாகக் கூறப்படும் 2007ம் ஆண்டு கூட்டு ஒப்பந்தத்தில் இந்த 1000 ரூபா சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இலட்சக்கணக்கான தொழிலாளர்க ளைத் தாமே தமது தொழிற்சங்கங்களில் வைத்திருப்பதாகக் கூறிக் கொள்ளும் மலையகத் தொழிற்சங்கத் தலைவர்கள் எவ்வாறு தோட்டத் தொழிலாளர்களை முட்டாள்களாக்கியுள்ளனர் என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர் கட்டளைச் சட்டம் இப்பொழுதும் சட்ட வலுவுள்ளதாகவுள்ளது. அதன் 6வது சரத்தின் படி தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு ஆறு நாள் வேலையும் அல்லது அதற்கு ஈடாக ஆறு நாள் வேதனமும் வழங்க வேண்டும் என்கிறது. அப்படியிருக்கையில் தற்போதைய ஒப்பந்தத்தில் வேலை நாட்களை மட்டுப்படுத்தும் விதிகள் ஏற்கனவேயு ள்ள கட்டளைச் சட்டத்தை மீறும் சட்ட விரோதச் செயலாகும். புதிய ஒப்பந்தம் ஏற்கனவேயுள்ள கட்டளைச் சட்டத்தை மீறுவதற்கான ஒரு அனுமதிப் பத்திரமாகக் கொள்ளப்படல் வேண்டும்.

ஜனாதிபதியின் ஆசியுடன் உருவா க்கப்பட்ட 2007 கூட்டு ஒப்பந்தந்தின் முதலாவது பக்கத்தின் இரண்டாவது பந்தியின் பிரகாரம் "ஊழியர்களுக்கான கொடுப்பனவுப் பொதியை திருத்தம்" செய்வதாகக் கூறுகிறது. அதாவது 19-12-2006 மேற்கொள்ளப்பட்ட 37ம் இலக்க கூட்டு ஒப்பந்தத்தையே திருத்தம் செய்வதாகக் கூறப்படுகிறது. ஆனால் அதே 37ம் இலக்க கூட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்து விட்டதாகவே இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி என்பன சென்ற வருடம் தெரிவித்திருந்தன. ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தத்தை திருத்தம் செய்வதாக புதிய கூட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதானது எவ்வாறு? இது தோட்டத் தொழிலாளர்களை மேலும் முட்டாள்களாகக் கருதிய தொழிற்சங்கத் தலைமைகளின் செயற்படாகும். இதனை தொழிற்சங்க தலைவர்கள் ஏற்றுக் கொண்டமை தொழிலாளர்களை ஏமாற்றி முதலாளிகளுக்கு விலை போனமையாகும். அது மட்டுமன்றி ஜனாதிபதி இதன் மூலம் அத் தலைவர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கிக் கொள்ளவும் வழிவகுத்தது. தொழிலாளர்கள் ஒரே நேரத்தில் வஞ்சிக்கப்பட்டதுடன் ஏமாற்றவும் பட்டனர்.

மலையகத் தொழிலாளர்கள் அரசியல் விழிப்புணர்வுக்கும் புதிய புரட்சிகரத் தலைமைக்கும் முன்வரல் வேண்டும். ஏமாற்று, சலுகை, சுய ஈடேற்றம், ஆதிக்க தலைமைகளுக்கு தரிசனத் துதி பாடல், தேர்தல் பம்மாத்துக்கள் போன்றவற்றுக்கு அப்பால் வர்க்க- இன முரண்பாடுகள் ஒடுக்கு முறைகளை அடையளம் கண்டு புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதையில் அணி திரள வேண்டும். இதுவே கடந்த காலங்களின் தொழிற்சங்க அரசியல் தலைமைகளின் மூலம் கிடைத்த கசப்பான அனுபவங்களைப்பட்டறிவாகக் கொள்வதற்குரிய சந்தர்ப்பமாகும்.

ஞானகரன்

# ஜனாதிபதி விருதும் கௌரவிப்பும் எதற்காக?

அண்மையில் பத்து தொழிற்சங்கத் தலைவர்களுக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்கிக் கௌரவித்தார். அவர்கள் தொழிற்சங்க இயக்கத்தில் ஐம்பது ஆண்டுகள் பணியாற்றியமைக்காகவே அவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவரான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத் தலைவரும் மூத்த தொழிற்சங்கவாதியுமான பாலா தம்பு மேற்படி விருதை நிராகரித்துள்ளார். இது பற்றி அவர் தொழில் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் கடந்த அறுபது ஆண்டுகளாக உழைக்கும் மக்களுக்காக உரிமைக்குரல் கொடுத்து தொழிற்சங்கப் பணியாற்றி வந்துள்ளேன். நான் இதுவரை அரசாங்கத்தால் வழங்கப்படும் எந்தவொரு விருதையும் பெற்றது கிடையாது. எந்தவொரு அரசாங்கத்திற்கும் அடிபணியாமல் சுயாதீனமாக எனது தொழிற்சங்கப் பணியினை முன்னெடுக்க வருகிறேன். அதனால் மேற்படி விருதைப் பெற விரும்பவில்லை என பாலா தம்பு தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஏனையோர் விருதுகளைப் பெற்று ஜனாதிபதியின் பாராட்டுக்களைப் வாங்கினர். முதிய தொழிற்சங்கவாதியான பாலா தம்புவின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.

இந்த தொழிற்சங்கத் தலைவர்கள் ஐம்பது ஆண்டுகள் தொழிற்சங்கத்துறையில் பணி புரிந்தமை மறுக்க முடியாததாகும். ஆனால் இவர்களது பணி தொழிலாளர்கள் ஊழியர்களுக்கு எந்த அளவில் பயன்பட்டது என்பதே சிந்திற்பிற்கு உரியதாகும். இலங்கையில் தொழிற்சங்க இயக்கம் புரட்சி கரமான போராட்டங்களை நடாத்தி வந்திருக்கிறது என்பது வரலாறு கூறும் உண்மையாகும். அவற்றில் நேர்மையாகத் தொழிலாளர்களின் பக்கம் நின்று ஆளும் வர்க்கத்திற்கும் முதலாளிகளுக்கும் வளைந்து கொடுக்காது போராடி வந்த பலர் இன்று மறக்கப்பட்டுள்ளனர். அவர்களை நினைவுபடு த்த ஆளுவோர் விரும்புவதும் இல்லை. ஆனால் அரசாங்கங்களுக்கு துதிபாடும் தொழிற்சங்கவாதிகளே தொழிலாளர் பணி செய்தோராகக் காட்டப்பட்டு மாளிகைகளில் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர். தொழிலாளர்களை ஊழியர்களை மக்களைச் சுரண்டுவோராலும் அடங்கி ஒடுக்குவோராலும் வழங்கப்படும் விருது உண்மையான விருதோ கௌரவிப்போ அல்ல. அது தொடர்ந்து ஆட்சிக்கும் சுரண்டுவோருக்கும் விசுவாசமாக இருந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கும் அடையாளச் சின்னங்களேயாகும். உண்மையான விருதும் கௌரவிப்பும் உழைக்கும் தொழிலாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டும். அதற்குத் தகுதியானவர்கள் எத்தனைபேர் உள்ளனர் என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

இன்றைய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழ் பல்தேசிய நிறுவனங்களும் ஏனைய கம்பனிகளும் முற்று முழுதாகவே தொழிற்சங்க உரிமைகளையும். சம்பள உயர்வு உட்பட தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளும் மறுக்கப்பட்டே வருகின்றன. அரசாங்கம் தொழிற்சங்க இயக்கத்தை முடக்கி வைப்பதில் முன்னின்று செயலாற்றி வருகிறது. அதையும் மீறி தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கும் தொழிற்சங்கங்களுக்கு நீதிமன்றம் மூலம் தடைகளும் முட்டுக்கட்டைகளும் விதிக்கப்படுகின்றன. இவையாவும் அரசாங்கத்தின் வழிகாட்டிலிலேயே நடைபெறுகின்றன. இவ ற்றை எல்லாம் மூடி மறைக்கவே தமக்கு முட்டுக் கொடுக்கும் தொழிற்சங்கத் தலைவர்கள் என் போருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்று தொழிற்சங்கங்களுக்கும் அதன் தலைமைகளுக்கும் முன்னால் உள்ள பணி அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுப்பதோ நியாயப்படுத்துவதோ அல்ல. மாறாக நாளந்தம் சகல நிலைகளிலும் உரிமைகளை இழந்து வாழ்க்கை நெருக்கடிகளை எதிர்நோக்கி நிற்கும் தொழிலாளி வர்க்கத்திற்காகப் போராட வேண்டிய பொறுப்பை ஏற்பதாகும். இதற்கு பழைய தொழிற்சங்கத் தலைமைகள் ஒரு போதும் முன்வரப் போவதில்லை. எனவே புதிய தலைமுறைகள் பொறுப்பேற்று முன் செல்லத்தயாராக வேண்டும்.

~கந்தசாமி~

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 15 மார்ச் 2008 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 111
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# ஜே.வி. பி யின் இந்திய எதிர்ப்பு பேரழிவைக் கொண்டு வரும்

ஜே.வி.பி மீண்டும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான மாகாணசபை திட்டத்தை வடக்கு கிழக்கில் மீண்டும் அறிமுகம் செய்வதற்கான அழுத்தத்தை மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு கொடுத்து வருவதாக குற்றஞ்சாட்டும் ஜே.வி.பி இந்தியாவுக்கு எதிராக செயற்படப்போவதாக அறிவித்துள்ளது. இதுவரை காலமும் மேற்குலகத்திற்கு எதிரான கண்ணாடியை போட்டுக்கொண்டு அரசியல் செய்துவந்தது போன்று தற்போது இந்திய எதிர்ப்பு கண்ணாடியை போட்டுக்கொண்டு அரசியலைத் தொடர்ந்து முன்னெடுக்கப் பார்க்கிறது.

1971 ஆம் ஆண்டு இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிராக போராடப்போவதாகக் கூறிக்கொண்டு ஜே.வி.பி யினர் அவர்களது கிளர்ச்சிக்கு அடிப்படையாக நடத்திய ஐந்து வகுப்புகளில் ஒன்று இந்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளியினருக்கு எதிராகவே அமைந்தது. குறிப்பாக மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இந்தியத் தமிழ் வியாபாரிகளுக்கும் எதிராக செயற்பட்டது.

1988 முதல் ஜே.வி.பி யினர் இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்திற்கு எதிராக செயற்படுவதாகக் கூறிக்கொண்டு நடத்திய ஆயுத கிளர்ச்சியில் இந்திய வியாபாரிகளும், மாகாண சபையை ஆதரித்த இடதுசாரி தலைவர்களும் சுட்டுக் கொலைப் பட்டனர். கணிசமான தேயிலைத் தோட்டத் தொழிற்சாலைகள் எரிக்கப்பட்டன. அதிகமான தோட்டத்தொழிலாளர்களின் தேசிய அடையாள அட்டைகளை ஜே.வி.பி யினர் பறித்து எரித்தனர்.

இந்தியாவின் தலையீட்டினால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட மாகாணசபைகளை (ஏனைய இடங்களில் இயங்குகின்றன) வடக்கு கிழக்கில் இயங்க வைக்கப்போவதாக ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கம் கூறுவதை எதிர்க்கின்றனர். அவர்கள் இந்திய ஆளும் வர்க்கத்தினரின் விஸ்தரிப்புவாதம், மேலாதிக்கம் போன்றவற்றுக்கு எதிரிகளா? இந்திய முதலாளிவர்க்கம் இலங்கையின் பெற்றோலிய வர்த்தகத்தில் ஏகபோகம் புரிவதை எதிர்க்கவில்லை. கிழக்கில் திருகோணமலையில் இந்தியா அனல்மின் நிலையத்தை நிர்மாணிக்கவிருப்பதை எதிர்க்கவில்லை. திருகோணமலை துறைமுகத்திற்கருகில் இருக்கும் எண்ணெய்க் குதங்களை இந்தியா பெற்றுக் கொண்டதை எதிர்க்கவில்லை. இலங்கையின் தேயிலை வர்த்தகத்தில் இந்திய ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டதையும் எதிர்க்கவில்லை. ஊடகங்களினூடாக சீரழிந்த 'இந்திய சினிமாப் பண்பாடு' இலங்கை மக்களை சீரழிப்பதை எதிர்க்கவில்லை. தனியார் கல்வி, மருத்துவத்தில், வாகன வியாபாரத்தில் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்க்கவில்லை. சேதுசமுத்திரத்திட்டத்தை எதிர்க்கவில்லை. இவை ஏன் என்பது கேள்விகளாகும்.

மாகாணசபை என்பது சாதாரணமான அதிகாரங்களை மாகாணங்களுக்கு 'பரவலாக்கும்' முறை ஆகும். தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை எவ்வகையிலும் பூர்த்தி செய்யாத, சிங்களமக்கள் விரும்பாத, மலையகத் தமிழ் மக்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ எவ்வித பிரத்தியேக ஏற்பாட்டையும் கொண்டிராத அம்முறை இந்திய ஆளும் வர்க்கத்தினர் ஜனாதிபதி ஜே. ஆரின் அரசாங்கத்தினூடாக இலங்கை மீது திணிக்கப்பட்டதாகும். 1987 இல் அதனை எதிர்த்த ஜே.வி.பி யினர் பின்பு அதற்கான தேர்தல்களில் போட்டியிட்டு அவற்றில் பல உறுப்பினர்களை கொண்டுள்ளனர். எனினும் அது வடக்கு கிழக்கில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்ற ஜனாதிபதி மஹிந்த மீது இந்திய அழுத்தம் இருப்பதாக கூறிக்கொண்டே தற்போது இந்திய எதிர்ப்பை ஜே.வி.பி முன்னெடுக்கிறது.

1988, 1989 காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவு, உடை, மருந்து பொருட்களை பகிஷ்கரிக்கும் இயக்கத்தை ஜே.வி.பி முன்னெடுத்தது அதனால் பாதிக்கப்பட்டது சாதாரண மக்களே. தற்போதும் அதே மாதிரி ஒரு இயக்கத்தை முன்னெடுக்கப் போவதாக கூறுவது அவர்களின் சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாட்டின் இன்னொரு நிகழ்ச்சியாகவே கொள்ள வேண்டி இருக்கும்.

ஜே.வி.பி யின் இந்திய எதிர்ப்பு என்பது சாதாரண இந்திய மக்களையும் விரோதிகளாக்கும். இலங்கையின் பௌத்த சிங்கள தேசிய வெறியை அடிப்படையாகக் கொண்டதுமாகும். இந்திய ஆளும் வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரல் எவ்வாறு இந்தியாவின் சாதாரண மக்களுக்கு எதிரானதோ அதே போன்று இலங்கை மக்களுக்கும் நாட்டிற்கும் தீங்கு பயப்பனவாகவே இருக்கும் என்பதில் இரண்டு பேச்சுக்கு இடமிருக்காது. இது மேலாதிக்க ஏகாதிபத்திய மக்கள் விரோத கொள்கைகளை கொண்ட நாடுகளின் ஆளும் வர்க்கத்தினருக்குப் பொருந்தும்.

காலத்திற்கு காலம் மேற்குலக எதிர்ப்பையும் இந்திய எதிர்ப்பையும் ஜே.வி.பி அதன் அளவுக்கு ஏற்ப பம்மாத்தாகச் வந்துள்ளது. அதில் உண்மைத் தன்மை இருந்ததில்லை. மேற்கு எதிர்ப்பை முன்னெடுக்கும்போது அதன் மூலம் இந்திய ஆளும் வர்க்கத்தினருக்கும், இந்திய எதிர்ப்பை எடுக்கும் போது மேற்குநாட்டு ஆளும் வர்க்கத்தினருக்கும் சேவை செய்து வருகிறது. இவற்றுக்குப் பின்னால் கொடுக்கல் வாங்கல்கள் இருந்தும் வந்தன.

எமது நாட்டின் இனப்பிரச்சினையில் மேற்கு நாடுகளும், அமெரிக்காவும், ஜப்பானும், இந்தியாவும் தற்போது செலுத்திவரும் செல்வாக்கை அறிவோம். இராணுவ ரீதியாக இந்தியா, சீனா, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு உதவி வருவதை அறிவோம். அவற்றின் பிடியிலிருந்து இலங்கை நாடும் மக்களும் சுதந்திரமடைய வேண்டுமெனில் தமிழ் மக்களினது தேசிய அபிலாஷைகளை உறுதிசெய்யும் அடிப்படையிலான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அதை விடுத்து இங்கு இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போது உயிர் சொத்து அழிவுகள் இடம்பெறுவதுடன், ஜனநாயக, மனித உரிமை மீறல்களும் இடம்பெற்று நாட்டு மக்கள் மீது பாரிய பொருளாதார சுமை சுமத்தப்படும். அரசியல் ஸ்திர மற்ற நிலையே நீடிக்கும்.

அத்துடன் ஜே.வி.பி யின இந்திய எதிர்ப்பில் மாட்டிக் கொண்டு 1971, 1988–1989 இலும் சிங்கள மக்கள் எதிர் கொண்ட அழிவுகள் போதும். இனியும் அழிவுக்கு இடம் வைக்காது ஜே.வி.பியினது இந்திய எதிர்ப்பு சந்தர்ப்பவாத அரசியலை சிங்கள மக்கள் நிராகரிக்க வேண்டும்.

இந்திய ஆளும் வர்க்கம் இலங்கையின் தமிழ்மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்காததுடன் பொதுவாக இந்திய (காஷ்மீர், பஞ்சா போன்றன தவிர்ந்த) மாநிலங்கள் கொண்டிருக்கும் அதிகாரங்களை விட அதிகமானவை இலங்கைத் தமிழ் மக்களுக்கு உறுதி செய்யப்படுவதை ஏற்கவும் மாட்டாது.

இதனை புரிந்து கொண்டால் ஜே.வி.பியின் சந்தர்ப்பவாத அரசியல் இலங்கையின் தேசிய இனங்களிடையே மேலும் பிளவுகளையும் ஐக்கியமின்மையையுமே தோற்றுவிக்கும். அது அதற்கு தற்காலிகமாக லாபத்தை தரலாம். மக்களுக்கும் நாட்டிற்கும் பாரிய அழிவுகளையே தரும்

-ஆசிரியர் குழு-

# வடக்கே ஆலோசனைச் சபை கிழக்கே மாகாண சபை தீர்வாகுமா?

வெகுஜனன்

மகிந்த சிந்தனையின் போர் மேகங்கள் வடக்கில் நான்கு யுத்த முனைகளில் குண்டு மழை கொட்டி வருகின்றன. ஈழப் போரின் நான்காம் கட்டம் என்று அரசியல் ராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டும் மேற்படி போர் தேசிய இனப் பிரச்சினைக்கான இறுதிப் போராக இருக்கும் என்றே ஜனாதிபதியும் ராணுவத் தளபதியும் பாதுகாப்புச் செயலாளரும் போர்ப் பறை அறைந்து வருகின்றனர். முகமாலை, மன்னார், வவுனியா, மணலாறு ஆகிய போர்க்கள முனைகளில் நாளாந்த மோதல்கள் உக்கிரமாக இடம் பெற்று வருகின்றன. இந்த வருடத்தில் வன்னியைக் கைப்பற்றி விடுவோம் எனக் கூறிய அரசாங்க ராணுவத்தரப்பு அதன் கால எல்லையை அடுத்த வருடத்திற்கு நீடிப் போட்டுள்ளது. சிலவேளை 2010ம் ஆண்டுக்கும் நீண்டு கொள்ளலாம். அல்லது இக் காலக்கெடு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரைக்கும் கூட நீளலாம். யாவற்றிலும் ஆட்சி அதிகார இருப்பே அடிப்படையானதாகும்.

இத்தகைய போர் மும்மரத்தின் மத்தியிலேயே இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வாக அரசியலமைப்பிற்கான 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முடிவை ஜனாதிபதி சில வாரங்களுக்கு முன்பு அறிவித்திருந்தார். அதுவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொலீஸ் அதிகாரம் காணிப்பங்கீடு, வெளி உதவி பெறல் போன்ற பிரதான விடயங்கள் வழங்கப்படமாட்டாது என்றும் கூறப்பட்டது. அதாவது 13வது திருத்தச் சட்டத்தில் தமக்கு ஏற்றதும் பேரினவாத நிலைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்காததுமானவற்றை முன்வைப்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

அதன் அடிப்படையிலேயே கிழக்கிற்கு மாகாண சபையும் வடக்கிற்கு இடைக்கால சபையும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ஒரு சில நாட்களின் பின் வடக்கிற்கு இடைக்கால சபை அல்ல வெறும் ஆலோசனைச் சபை எனச் சுருக்கப்பட்டது. இம்மாதம் 10ம் திகதி கிழக்கில் நடாத்தப்படும் வேடிக்கையான உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்பே கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்றே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளூராட்சித் தேர்தல் வெறும் பம்மாத்து த்தனமானதாகும். துப்பாக்கிகளின் துரைத் தனத்தின் கீழேயே அங்கு தேர்தல் இடம் பெறுகின்றது. மக்கள் தமக்குள்ள பலமுனை இடர்கள் மத்தியில் வாக்களிக்கும் படி அதுவும் ஆயுததாரிகளின் விருப்பப்படி புள்ளடி இடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனக் கூவி நிற்கும் அரசாங்கம் அதே பயங்கரவாத செயற்பாடுகள் மூலமாக உள்ளூராட்சித் தேர்தலை நடாத்தி வெற்றி வாகை சூட நிற்கிறது. இது அமெரிக்க நிலைப்பாட்டின் அடியொற்றலாகும். "தனக்கு எதிரானதாயின் அது பயங்கரவாதம். அதே விடயம் தனக்கு ஆதரவானதெனில் அது ஜனநாயகம்" இது மகிந்த சிந்தனையின் போர்க்கால நடைமுறையாகும்.

இன்று கிழக்கில் நடாத்தப்படும் உள்ளூராட்சித் தேர்தல் லட்சணத்தில் தான் அடுத்து வரும் எனக் கூறப்படும் மாகாண சபைத் தேர்தலும் இடம் பெறப்போகின்றது. தேர்தலில் பங்கு கொள்வதற்கு அங்கீகரிக்கக் கூடிய ஒரு அரசியல் கட்சிக்குரிய தகமைகளில் ஒன்றாக அக் கட்சி சட்ட விரோத ஆயுதங்களை எவ்வளவிற்குக் கொண்டிருக்கின்றன என்பதும் முக்கிய கவனிப்பிற்குரிய ஒன்று என்றே நம்ப முடியும். அதுவும் அத்தகைய ஒரு கட்சி ஆளும் அரசாங்கத்தின் ஆதரவு பெறுவதும் ஒரு முன் நிபந்தனையாகும்.

நடைபெறுகிறது. கிழக்கு மீட்பு எனபதிலும் கிழக்கின் உதயம் நிகழ்ச்சி நிரலிலும் மேற் கூறிய உள் நோக்கங்களே இருந்து வருகின்றன. இதற்கு தமது ஆதிக்கம் அரசியல் செல்வாக்கு சொத்து சுகம் பதவி பட்டங்கள் போன்றவற்றுக்காக தமிழ் முஸ்லீம் அமைப்புகளும் தலைமைகளும் விலை போய்க் கொண்டிருக்கின்றனர்.

கிழக்கை இவ்வாறு கையாளும் மகிந்த சிந்தனை அரசாங்கம் வடக்கை யுத்தத்தின் ஊடாகக் கையாண்டு வருகிறது. அங்கே உடனடியாக மாகாணசபை இல்லை என்றும் முழுமையாக வடக்கு விடுவிக்கப்பட்ட பின்பே அது சாத்தியம் என்றும் கூறப்படுகிறது. அது வரை வடக்கில் இடைக்கால சபையை நடை முறைப்படுத்துவது என்றே ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் அதிலும் நம்பிக்கையற்று ஆளுனருக்கு ஆலோசனை வழங்கும் வெறும் ஆலோசனைச் சபை என்றே இப்போது பேசப்படுகிறது. அதை அமைப்பதிலும் ஆளுனரை நியமிப்பதிலும் தயக்க நிலையே இருந்து வருகிறது. ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு பங்க மேற்படுத்தாத நம்பகத் தன்மையுடைய விசுவாசம் மிக்க தமிழ்க் கனவான்களைக் கண்டு பிடிப்பதிலே இப்போது முழுக் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. இதில் போட்டியும் இழுபறிகளும் ஆளை ஆள் நிராகரிப்பும் இருந்து வருவதாகவே செய்திகள் அடிபடுகின்றன.

கிழக்கு மாகாண மக்கள் பல்வேறு அன்றாடப் பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கின்றனர். இரண்டு லட்சத்திற்கு மேல் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் அல்லலுற்ற மக்கள் உரியவாறு மீள் குடியமர்வுக்கு உள்ளாக்கப்படவில்லை. குடி யேற்றப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகளும் பாதுகாப்பான உயிர் வாழ்தலும் தொழில் செய்தல்களும் கிடைக்கவில்லை. வாக்காளர் பதிவுகள் கூட முறைப்படி இடம் பெறவில்லை. யாவற்றுக்கும் மேலாக சுதந்திரமாக வாய் திறந்து கருத்துக் கூற முடியாத துப்பாக்கிகள் சூழ்ந்த அச்ச சூழல் நிலவுகிறது. கொலைகள் ஆட்கடத்தல்கள் தாக்குதல்கள் போன்றன மத்தி யிலேயே நாட்களை கிழக்கு மக்கள் கழிக்க வேண்டி யுள்ளது. தமிழ் மக்கள் பிளவுபடுத்தப்பட்டு ஆயுதக் குழுக்களுக்கு முன்பாகவும் அரசாங்க ஆயுதப்படைகளின் முன்னிலையிலும் பேசா மனிதர்கள் ஆக்கப்பட்டுள்ளனர். அதேவேளை தமிழ் முஸ்லீம் மக்களிடையே மோதல்களை உருவாக்கி அதில் குளிர்காய்ந்து கொள்வதும் தூண்டப்பட்டு வருகின்றது. இவற்றினிடையே பேரினவாத சக்திகளின் திட்டமிட்ட நிலப்பறிப்புகளும் ஆக்கிரமிப்புகளும் கிழக்கில் இடம் பெறுகின்றன. இதில் தமிழ் முஸ்லீம் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கிழக்கைச் சிதறடித்து தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற தனித்துவத்தை இல்லாதொழிப்பதே பேரினவாத ஆளும் முதலாளித்துவ ஆட்சியின் தொடர்ச்சியான நோக்கும் போக்குமாக இருந்து வந்துள்ளது. அதன் தொடர்ச்சி தான் இன்றும்

இவை அனைத்தையும் பதின் மூன்றாவது திருத்தச்சட்டத்திற்கு உட்பட்டதாக முன்னெடுப்பதாகவே அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது. இருப்பினும் இவற்றில் தமக்கு மனப்பூர்வமான கருத்தொற்றுமை இல்லை என்றே அண்மையில் கூட ஜனாதிபதி கருத்துக் கூறியதாக ஊடகங்கள் தெரிவித்தன. அதற்கு மேலாக நிர்ப்பந்த சூழலில் கிழக்கிற்கு மாகாணசபை என்பதும் வடக்கிற்கு ஆலோசனைச் சபை என்பதும் யுத்தமாக்கப்பட்டுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்வகையிலும் தீர்வாகாது எனபது மட்டும் உறுதியானதும் யதார்த்த மானதுமாகும்.

# ஜே. வி. பி. யின் எதிர்ப்பும் அனுபவிப்பும் இந்திய எதிர்ப்பு வாந்தி!

இப்பொழுது ஜே.வி.பியினர் மீண்டும் 13ம்வது திருத்தத்திற்கெதிரான போர்க் கொடியைத் தூக்க ஆரம்பித்துவிட்டனர். 1987-89 காலகட்டித்தில் 13வது திருத்தச் சட்டத்தையும் மாகாணசபையையும் எதிர்த்து ஆர்ப்பரித்தது மட்டுமின்றி கொலைகள் வன்செயல்களிலும் ஈடுபட்டனர். பின்பு அதே சட்டத்தின் கீழ் உருவான மாகாண சபைகளில் அங்கத்தவர்களாகி கோடிக்கணக்கில் இலாபம் பெற்றுள்ளனர் என்பது தான் வேடிக்கையாகும். ஜே.வி.பியின் அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கு இதைவிட வேறு உதாரணம் இருக்க முடியாது.

அன்று 13 வது திருத்தத்தை எதிர்ப்பதென்ற பெயரில் 1987- 1989ல ஜே.வி.பி யினர் 6577 பேர்களைக் கொலை செய்தனர் என்றும் அதில் 500பேர் ஆயுதப்படையினரென்றும் அரசாங்கப் புலனாய்வு அறிக்கை கூறுகிறது. இன்று புலிகளின் தாக்குதல்களைப் பற்றிக் குறிப்பிடும் போது "வீரம் மிக்க இராணுவ வீரர்களை" அவர்கள் கொல்வதாக ஜே.வி.பி கூறுகிறது. புலிகள் 30 வருடங்களில் செய்ததாக கூறப்படும் அழிவுகளை ஒப்பிட்டால் ஜே.வி.பி யினர் சில வருடங்களில் செய்த அழிவுகளே மிக மோசமானவை. அரச பொதுச் சொத்துக்களையும் ஜே.வி.பியினர் நாசமாக்கினர். அவற்றுள் 613 இ. போ. ச பஸ்கள், 16 இ. போ. ச டிப்போக்கள், 16 புகையிரதங்கள் 73 தேயிலைத் தொழிற்சாலைகள், 680 தாபால் நிலையங்கள், 8 பாடசாலைகள் என்பனவும் அடங்கும். இத்தனை அழிவுகளைச் செய்தவர்கள் இன்று புனிதர்களாய் மதத்தலைவர்களிடம் மண்டியிடுகின்றனர். இன மத வெறியர்களாகி இனவாத விஷம் கக்குகின்றனர்.



13வது திருத்தச் சட்டத்தை மூர்க்கத்தனமாக எதிர்க்கும், ஜே.வி.பினர் அந்தச் சட்டத்தின் பயனாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளில் அங்கத்தவர்களாகி பல சுகபோகங்களை அனுபவிக்கின்றர்.

ஒரு மாகாண சபை உறுப்பினர் ரூ29, 000/= சம்பளத்துடன், எரிபொருள் அலவன்சாக ரூபா 7, 000/= பெறுகிறார். அது மட்டுமல்லாமல 16,000/= டொலர் பெறுமதியான சொகுசு வாகன மொன்றை சுங்கத் தீர்வையின்றிப் பெற்றுக் கொள்கிறார். உபசாரச் செலவுக்காக ரூபா 10, 000/= அலவன்சுக்கும் உரித்துடையவர். இதை விட ஒரு செயலாளரையும் வாகன ஓட்டுனரையும் ஒரு சிற்றூழியரையும் அரச செலவில் நியமிக்கக் கூடியதாயுள்ளது. இத்தனை வசதிகளையும் ஜே.வி.பி உறுப்பினர்கள் அனைவரும் அனுபவிக்கின்றனர். இன்று 72 ஜே.வி.பி மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுக்கான 72 செயலாளர்களையும் வாகன ஓட்டுனர்களையும், சிற்றூழியர்களையும், தொலைபேசி இணைப்புகளையும் [illegible] பெறுகின்றனர். தற்போது மாகாண சபை அங்கத்தவர்களாகவுள்ளவர்கள் 2004 தேர்தலில் வென்றவர்கள். கடந்த 31 மாதங்களில் ஜே.வி.பியின் உண்டியலுக்கு எவ்வளவு சேர்ந்திருக்கும் என்று பார்ப்போம். 72 பேருடைய சம்பளம் அலவன்ஸ் எல்லாமாக மாத மொன்றிற்கு 33 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் தேறும். 31 மாதத்தில் அது 10 கோடி 37 இலட்சமாகும். 72 மாகாண சபை உறுப்பினரின் வாகனங்கள் ஒவ் வொன்றும் 16000 டொலர்வீதம் வரிவிலக்கு என்பன மூலம் ஜேவிபியின் 11 கோடி 72 இலட்சம் ரூபாயை விழுங்கியுள்ளனர். எந்த 13வது சரத்தை வேண்டாமென்கிறார்களோ அதே சரத்தின் பயனாக அவர்களுக்கு இந்த வரப்பிரசாதம் கிடைத்துள்ளது. இது ஜே.வி.பியின் இரட்டை வேடத்தை அம்பலமாக்குகின்றது.

13வது திருத்தம் தமிழ் மக்களுக்குரிய ஆகக் குறைந்தபட்ச உரிமைகளைக் கூட உறுதி செய்ய முடியாதவாறு பார்த்துக் கொள்வதில் ஜனாதிபதி கவனமாக இருந்து வருகிறார். ஆனால் ஜே.வி.பியோ அதற்கும் மேலாக வரிந்து கட்டி எதிர்த்து நிற்கிறது. மேலே கூறிய விபரங்களின் படி வடக்கு கிழக்குத் தவிர்ந்த மாகாணங்களில் மாகாணசபைகளில் பங்கு கொண்டு சகபோகம் அனுபவிக்கும் ஜே.வி.பி தமிழர் பிரதேசங்களுக்கு மட்டும் அதிகாரப் பரவலாக்கல் சிறு அளவில் கூட வழங்கக் கூடாது என்பதிலேயே வெறி கொண்டு நிற்கிறது. ஜே.வி.பி யின் அரசியல் தளம் தொழிலாளர் இளைஞர்கள் அல்ல பேரினவாத வெறி கொண்ட சக்திகயே யாவர். முன்பு என்றும் இல்லாதவாறு ஜே.வி.பி. உட்பூசல்களால் முட்டி மோதும் நிலைக்கு வந்துள்ளது. அதேபோன்று சிங்கள மக்கள் மத்தியிலும் ஜே. வி. பியின் போலி வேஷம் கலைந்தும் வருகின்றது. இவற்றை மறைக்க ஜே.வி.பி இனவாதத்தினுள் மேன் மேலும் அமிழ்ந்து வருகிறது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை மீண்டும் வடக்கு கிழக்கில் நடைமுறைக்கு கொண்டு வருவது பற்றி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பரிந்துரை பற்றி ஆலோசிக்க ஜனாதிபதி முன வந்திருக்கிறார். இதனை கர்ணகடூரமாக எதிர்த்து ஜே.வி.பி சண்டமாருதம் கிளப்பப் போவதாகக் கூறி வருகின்றது. அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற ஜே. வி. பி யின் பொதுக் கூட்டத்தில் அதன் தலைவர் சோமவன்சா அமரசிங்க இந்தியத் தலையீட்டிற்கு எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து உரையாற்றியுள்ளார். இந்தியா மீண்டும் இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வற்புறுத்த ஆரம்பித்திருக்கிறது என்றும் இது நமது உள் விவகாரங்களில் தலையிடும் போக்காகும். எனவே இந்தியா இலங்கை மீது ஆதிக்கம் செய்வதை அனுமதிக்க முடியாது என்றும் ஜே.வி.பி தலைவர் தெரிவித்திருக்கிறார். தமது எச்சரிக்கையையும் மீறி இந்தியா தலையிட்டால் மீண்டும் இந்தியப் பொருட்களைப் பகிஷ்கரிக்கும் படி மக்கள் மத்தியில் இயக்கம் நடத்த வேண்டி ஏற்படும் என்ற அபாய அறிவிப்பையும் கொடுத்துள்ளார்.

முன்பு இந்தியாவை எதிர்த்து முழங்கி வந்ததுடன் 87- 89 கால கட்டத்தில் இந்தியப் பொருட்களைப் பகிஸ்கரித்துக் கொள்ளுமாறு மக்களைத் தூண்டியவர்கள் ஜே.வி.பி யினர். இவர்களது முட்டாள் தன முடிவை சிங்கள மக்கள் அன்று ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் ஆயுத முனையில் தமது நிலைப்பாட்டைத் திணித்தனர். பின்பு எடுத்த வாந்தியைத் திருப்பிச் சாப் பிட்டது போன்று இந்திய ஆதரவு நிலைப்பாட்டிற்கு வந்து துதி பாடினர். இந்தியப் பயணங்களைச் செய்து "றோ" அதிகாரிகள் உட்பட உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்து விசுவாசம் தெரிவித்து வந்தனர். இந்தியப் பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஜே.வி.பி. யை ஒரு இடதுசாரிக் கட்சி என ஏமாந்து கட்டியணைத்தனர். நேர்மையான மாக்சிச லெனினிசவாதிகள் ஜே.வி.பியின் சுய ரூபம் பற்றிக் கூறியதை அவர்கள் காதில் வாங்கவில்லை. ஆனால் இப்போது ஜே.வி.பி யின் இனவாதத்தையும் போலி இடதுசாரி வேடத்தையும் புரிந்து கொண்டதால் போலும் எதிர் வரும் மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் கோயபுத்தூர் தேசிய மாநாட்டிற்கு ஜே.வி.பி க்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதனால் ஜே.வி.பி கடும் விசனம் அடைந்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட இந்தியா நோர்வேயின் பின்னால் இருந்து செயற்பட்டது என்ற அண்மைய செய்திக் கசிவும் தற்போதைய 13வது திருத்தச் சட்ட நடைமுறைக்கு இந்தியா அழுத்தம் கொடுத்து வருவதும் ஜே.வி.பி யின் வயிற்றுப் புண்ணில் புளி விட்டது போலாகியுள்ளது. எனவே மீண்டும் இந்திய எதிர்ப்பு வாந்தி எடுக்கத் தயாராகிறிருக்கிறது.

ஜே.வி.பி நேர்மையான இடதுசாரி மக்கள் சார்பு நிலையில் இருந்து இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பதானால் அது வரவேற்க வேண்டியது. அதை விடுத்து தனது பேரினவாத வெறித்தனத்திற்கும் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் அரசியல் தீர்வாக வருவதைத் தடுப்பதற்கும் குறுகிய அரசியல் சந்தர்ப்பவாதமாக இந்திய எதிர்ப்பை முன்வைப்பது எவ் வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

உலகமயமாதலையும் ஏகாதிபத்திய உலக மேலாதிக்கத்தையும் பிராந்திய மேலாதிக்கத்தையும் எதிர்ப்பது அவசியம். அதற்கு முதல் படி அத்தகைய அந்நிய சக்திகள் நாட்டிற்குள் ஊடுருவிக் கொள்வதற்குக் காரணமாக உள்ள பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதாகும். அதற்குரிய நியாயமான கொள்கை முன் வைக்காத ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்லது இந்திய மேலாதிக்க எதிர்ப்பு என்பது எதிர் நிலையில் அச் சக்திகளை ஊடுருவிக் கொள்ள வழிவகை செய்து கொடுப்பதகாவே அமையும். பேரினவாத வெறி கொண்டு அதன் மீதே பாராளுமன்ற வெற்றிக்கு தங்கியிருக்கும் ஜே.வி.பி.க்கு ஒரு போதும் மக்கள் சார்பு அரசியல் மண்டையில் ஏறிக் கொள்ளமாட்டாது. சிங்கள மக்கள் தான் தமது சரியான அரசியல் நிலைப்பாட்டால் ஜே.வி.பி க்கு உரிய பாடத்தைப் புகட்ட முடியும்.

**சபா**

## கொலைகார சர்வதிகாரி சுகாட்டோ

அண்மையில் இந்தோனியாவின் முன்னாள் ஜனாதிபதி சுகார்ட்டோ தலை நகர் ஜகார்த்தாவில் காலமானான். 32 வருட ராணுவ சர்வாதிகாரத்தையும் மோசமான ஊழலையும் முன்னெடுத்த சுகாட்டோ அமெரிக்க அடிவருடியும் விசுவாசியுமாவான். இந்தோனேசியா இருபது கோடி மக்களைக் கொண்ட நாடு. சுமார் 17,000 தீவுகளை உள்ளடக்கிய அந் நாட்டின் நீளம் 3500 மைல்களாகும். 300 இனங்களும் 250 மொழிகள் பேசும் மக்கள் அந்நாட்டில் வாழ்கின்றனர். டச்சுக் கொலனித்துவவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்த இந்தோனேசிய மக்கள் தமது முதலாவது தேசியத் தலைவராக டாக்டர் சுகர்ணோவை முதலாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர். நாட்டுப் பற்றும் மக்கள் சார்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் சுய சார்புப் பொருளாதாரக் கொள்கையும் கொண்ட சுகர்ணோ அந்நாட்டின் பலம் மிக்க கம்யூனிஸ்ட் கட்சியை நட்பு சக்தியாக்கி ஆட்சி நடாத்தினார். அவரது அமைச்சரவையில் ஐந்து கம்யூனிஸ்ட் தலைவர்கள் அமைச்சர்களாக இருந்தனர். தொழிலாளர் விவசாயிகளின் வாழ்க்கை மாற்றத்திற்கு சுகர்ணோவின் ஆட்சியில் அங்கம் பெற்று சாதிக்கலாம் என நம்பிக்கை வைத்தே கம்யூனிஸ்டுக்கள் செயலாற்றினர். ஆனால் முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் வழமை போன்று ஆட்சிக் கவிழ்ப்பைச் செய்து ராணுவச் சதியை நிறைவேற்றியது.

ராணுவ உயர் அதிகாரிகளை இரகசியமாக அணிதிரட்டிய அமெ ரிக்காவும் சி.ஐ.ஏயும் சுகாட்டோவைப் பயன்படுத்தியது. கம்யூனி ஸ்டுக்கள் சதி செய்கிறார்கள் என்று பொய் பரப்பி ராணுவ அதிகா ரத்தைக் கைப்பற்றியதுடன் ஓரிரு வாரங்களில் ஐந்து வடசத்திற்கு மேற்பட்ட கம்யூனிஸ்டுக்கள் ஆதரவாளர்கள் ஜனநாயக சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய வாதிகளைக் கொன்றழித்தான் சுகாட்டோ. பலரை கொடிய சிறைக்



கூடங்களில் அடைத்து சித்திரவதை செய்து அழித்தான். அமெரி க்கா பக்கத்துணையாக நின் றது.

தொடர்ந்து ராணுவ சர்வாதிகாரப் பிடியின் கீழ் சுகாட்டோ 32 வருடங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தான். அக்கால கட்டத்தில் அவனது குடும்பம் உறவினர் முதலாளிகள் சமூக விரோதிகள் ஊழல் மேல் ஊழல் புரிந்து நாட்டின் பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராக்கினர். மக்கள் எதிர்த்த போது அமெரிக்கா சுகாட்டோவிற்கு பல்லாயிரம் டொலர்கள் கடன் கொடுத்துப் பாதுகாத்தது. இவனது ஆட்சிக் காலத்தில் தேசிய இனங்கள் மீது ஒடுக்கு முறைகள் அதிகரித்தன. கிழக்கு திமோர் ஆக்கிரமிக்கப்பட்டது. அச்சே பிரதேசத்தின் விடுதலை வேண்டிய மக்கள் எழுச்சிகளை ஒடுக்கப்பட்டன.

இவ்வாறு எட்டு லட்சம் உயிர்களைப் பலிகொண்டு பல லட்சம் டொலர் பெறுமதியான பணத்தை ஊழல் மூலம் கொள்ளையிட்ட இந்த ராணுவ சர்வாதிகாரி மீது மக்கள் வெறுப்பும் எதிர்ப்பும் கொண்டு கிளர்ச்சிகளிலும் எழுச்சிகளிலும் இறங்கினர். 1998ல் பதவியை விட்டு மக்கள் இறக்கினார்கள். ஆனால் அந்த கொலைகாரச் சர்வாதிகாரியைப் பாதுகாப்பதில் அமெரிக்காவும் மேற்குலகமும் அக்கறையாக இருந்தது. அவன் மீதான குற்றச் சாட்டுக்களை அசட்டை செய்தனர். இவனது படுபாதகக் கொலைகளுக்காக சர்வதேச நீதி விசாரணைக்கு நிறுத்தி தண்டித்திருக்க வேண்டும். ஆனால் அமெரிக்கா அதற்கு இணங்கவில்லை. கம்போடியாவின் கெமரூச் தலைவர்களையும் சேர்பியத் தலைவரையும் சர்வதேச நீதி விசாரணைக்கு கொண்டு வந்து நிறுத்த அமெரிக்கா முன் நின்றது. ஆனால் அவர்கள் செய்ததாகக் கூறப்படும் கொலைகள் பல லட்சம் என இட்டுக் கட்டிப் பிரசாரம் செய்தது அமெரிக்கா. ஆனால் அதே அமெரிக்க சுகாட்டோவை இறுதிவரை பாதுகாத்து நீதி விசாரணைக்கு செல்லாதவாறு பார்த்துக் கொண்டது. இது தான் அமெரிக்க- மேற்குலகின் நீதி நியாயம் என்பதை உலகம் தெளிவாகக் கண்டு கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் அமெரிக்க விசுவாசியும் கொலைகாரனும் ஊழல் சர்வாதிகாரியும் ராணுவ ஜெனரலுமான சுகாட்டோ என்ற ரத்தக் காட்டேரியை இந்தோனிசிய மக்களும் உலக மக்களும் வரலாற்றில் என்றும் மன்னிக்க மறக்கமாட்டார்கள்.

**~நமன்~**

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக படித்தவர்களின் சமூகப் பற்று

மலையகத்தின் படித்தோர் என்பவர்களில் அதிகமானோர் தொழிலாளர் வர்க்க குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். 15 லட்சத்திற் மேற்பட்ட மலையகத் தமிழர்கள் இருப்பதாகக் கணக் கெடுக்கப்பட்டுள்ளது. அவர்களில் 4 லட்சத்து 75 ஆயிரம் பேர் தேயிலை றப்பர் தோட்டங்களில் வேலை செய்பவர்களாவர். அவர் களும் அவர்களின் குடும்பத்தினரும் பெருந் தோட்டங்களிலேயே வாழ்கின்றனர். அதைவிட பெருந்தோட்ட நகரப்புறங்களிலும் கொழும்பு போன்ற பகுதிகளிலும் கணிசமான மலையகத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் பிரிட்டிஷ் கொலனியாதிக்கத்தினால் இந்தியாவிலிருந்து பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக கொண்டு வரப்பட்டவர்களின் வழித்தோன்றல்களாவர். இவர்கள் உரிமை மறுக்கப்பட்டவர்களாகவும் அடக்கப் பட்டவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

இவர்களில் சிறு எண்ணிக்கையானோர் கல்வி கற்று தனியார் அரசாங்கத் துறைகளில் உத்தியோகங்களில் இருக்கின்றனர். விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் வைத்திய சட்ட தொழில்சார் துறைகளில் இருக்கின்றனர். சிலர் வியாபாரத் திலும் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பகுதியினரின் தனிமனித முன்னேற்றம் முன்னுதாரணமாகக் கொள்ளப்படலாம் என்ற கருத்து மலையகத்தின் கல்வி கற்றவர்களை சமூக செயற்பாட்டிலிருந்து அந்நியப்படுத்துகிறது.

1980 களின் இறுதிவரை மலையக சமூகத்தில் கல்வி கற்றோரில் அதிகமானோர் தங்களை சமூக செயற்பாட்டில் இணைத்துக் கொண்டிருந்தனர். 1980 களின் இறுதியில் பெருமளவிற்கு பிரஜாஉரிமை பிரச்சினை தீர்க்கப்பட்ட நிலையில் கல்விகற்றோர் அதிகமான ஆசிரியர்களாகவும் ஏனையோர் ஏனைய துறைகளிலும் உத்தியோகங்களை தேடிக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டது. அதன்பின்னர் தனிநபர்கள் மேன்நிலை அடைவதற்கான வழிகள் திறக்கப்பட்டுள்ளதாகப் பல படித்தவர்கள் நம்பினார்கள். அவ்வழியில் மேம்பாட்டை தேடிய போட்டிகளில் ஈடுபடலாயினர். படித்தவர்களுக்கு சிறிதளவு அரசசார்பற்ற நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு கிடைத்தது. பிறபோக்கு தொழிற்சங்கத் தலைமைகளுக்கு எதிரான மக்களின் உணர்வு முழுத் தொழிற்சங்க இயக்கத்திற்கும் எதிரான உணர்வாக அரச சார்பற்ற நிறுவனங்களால் பாவிக்கப்பட்டது. அதனால் தொழிற்சங்க இயக்கம் பல வீனமடைந்தது. ஏனைய துறைகளில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இருந்ததனால் சமூக உணர்வுடைய படித்தவர்கள் தொழிற்சங்கங்களில் முழுநேர ஊழியர்களாக இணைவதை தவிர்த்தனர். அதற்கு பிற்போக்கு தொழிற்சங்கத் தலைமைத்துவத்தின் மீது படித்தவர்களுக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தியும் இன்னொரு காரணமாகும்.

படித்தவர்களின் தனிப்பட்ட மேன்நிலையாக்கத்திற்கு பெருந் தோட்டக் கட்டமைப்பு தடையாக இருந்ததால் கணிசமான எண்ணிக்கையான படித்தவர்கள் பெருந்தோட்ட வாழ்க்கையுடனான நெருக்கத்தை அறுத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். படித்தவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடைவெளியை ஏற்படுத்துவதில் பிற்போக்கு தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் திட்டமிட்டு செயற்பட்டன.

சில படித்தவர்கள் பெருந்தோட்டங்களிலிருந்து வெளியேறி வாழ்வதையே மேம்பாட்டிற்கான வழியாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

இவர்களுக்கு மத்தியில் 1960, 70, 80 களின் படித்தவர்களில் அதிகமானோர் இன்னும் நேரடியாகவோ மறைமுகமாகவோ மலையக தோட்டத்தொழிலாளர்களுடன் தொடர்புடையவர்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு தனிப்பட கிடைத்த சலுகைகளையும் மேம்பாட்டையும் முழு சமூகத்தின் நன்மைக்காகவும் பிரயோகித்தனர். அவர்கள் தமக்குக் கிடைத்த சலுகைகளையும் மேம்பாட்டையும் முழுச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான வழி வகைகள் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் சமூகத்தின் மேம்பாட்டிற்காக சமூக அசைவியக்கத்திற்கு தாம் பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை கொண்டிருந்தனர்.

1977 இற்கு பின்னர் பாராளுமன்ற உறுப்புரிமையும், அமைச்சுப் பதவிகளும், பிரதியமைச்சர் பதவிகளும் மலையக சமூகத்தினருக்கு கொடுக்கப்பட்டப் பின்னர் அதனால் கிடைக்கின்ற சலுகைகள் நோக்கியும் மலையகப் படித்தவர்களின் கவனம் திரும்பியது. 200 வருட வரலாற்றில் எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்ட சமூகத்தில் பாராளுமன்ற பாதையில் சிலருக்கு கிடைக்கும் பதவிகள், பட்டங்கள், சலுகைகள் பாரிய கவனத்தை ஈர்த்துள்ளது. கல்வியின் மூலமும் சிலருக்கு சில அந்தஸ்துகள் கிடைத்தன. அவையும் சிலரை கல்வி வழியான தனிமனித முன்னேற்றம் குறித்த கவனத் திற்குத் தள்ளியது.

இதனால் சமூக அக்கறை சமூக மாற்றத்திற்கான செயற்பாடு என்பவற்றில் மலையகபடித்தவர்களின் அக்கறை பாரிய அளவில் குறைந்தது. அத்துடன் மக்களுடன் சம்பந்தப்படாமல், மக்களின் போராட்டங்களுக்கு பங்களிப்பு செய்யாமல் மக்களுக்கு மேலாக இருந்து கொண்டு கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் சொல்லும் பிரிவினராக சில படித்தவர்கள் இருக்கின்றனர்.

தொழிலாளர் வர்க்க அடிப்படையை கொண்ட அடக்கப்பட்ட தேசிய இனமான மிகவும் பிற்படுத்தப்பட்ட மலையக சமூகத்தின் உயர்ச்சிக்கு முதலாளித்துவ சட்டங்களில் தீர்வுகளை தேட முடியாது என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகின்றது. அதனால் மாற்று வழி முறைகளே அவசியமானது.



## வரலாறாகிவிட்ட தோழர் சந்திரகுமார்

தோழர் பெருமாள் சந்திரகுமார் காலமாகி பெப்ரவரி 18 ஆம் திகதியுடன் மூன்று வருடங்களாகின்றன. அவர் தலவாக் கொல்லை, கல்கந்தை தோட்டத்தை சேர்ந்த ஆசிரியரான அவர் சிறந்த சமூக செயற்பாட்டாளராகவும், போராளியாகவும் செயற்பட்டவர். இறக்கும்போது புதிய- ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேசக்க மிட்டியின் உறுப்பினராகவும் இருந்த துடன் ஆசிரியர் சங்கத்திற்கு பொறுப்பாகவும் இருந்தார். 35வது வயதில் காலமான அவர் ஒரு மாக்சிய- லெனினியவா தியாக வாழ்ந்தபடியால் அவர் வரலாறாகியுள்ளார்.

அவரை நினைவு கூருகின்ற போது அவரைப் போன்ற சாதாரண தொழிலாளர் வர்க்க குடும்பத்திலிருந்து கல்விகற்று தேறுகின்றவர்களின் சமூகப்பொறுப்பு எத்தகையதாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பது அவசியமாகிறது.

ஆசியர்- குழு

# வெப்ப அதிகரிப்பும் பருவ நிலை மாற்றமும்

2007ன் டிசம்பர் மாதத்தில் இந்தோனேசியாவின் பாலி நகரில் ஐ.நாவின் அனுசரணையுடன் உலகில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வெப்ப அதிகரிப்பு சம்பந்தமாக ஒரு மாநாடு இடம்பெற்றது. உலகில் அதிகரித்து வரும் வெப்பம், கடல் மட்டம் உயர்வடைதல், பருவநிலை மாற்றம் எனப்படுவனவை வெப்பத்தப நிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்சினைகளாகும்.

பச்சை வீட்டு வாயு வெளியேற்றத் தாக்கங்களால் உலகளாவிய ரீதியில் வெப்பம் அதிகரிக்கின்றது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக கைத்தொழில் புரட்சியின் விளைவால் பச்சை வீட்டு வாயுக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. பச்சை வீட்டு வாயுக்களில் காபனீரொட்சைட் வெளியேற்றமே உலக வெப்ப அதிகரிப்புக்குப் பிரதான காரணமாயுள்ளது. ஏனைய வாயுக்களான மீதேன் மற்றும் நைதரஸ் ஒக்சைட் என்பவற்றால் உலகம் வெப்பமடைவது காபனீரொக்சைட்டின் தாக்கத்தை விட மிகவும் குறைவானதே. எனவே இன்றைய நெருக்கடியானது தொழிற்சாலைகளிலும் போக்குவரத்தின் போதும் எரிக்கப்படும் எரிபொருள்களிலிருந்து வெளியேற்றப்படும் காபனீரொக்சைட் மூலம் ஏற்பட்டு வருவதாகும்.

இதன் விளைவாக வெப்ப நிலை மாற்றத்தை நாம் உலகம் பூராவும் காண்கிறோம். வெப்ப அதிகரிப்பு, கடல் மட்ட உயர்வு என்பவற்றோடு பல்வேறு துறைகளிலும் இதன் தாக்கத்தை நாம் உணரக் கூடியதாயுள்ளது. மோசமான கால நிலைகளான பாரிய சூறாவளி, சடுதியான வெள்ளம், நீண்ட வரட்சி யென்பது உலகின் பல்வேறு பகுதிகளில் அடிக்கடி இடம்பெறுகின்றன. வெப்ப அதிகரிப்பால் வனாந்தரங்கள் அதிகரிக்கின்றன. உருகும் பனிக்கட்டி ஆறுகளால் பல்வேறு இடங்களில் நீர் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. கால நிலை மாற்றத்தால் சூழலுக்கு இசைவாக்கம் பெற முடியாத நிலையில் மிருகங்களும், தாவரங்களும் அழிவை நோக்குகின்றன. வெப்ப அதிகரிப்பாலும், நீர் பெறுவதில் குறைவு காணப் படுவதாலும் பல்வேறு இடங்களில் விவசாயமும் பாதிப்புக்குள்ளாகின்றது. மக்களது குடிநீர்த் தட்டுப்பாடு அதிகரிக்கின்றது.



காலநிலை மாற்றங்களின் தாக்கத்திலிருந்து முடிந்தவரை விடுபடுவதற்காக உலக நாடுகள் பல நடவடிக்கைகளை மேற் கொண்டன. 1997இல் கியாட்டோ இடைக்கால அறிக்கையின் பிரகாரம் வளர்ச்சியடைந்த நாடுகள் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை 1990இன் மட்டத்தை 5.2 வீதத்தால் 2012ஆம் ஆண்டளவில் குறைக்க வேண்டும். இந்த அறிக்கையில் கோரப்பட்டவை அமுலுக்கு வருவதற்கு ஏழு வருடங்கள் சென்றன. இதற்குப் பிரதான காரணம் அமெரிக்கா கியாட்டோ அறிக்கையை அங்கீகரிப்பதில் தயக்கம் காட்டி வந்தமையாகும்.

உலகில் ஆகக் கூடுதலான பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்றும் நாடாக அமெரிக்காவே இன்றும் திகழ்கின்றது. வேறு சில நாடுகளும் கியாட்டோ அறிக்கையை ஏற்க மறுத்தற்கான காரணம் இந்த நடவடிக்கையானது சம்பந்தப்பட்ட நாடுகளின் சரண்டல் வாய்ப் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் என்பதனாலேயேயாகும். இதன் காரணமாக ஏராளமான முதலாளித்துவ நாடுகள் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தை அதிகரித்துள்ளன.

கியோட்டோ அறிக்கையில் குறிப்பிட்ட இலக்கானது கால நிலை மாற்றத்தால் ஏற்படப் போகும் பயங்கரத் தாக்கங்களை தவிர்ப்பதற்குப் போதுமானதல்லவென ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அண்மைய ஆய்வுகள் கியாட்டோ அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட இலக்கை விட அதிகமான குறைப்பை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. 2050ஆம் ஆண்டளவில் 80 வீதமான குறைப்பு இலக்கு எட்டப்பட வேண்டும் என வற்புறுத்தப்படுகிறது.

2007ஆம் ஆண்டு டிசம்பர் 03இல் இருந்து 15ஆம் திகதி வரை பாலியில் 187 நாடுகளின் 11,000 பிரதிநிதிகள் பங்கு பற்றினர். கியாட்டோ பிரகடனம் 2012இல் முடிவுக்கு வந்த பின் எதிர் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி இந்த மகாநாடு பரிசீலித்தது. அதைத் தொடர்ந்து ஒரு உடன்பாடும் எட்டப்பட்டது. ஆனால் குறித்த இலக்குகளையோ அதனை அடையும் திகதிகளையோ மகாநாட்டால் தீர்மானத்திற்கு வர முடியவில்லை.

திகதிகள் குறிப்பதை அமெரிக்கா மறுத்தது. அமெரிக்காவிற்கு ஆதரவாக யப்பானும், கனடாவும் குரல் கொடுத்தன.

காலநிலை மாற்றத்தை வளர்ச்சியடைந்த நாடுகளே பாரிய அளவில் ஏற்படுத்துகின்ற போதும் அதன் விளைவுகளைப் பின் தங்கிய வறிய நாடுகளே எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நமது நாட்டைப் பொறுத்த மட்டில் யுத்தம் காரணமாக காடுகள் அழிக்கப் படுகின்றன. விவசாய நிலங்கள் பாழடிக்கப்பட்ட நிலங்களாக்கப் படுகின்றன. நாளாந்தம் போடப்படும் குண்டுகளால் வெடிக்கப் படும் வெடி மருந்துகளால் நச்சுப் புகை சூழலைக் கெடுத்து வருகின்றன. வாகனப்பாவனை அதிகரிப்பும் எரிபொருட்களின் விளைவான வாயுக்கள் வெளியேற்றமும் நமது சூழலை மேலும் மோசமாக்கி வருகின்றன. ஆனால் சுற்றாடல் அமைச்சர் புத்தத்தை தொடர்ந்து நடத்த வேண்டுமென்கிறார். ஏனைய பணம் பண்ணும் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சூழல் மாசடைவது பற்றி எவ்விதக் கவலையும் கிடையாது. எனவே சகல வழிகளாலும் நமது நாடு போன்ற பின்தங்கிய நாடுகள் தான் வெப்பமடைதலாலும் காலநிலை மாற்றங்களாலும் கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றன.

-சிறீ-

# கொசோவோ தரும் படிப்பினை

## துண்டாடப்படும் தனிநாடும் ஐக்கியப்பட்ட சுயாட்சியும்

கடந்த 17-02-2008 அன்று கொசோவோ தனிநாடாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதனை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளில் சிலவும் வரவேற்று அதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன. அதேவேளை ரஷியாவும் சேர்பியாவும் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. சீனா இந்தியா போன்ற நாடுகளும் கொசோவோவை அங்கீகரிக்கும் நிலையில் இல்லை. இத் தனி நாட்டுப் பிரகடனம் பிரிவினைக்காகப் போராடி வரும் சக்திகளுக்கு உற்சாகத்தையும் அதனை எதிர்த்து மறுத்து வரும் ஆளும் தரப்பு அரசாங்கங்களுக்கு கடும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவற்றின் பிரதிபலிப்புகளை நமது நாட்டு தமிழ் சிங்கள ஆங்கில ஊடகங்களில் காணமுடிகின்றது.

மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் கடந்த மூன்று தசாப்தங்களாகத் தேசிய இனப்பிரச்சினை என்பது தீவிரமடைந்து ஆயுதப் போராட்டங்களாக விருத்தி பெற்று வந்துள்ளதைக் காணலாம். தேசிய இனங்கள் மீதான பெருந்தேசிய இன அகங்கார ஒடுக்குமுறையை ஆளும் வர்க்கப் பெரும் தேசியவாத சக்திகள் கட்டவிழ்த்து விட்டு வந்திருக்கிறார்கள். இதனை எதிர்த்து சுயாட்சிக் கோரிக்கைகளும் அதற்கப்பாலான பிரிவினைக் கோரிக்கைகளையும் போராடும் தரப்புகள் முன்வைத்து வந்துள்ளன. இத்தகைய இன மதத் தேசிய முரண்பாடுகளையும் ஒடுக்குமுறைச் சூழலையும் தத்தமது ஏகாதிபத்திய வல்லாதிக்க நோக்கங்களுக்குத் தகுந்தாற்போல அச் சக்திகள் பயன்படுத்தியும் வந்துள்ளன. தேசிய இனப்பிரச்சினை யுத்தமாகவும் ஆயுதப் போராட்டமாகவும் காணப்படும் சூழல் பெரும்பாலான நாடுகளில் பிரதான முரண்பாட்டுப் பிரச்சினையாகி நாளாந்த உயிரிழப்புகளையும் இரத்த ஆறு ஓடுவதையும் வேகப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறான தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் இரண்டை அம்சங்கள் உள்ளடங்கி இருப்பதைக் காண முடிகின்றது.

1. ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமக்கான சுயாட்சி உரிமைகளைக் கோரி நிற்பது நியாயமானதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதுமான ஒரு அம்சமாகும்.

2. அதேவேளை வலிந்த மோதல் சூழலை உருவாக்கி ஏகாதிபத்திய சக்திகளின் துணையுடன் அவர்களது உள்நோக்கங்களுக்கு ஏற்ப பிரிவினையைச் சாத்தியமாக்க முன் நிற்பது ஏற்றுக் கொள்ள முடியாத பிற்போக்கு இரண்டாவது அம்சமாகும். இவ் விடயத்தில் தான் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு ஐக்கியப்பட்ட ஒரு நாட்டிற்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சியா? அல்லது துண்டாடப்படும் தனி நாடா? என்பது சிந்தனைக்கு உரியவிடயமாகின்றது. இதனை நாட்டு நலன் மக்கள் நலன் ஒடுக்கப்படும் வர்க்கங்களின் நலன் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்வு மேம்பாடு என்பனவற்றின் அடிப்படையில் வைத்து நோக்குதல் வேண்டும். இவற்றுடன் உலக மேலாதிக்கத்திற்கும் பிராந்திய மேலாதிக்கத்திற்கும் பேரவாக் கொண்டலைந்து வரும் வல்லாதிக்க சக்திகளையும் கணக்கில் கொண்டே பிரிவினையா? சுயாட்சியா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் தான் அண்மைய கொசோவோ தனி நாட்டுப் பிரகடனம் பல்வேறுபட்ட வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. கொசோவோ தனி நாட்டுப் பிரகடனம் தற்செயல் நிகழ்வல்ல. இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்பிருந்தே பல ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமைகளில் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்றன. 1945ல் உலக பாசிசம் தோற்கடிக்கப்பட்ட சூழலில் கிழக்கு தெற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சோஷலிச ஆட்சிகள் தோற்றம் பெற்றன. அவ்வாறு மார்சல் டிட்டோவின் தலைமையில் உருவாக்கப்பட்டதே யூகோஸ்லேவிய சமஷ்டிக் குடியரசாகும். அதே போன்று அல்பேனியாவில அன்வர் ஹோஷா தலைமையில் சோஷலிச ஆட்சி மலர்ந்தது. இத்தகைய சோஷலிச நாடுகள் ஐரோப்பிய அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகளுக்கு பெரும் சவாலாகவும் எதிர் நிலையாகவும் அமைந்தன. எனவே இச் சோஷலிச நாடுகளை உடைப்பதற்கும் சிதைப்பதற்கும் மேற்குலக சதா முயன்று வந்துள்ளன. அதனை சக்தி மிக்க மக்கள் தலைவர்களாக விளங்கிய டிட்டோ, அன்வர் ஹோசா போன்றோர் உயிருடனும் அதிகாரத்திலும் இருக்கும் வரை ஏகாதிபத்தியத்தால் சாத்தியமாக்க முடியவில்லை. இருப்பினும் அந்நாடுகளில் இன மத முரண்பாடுகளை வளர்ப்பதற்கும் பகை நிலைக்குத் தள்ளுவதிலும் ஊடுருவி வேலைகளைச் செய்தும் வந்தன.

1990களில் சோவியத் யூனியனதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் சோஷலிச வீழ்ச்சியைத் தொடர்ந்து யூகோஸ்லேவியாவும் அல்பேனியாவும் தத்தமது சோஷலிச ஆட்சிகளை இழந்தன. இதில் அந் நாடுகளின் பிற்போக்குவாத சக்திகளுடன் ஏகாதிபத்திய சக்திகள் கைகோர்த்துச் செயல்பட்டன. அதன் காரணமாக பல்லினத் தேசியங்களைக் கொண்டிருந்த யூகோஸ்லேவிய சமஷ்டிக் குடியரசு நான்கு துண்டுகளாகித் தனித்தனி நாடுகளாகின. சேர்பியாவின் பெருந்தேசிய இன வெறி கொண்ட மிலேச்சத்தனமாக இன மத ஒடுக்குமுறையானது சோஷலிசத்தின் கீழ் ஏற்பட்ட ஐக்கியத்தையும் நாட்டின் இறைமையையும் பாழாக்கிக் கொண்டது. சோஷலிசம் செயலற்ற மண்ணிலே இனவெறி இரத்த ஆறு ஓடியது. இதற்குப் பின்னால் ஏகாதிபத்தியம் தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தியது.

யூகோஸ்லவியா உடைக்கப்பட்ட பின் சேர்பிய நாட்டின் ஒரு மாகாணமாக இருந்ததே கோசோவா ஆகும். எல்லை நாடாக உள்ள அல்பேனியாவின் மக்களே நெடுங்காலம் தொட்டு அம் மாகாணத்தில் வாழ்ந்து வந்தனர். இனத்தால் அல்பேனியர்களாகவும் மதத்தால் இஸ்லாமியர்களாகவும் இருந்தனர்.

சோஷச சோவியத் யூனியன் காலத்தில் இருந்த யூகோஸ்லவியா அதன் நட்பு நாடாக நீடித்து வந்தது. சேர்பியாகிக் கொண்ட பின்பும் ரஷிய- சேர்பிய உறவு நீடித்தது. தனி உலக வல்லரசாகிக் கொண்ட அமெரிக்காவும் அதன் கூட்டாளியான ஐரோப்பிய ஒன்றியமும் திட்டமிட்டே சேர்பியாவிற்குள் புகுந்து கொள்ள எத்தருணம் பார்த்து வந்தன. சேர்பிய பெருந்தேசிய இன ஒடுக்கு முறை கொசோவா மாகாண மக்கள் மீது நடத்தி வந்த மூர்க்கத்தனத்தை எதிர்த்து அம் மக்கள் போராடினார். அப் போராட்டத்தைத் தமது நலன் கருதிய அமெரிக்க ஐரோப்பிய சக்திகள் பயன்படுத்தி ஊக்குவித்தன.

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பலஸ்தீனத்திலும் முஸலீம் மக்களைத் தினம் தினம் கொன்று குவித்து வரும் அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் கொசோவாவில் அல்பேனிய இன முஸ்லீம்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்து நேட்டோப் படைகளை இறக்கிப் பாதுகாப்பு வழங்கினர். ஐ.நா.வின் மேற்பார்வையைத் திணித்தனர். ஏகாதிபத்திய எடுபிடிகளான அல்பேனிய விடுதலைப் போராட்ட ராணுவம் அமெரிக்காவின் கைப்பொம்மையாகிக் கொண்டது. அதன் விளைவே கொசோவாவோவின் தனிநாட்டுப் பிரகடனம். இப் பிரிவினை நிகழ்வானது யாருக்கானது என்பதே எழும் அடிப்படைக் கேள்வியாகும். அல்பேனிய இன இஸ்லாமிய கொசேவா மக்களுக்கானதா? அல்லது அமெரிக்காவிற்கு தெற்கு ஐரோப்பிய மண்ணில் உலக மேலாதிக்கத்திற்கு தளம் அமைப்பதற்காகவா? என்பதே சிந்தனைக்குரியதாகும். கொசோவோவை அங்கீகரிப்பதில் அமெரிக்க ஐரோப்பிய சக்திகள் முன் நிற்கின்றன. அதன் நோக்கம் கொசோவாவோ மக்களது சுயநிர்ணய உரிமையையும் சுபீட்ச வாழ்வையும் ஏற்றுக் கொள்வதற்கல்ல. தமது உலக மேலாதிக்கத்திற்கேயாகும். ரஷியாவும் சேர்பியாவும் எதிர்ப்பதற்குரிய அடிப்படைகளாக இருப்பது ஒரு நாட்டையும் அதன் இறைமையையும் அத்து மீறிப் பறிப்பதாக உள்ளதென்பதாகும். அத்துடன் ரஷியாவைக் குறிவைத்த ராணுவத் தளங்களுக்கு கொசோவா பயன் படப்போகின்றது என்பதுமாகும்.

கொசோவா இன்று தனி நாடாகிக் கொள்வதற்கு அங்கு புகுந்து கொண்ட நேட்டோப் படைகளின் பிரசன்னம் அடிப்படையாக இருந்தது. ஆனால் தனி நாட்டுப் பிரகடனத்திற்குப் பின்பும் அங்கு அப்படைகள் இருக்கவே போகின்றன. ஏனெனில் சேர்பியா தனது இழந்த மாகாணத்தை மீட்கவே முனையும். அதே வேளை கொசோவா தனது தனி நாட்டு நிலையைத் தக்க வைக்கவே முனையும். அதுவும் அந்நிய ராணுவத்தின் நிலை கொள்ளலுடன். இதன் மூலம் இரத்த ஆறு தொடர்ந்தும் சேர்பிய- கொசோவா மண்ணிலே மேலும் பொருக்கெடுத்து ஓடவே போகிறது. இரத்தம் குடிக்கிற பிணம் தின்னும் அமெரிக்க கழுகுகளுக்கும் ஐரோப்பிய வல்லூறுகளுக்கும் தான் கொசோவாப் பிரிவினை வாய்ப்பை வழங்கியுள்ளது.

இதில் உள்ளடங்கியுள்ள உண்மை என்னவெனில் அமெரிக்காவும் பிற வல்லாதிக்க சக்திகளும் பிரிவினையை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்பதன் அர்த்தம் அவர்களது பொருளாதார அரசியல் ராணுவ நலன்களின் அடிப்படையிலேயாகும் சம்பந்தப்பட்ட மக்களின் நலன்களில் இருந்தல்ல.

இக் கொசவோ பிரிவினை நமது நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு தகுந்த சமகால படிப்பினையைத் தருகிறது. இதிலிருந்து தேசிய இன ஒடுக்குமுறையை யுத்தமாக முன்னெடுக்கும் பேரினவாத ஆளும் வர்க்கம் படிப்பினையைப் பெற்றால் நாட்டிற்கும் மக்களுக்கும் நல்லதாகும். அவ்வாறே போராடும் தமிழர் தரப்பு சக்திகளும் யார் குற்றியாவது அரிசி கிடைத்தால் போதும் என நம்பி ஏகாதிபத்திய வலையில் சிக்கி விடக் கூடாது என்பதிலும் கவனமாக இருக்க வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்புடன் கூடிய விடுதலைப் போராட்டத்தால் மட்டுமே ஒடுக்கப்படும் எந்தவொரு தேசிய இனமும் உண்மையான விடுதலையைப் பெறமுடியும். இல்லாது விடின் ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாகி நிரந்தர அடிமைத்தனத்தில் உழல் வேண்டியே ஏற்படும்.

— சண்முகம்



### யுத்தத்திற்கு ஆட்களைத் தேடுதல்

அமெரிக்கா உலகெங்கும் யுத்தம் செய்துகொண்டிருக்க, படைவீரர்கள் செத்து மடிந்து கொண்டிருக்க படைவீரர்களை தேடிப் பிடிக்க வேண்டிய கட்டாயம் அமெரிக்காவுக்கு. அமெரிக்க மக்கள் தங்கள் பிள்ளைகளை அமெரிக்க இராணுவத்தில் சேர்க்க மறுத்து வருகின்றனர். அமெரிக்க இராணுவம் இதனால் மிகப் பெரிய சிக்கல்களை எதிர் நோக்குகிறது. இதற்கு ஒரு புதிய தீர்வை அமெரிக்க நிர்வாகம் கண்டுபிடித்துள்ளது. அதாவது சட்ட விரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைபவர்களை கைது செய்து அமெரிக்க குடியுரிமை வழங்கப்படும். ஆனால் அமெரிக்க இராணுவத்தில் குறிப்பிட்ட ஆண்டுகள் கடமையாற்ற வேண்டும் என்ற உடன்படிக்கையின் அடிப்படையில் அவர்களை இராணு வத்தில் இணைத்துக் கொள்வது. இதற்காக தனது எல்லைகளை திறந்து வைத்திருக்கிறது அமெரிக்கா. அமெரிக்கக் கனவுகளில் திளைப்பவர்களுக்கான செய்தி இது.

ஒன்று மட்டும் சாத்தியம். தமிழனின் பெருமை பேசிப் பிழைப்பு நடாத்துபவர்கள், "தமிழன் அமெரிக்க இராணுவத்தில் கூட பணியாற்றியிருக்கிறான்" எனப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்






# பெண் விடுதலையும் பெண்ணிய வாதிகளும்

இன்று பெண் விடுதலை பற்றிப் பெண்ணியவாதிகள் என்று தங்களை அடையாளப்படுத்துகிற சிலர் பேசும் போது வர்க்கம், சாதி, தேசியம் போன்ற பலவற்றுக்கும் அப்பாற்பட்டதாக ஒரு பெண்ணிய நிலையை உருவாக்கிக் காட்ட முயலுகிறார்கள். அந்த முயற்சியின் ஒரு பகுதியாக, வர்க்கப் போராட்டம் சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் போன்றனவற்றைப் புறக்கணிக்கிறதற்கும் மேலாகத் தாங்கள் முன்வைக்கிற பெண்ணிய இலக்கிற்கு அவை தடையாக அமையலாம் என்கிற கருத்தையும் வற்புறுத்த முற்படுகின்றனர். அதன் போக்கில் பெண்ணுரிமைக்கான போராட்டங்களின் வரலாற்றை மறைக்கவும் திரிக்கவும் முற்படுகிறார்கள்.

தேசியவாதமோ, மதவாதமோ, பிரதேச வாதமோ, சாதி அரசியலோ தமக்குட் பலவாறான அடக்குமுறைகளைப் பண்பாட்டின் பேராலும் சமூக அடையாளத்தின் பேராலும் கொண்டிருக்கவும் நியாயப்படுத்தவும் செய்கின்றன. இவ்வாறான கோட்பாடுகள் நாடுகிற சமூக நீதி குறைபாடானதாகவும் மனித சமூகத்தின் ஒரு சிறு பகுதியினது நலனை மட்டுமே கருத்திற் கொண்டதாகவும் அமைகின்றன. குறிப்பிட்ட சில அடையாளங்கட்கு இடையில் உள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதில் உள்ள கவனம் ஒவ்வொரு அடையாளத்துக்கும் உட்பட்ட முரண்பாடுகளைத் தீர்ப்பது பற்றிக் காட்டப்படுவதில்லை. பிற சமூக அநீதிகளைத் தட்டிக் கேட்க இயலாத பெண்ணியம் என்ன தான் உலகளாவிய முறையிற் பெண் பற்றிப் பேசினாலும் ஒவ்வொரு சமூக அநீதியையும் புறக்கணிக்கிற போது ஒரு வர்க்கத்தினதோ இனத்தினதோ சமூகப்பிரிவினதோ தரப்பிலேயே தன்னை நிறுத்திக் கொள்கிறது. ஏனெனில் இவ்வாறான விடயங்களில் நடுநிலை என்று ஒன்றுக்கு இடமில்லை.

வர்க்கப் போராட்டத்தை முன்னிறுத்துகிற மாக்ஸியர்கள் பாட்டாளி வர்க்க நலன்களை மட்டும் வற்புறுத்தி ஏனைய ஒடுக்கப்படும் வர்க்கங்களது நலன்கட்கு மேலாக முன்னிறுத்துவதில்லை. மாறாக வர்க்க அடிப்படையிலான சுரண்டலையும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும் இல்லாதொழிக்கவும் அதன் வர்க்க ரீதியான நீட்சியாக வர்க்கங்களையே இல்லாதொழிக்கவும் போராடுகிறார்கள். எனவே எல்லா விதமான சமூக நீதிக்கான போராட்டங்களும் அவர்களது இலக்குக்கு உடன்பாடானவை. அதனாலேயே மாக்ஸியர்களாற் பலவாறான ஒடுக்குமுறைகட்கு எதிரான போராட்டங்களில் தலைமைப் பங்கேற்க முடிந்துள்ளது. பல இடங்களில் உரிமைப்போராட்டங்கட்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கவும் தேவையான போது ஒத்துழைக்கவும் முடிந்துள்ளது. இது பெண்ணுரிமை விடயத்தில் மிகவும் பொருந்தும்.

ரஷ்யப் புரட்சி முதற்கண் உழைக்கும் வர்க்கங்களது விடுதலையே. ஆனால் அதுவே தேசிய இனங்களதும் பெண்களதும் விடுதலையாகவும் அமைந்தது. ஆண்-பெண் சமத்துவத்தை சோவியத் ஒன்றியத்தின் சட்ட நூல்களிலும் சமூக நடைமுறையிலும் புகுத்தி ரஷ்யாவை விடப் பொருளாதாரத்தில் முன்னிலையில் இருந்த முதலாளிய நாடுகட்கு முன்னுதாரணமாக அமைந்தது அன்றைய சோவியத் ஒன்றியமே.

இந்தியாவை ஒத்தளவுக்கு ஆணாதிக்கம் வலுவாக இருந்த நாடு சீனா. சீனாவின் தேசிய விடுதலைப் போராட்டத் தலைமை கம்யூனிஸ்ட்டுக்களின் கைக்கு மாறிய பின்பு சீன விடுதலை என்பது பல வேறு விடுதலைகட்கு மத்தியில் பெண் விடுதலையையும் தனது வேலைத்திட்டத்தின் பகுதியாக்கியது. சீனாவில் பெண்ணுரிமைக்காக இயற்றப்பட்ட சட்டங்களும் திருமணம், மணமுறிவு, சொத்துரிமை போன்ற விடயங்களிற் பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சமூகக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தன.

விடுதலையின் பின்பு என்றில்லாமல் விடுதலைப் போராட்டத்தின் போக்கிலேயே பெண்ணுரிமையை மாக்ஸியப் போராளிகள் வற்புறுத்தி வந்துள்ளனர். இது பற்றி அறிய விரும்புகிறவர்கள் நேபாள மாஓ வாதிகள், பிலிப்பினியக் கம்யூனிஸ்ற்றுக்கள் போன்றோரது போராட்ட இயக்கங்களிற் பெண்களின் பங்கு பற்றியும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் பெண்களின் நிலை பற்றியும் விசாரித்தறியலாம்

முதலாளிய நாடுகளில் முதலாளியமோ முதலாளியச் சீர்திருத்தவாதிகளோ வலிந்து பெண்கட்கு உரிமைகளை வழங்க முன்வரவில்லை. அதற்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சோஷலிஸச் சிந்தனையாளர்களும் கம்யூனிஸ்ட்டுக்களும் அப்போராட்டங்களுடன் தங்களை இணைத்துக் கொண்டனர். அது மட்டுமன்றி முன்னுதாரணமான பெண் விடுதலைப் போராளிகள் இடதுசாரிகளாகவும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாகவும் இருந்துள்ளனர்.

இப்போது சர்வதேசப் பெண்கள் தினம் என்று கொண்டாடப்படும் பெண்ணுரிமையை அடையாளப்படுத்துகிற நாள் கூடத் தீவிர இடதுசாரிகளது பங்களிப்பினால் உருவாகியதேயாகும். 1911 மாச் 8ம் நாள் தொடங்கிக் கொண்டாடப்படும் அந்நாளைப் பற்றிப் பேசும் போது கிளாரா ஸெற்கின் பற்றி இவர்கள் பேசுவார்கள். அவர் இடதுசாரிப் போராளி என்பதை மழுப்பி விடுவார்கள். இது ஏன்?

வேலைக்குப் போகும் பெண்களின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள உதவும் மொண்டி சோரிப் பாடசாலைகள் என்ற கருத்துக்கு வித்திட்ட மொண்டிசோரி அம்மையார் தீவிர இடதுசாரியுங் கூட. இன்னும் பல வேறு வழிகளிற் காத்திரமான பங்களித்த பெண்ணுரிமைப் போராளிகளின் இடதுசாரி அடையாளத்தை மூடிக்கட்ட நம்மிடையே உள்ள சில நடுத்தர வர்க்கப் பெண்ணிய வாதிகள் முயல்வது ஏன் என்ற கேள்வியை தாம் கேட்க வேண்டும். இடதுசாரி, கம்யூனிஸ்ட் பெண்ணியவாதிகள் கட்சியில் இருந்த ஆண்களுடன் முரண்படுகிற சில சந்தர்ப்பங்களை இவர்கள் மிகைப்படுத்திக் கம்யூனிஸ்ற்றுக்களும் இடதுசாரிகளும் பெண்ணுரிமைக்கு எதிரானவர்கள் என்று உண்மைகளைத் திரிக்க முற்படுவது ஏனென்று நாம் விசாரிக்க வேண்டும். இவை நோக்கமில்லாமல் நடக்கிற காரியங்களல்ல.

ஒருவர் இடதுசாரிக் கொள்கைகளையோ மாக்ஸியத்தையோ ஏற்ற மறுகணம் புனிதராகி விடுவதில்லை. ஒவ்வொருவரும் அவரவரது சமூகப் பின்னணியிலிருந்து சுமந்து வரும் சுரண்டற் சமூகச் சிந்தனைச் சுமைகள் ஒரே வீச்சிற் தூக்கி எறியக் கூடியதுமல்ல. இதற்காகவே விமர்சனம் சுய விமர்சனம் என்கிற நடைமுறைகளைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் கடைப்பிடிக்கின்றன. சமூகம் பற்றிய அறிவு கற்பதை விட முக்கியமாகச் சமூக நடைமுறை மூலமும் போராட்டங்கள் மூலமுமே ஒருவரை வந்தடைகிறது. இதனாலேயே மாக்ஸியர்கள் எவரையும் பூரண ஞானி என்று கொள்வதுமில்லை எதையும் முடிந்த முடிவாக்கி முற்றுப்புள்ளி வைப்பதுமில்லை. ஆணாதிக்கச் சமுதாயத்திலிருந்து வரும் இரு பாலருக்கும் ஆணாதிக்கச் சிந்தனையின பாதிப்புண்டு. அதிலிருந்து விடுதலை பெறுவது சமூக விடுதலைக்கு அவசியமானது. எனவே கம்யூனிஸ்ட்டுக்கள் தேசியவாத சுரண்டும் வர்க்க சாதிய, ஆணாதிக்கச் சிந்தனைகட்கெல்லாம எதிரான போராட்டங்களைத் தமது கட்சிகட்கு வெளியே மட்டுமன்றி உள்ளேயும் நடத்த வேண்டியவர்களாக உள்ளனர். அவ்வாறு தொடர்ச்சியாக நடத்துவதன் மூலமே



சிறையில் இருக்கும் தோழர் சுகேசினி வரைந்த ஓவியம்

ஒருவர் நல்ல கம்யூனிஸ்ட் ஆக இயலும்; ஒரு கட்சி நல்ல கம்யூனிஸ்ட் கட்சி ஆக முடியும். இவையெல்லாம் நமது நடுத்தர வர்க்கப் பெண்ணியவாதிகள் அறியாதவையல்ல. ஆனாலும் அறியாதது போலக் காட்டிக் கொள்கிறார்கள். இது ஏன்? இதுவும் நோக்கமில்லாது நடக்கிற காரியமல்ல.

எனவே தான் இந்த இடதுசாரி எதிர்ப்புப் பெண்ணியவாதிகளின் சமூகப் பார்வையையும் போராட்ட அணுகுமுறையையும் போராட்டங்களையும் கொஞ்சங் கவனிக்க வேண்டியுள்ளது. இவர்கள் பேசுகிற பெண்ணுரிமைப் பிரச்சனைகள் எவை? இவர்கள் முன்னெடுக்கிற பிரச்சனைகள் எவை? இவர்கள் வற்புறுத்திப் போராடுகிற பிரச்சனைகள் எவை? இவர்களது போராட்ட இலக்குத்தான் என்ன?

நடுத்தர வர்க்கப் பெண்கள் குறிப்பாக உயர்நடுத்தர வர்க்கத்தினர் அதே வர்க்கத்து ஆண்கட்குச் சமமாயிருக்க வேண்டும் என்பதில் இவர்கள் மிகவுங் உறுதியாயுள்ளனர். அதிற் கேடில்லை. ஆனால் அந்த அக்கறை ஏன் கூலி உழைப்பில் ஈடுபடுகிற பெண்களின் சமத்துவம் பற்றிக் காட்டப்படுவதில்லை? பெண்கள் ஆண்களை விட மிகக் குறைவாகவே ஊதியம் பெறுகிற துறைகளில் விவசாயத் துறை முக்கியமானது. கிராமியக் கூலி உழைப்பாளர்களிடையே பால் அடிப்படையிலான ஊதிய வேறுபாடு அதிகம். இது பற்றி யாராவது எடுத்துச் சொல்லி அதுபற்றிப் பேசப்பட்டால், என்.ஜி.ஓப் பணத்தில் ஆள் அமர்த்தி ஆராய்ச்சி செய்து தகவல்களைச் சேர்த்து அறிக்கை எழுதிக்காக சம்பாதிக்கிற சாமர்த்தியம் நமது பெண்ணிய நிறுவன எசமானியர்கட்கு இருக்கிறது. ஆனாற் சமமான ஊதியத்திற்கான போராட்டங்களில் இறங்க அவர்கட்கு இயலாது. அவர்களுடைய வாழ்க்கை முறை அப்படி.

போரின் கொடுமையால் அல்லற்பட்டு வாழ்வுக்கும் சாவுக்குமிடையே அல்லாடி அகதி வாழ்வு வாழ்கிற பெண்களுக்கு புனர் வாழ்வு என்கிற பேரில் என்.ஜி.ஓக்கள் மூலம் அள்ளிப் பெறுகிற பணத்திற் கிள்ளி விநியோகித்து கொண்டு தங்களது வசதிகளைப் பெருக்கியபடி பெண்ணியவாதமும் பெண் மேம்பாட்டு பேசுகிறவர்களை என்.ஜி.ஓக் கலாசாரம் உருவாக்கியிருக்கிறது. இவர்களை மறுத்து ஒரு கேள்வி கேட்டால் உபகார நிதியையே நிறுத்தக் கூடியளவுக்கு அதிகாரம் இவர்களது கைகளில் குவிந்துள்ளது. இது விடுதலையோ விமோசனமோ அல்ல. மாறாக இது ஒரு புதிய அடிமை முறை. அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களின் முகவர்களாகவும் கங்காணிமாராவும் இவ்வாறானவர்கள் இயங்கி வருகிறார்கள்.

மலையகத்தில் பெண்களிடையே செயற்படுகிற என.ஜி.ஓப் பெண்ணியவாதிகள் இருக்கிறார்கள். தோட்டப்பாடசாலைகள் சிறார் பராமரிப்பு மையங்கள் போன்றவற்றிற் காணப்படுகிற சாதிப்பாகுபாடு அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு எதிராக இவர்கள் யாரும் சுட்டுவிரலைத் தன்னும் அசைக்க முயலவில்லை? இல்லை. மலையகப் பிரமுகர்களதும் அரசியல் வாதிகளதும் தொழிற்சங்கத் தலைவர்களதும் நட்பும் ஆதரவும் இல்லாமல் இவர்களாற் பிழைப்பு நடத்த இயலாது.



இது தான் நாம் இன்று இலங்கையிற் காணக் கூடிய பெண்ணியச் சீமாட்டிகளின் பெண்ணுரிமை நடவடிக்கைகளின் தன்மை. இவர்கள் பேசுகிற பெண்ணுரிமை, ஒரு குறிப்பிட்ட வர்க்க அடுக்கிற்குள் தங்களை உயர்த்திக் கொள்ளுவதற்கு வசதியாக உள்ள ஒரு கருவியே ஒழிய உண்மையிலேயே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட உழைக்கும் வர்க்கப் பெண்களின் உரிமைகளை வெல்வது பற்றியதல்ல. தமிழ்த் தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக ஏன் கொழும்பிலுள்ள பெண்ணிய நிறுவனங்களாற் குரல் கொடுக்க முடியவில்லை? பேரினவாத ஒடுக்கு முறை பால் வேறுபாடில்லாமல் வடக்கு கிழக்கின் மக்களை முக்கியமாக வறுமைப்பட்ட மக்களை வதைக்கிறது. பெண்களும் சிறு வரும் ஆயுதம் ஏந்துவது பற்றிப் பேசுகிற அளவுக்கு இவர்களால் ஏன் அந்த நிலைக்கு அவர்களைத் தள்ளியுள்ள அரசியலைப் பற்றிப் பேச இயலுவதில்லை?

முன்னாள் இடதுசாரிகளான பெண்ணியவாதிகள் சிலர் இப்போது பெண்ணுரிமைக்கு இடதுசாரிகள் வழங்கிய பங்கை மறுப்பதிலும் மாக்சியத்தை மறுப்பதிலும் நேர்மையான மாக

தொடர்ச்சி 10 பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன்

சிங்கள–பௌத்த தேசியவாதம் உருவானதற்குச் சமூகத்தில் கிறிஸ்தவர்களது மேலாதிக்கம் ஒரு முக்கிய காரணமாக இருந்தாலும், 19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த கொச்சிக்கடை (கொட்டாஞ்சேனை) மோதல் பொதுவான சிங்கள–கத்தோலிக்க சமூகங்களிடையிலான மோதலாக விருத்தி பெறவில்லை. அந்தளவுக்குச் சிங்கள–பௌத்த தேசியவாதம் ஒரு அரசியல் சக்தியாக வளர்ந்திருக்கவும் இல்லை. அந்த முரண்பாடு சிங்கள–பௌத்தத் தலைவர்கள் எனப்பட்டோரின் வர்க்க நலன்கட்கு ஒரு மிரட்டலாகவுங் காணப்படவில்லை. கத்தோலிக்கர்களை விட அதிகமாக அரசியலிற் செல்வாக்குடன் விளங்கியோர் புரட்டஸ்தாந்து கிறிஸ்துவர்களாகவே இருந்தனர். அவர்கட்கு எதிராகச் சிங்கள பௌத்தர்களைக் கிளறிவிடக் கூடியவாகவும் அவர்களுடனான போட்டி கல்வி, சட்டவாக்கற் சபைப் பிரதிநிதித்துவம் போன்ற தளங்களிலேயே இருந்தது.

முஸ்லிம்களில் கரையோரச் சோனகர் என்று குறிப்பிட்டப் பின்பு இந்தியச் சோனகர் என்று அழைக்கப்பட்ட பெரும்பாலும் தமிழ் பேசுவோரான இந்திய முஸ்லிம்கள் வர்த்தகத்திலே ஈடுபட்டிருந்தனர். பலசரக்கு, துணிமணிகள் போன்று பல துறைகளிலும் அவர்கள் பங்குபற்றினர். சில்லறை வியாபாரிகள் கடனுக்குப் பொருட்களை விற்கும் போது விலைகளைக் கூட்டி விற்பது வழமையான சூழ்நிலைகளில் வாங்குவோருக்குப் பாரிய பிரச்சனையாயிருப்பதில்லை. அது போலவே சில்லறை வணிகர்கள் வட்டிக்குக் கடன் கொடுப்பதும் கடுமையான பொருளாதார நெருக்கடி இல்லாத போது ஒரு வசதியாகவே கருதப்படுகிறது. எனினும் ஒரு சமூகம் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகிற போது இவை வியாபாரிகட்கு எதிராக மட்டுமன்றி ஒரு சமூகத்திற்கு எதிரானதாகவே கூட மாறலாம். இவ்வாறான பகைமை உணர்வு ஐரோப்பாவின் பல நாடுகளில் யூதச் சமூகங்கட்கு எதிராக எழுந்துள்ளதையும் வட்டிக்குக் கடன் கொடுக்கிறவர்களாகவே முழு யூதச் சமூகத்தையும் சித்தரிப்பதும் சமுதாய நீரோட்டத்திற் கலக்கும் வாய்ப்புக்கள் இல்லாத போது அவர்கள் தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிற துறைகளில் மேலெழும் போது அவற்றைச் சதிகளாகவும் சூழ்ச்சிகளாகவுங் காட்டுவதும் பல அரசுகட்குப் பயனுள்ளதாக இருந்தது. இவ்வாறு நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கான பழி முழுவதையும் ஒரு சமூகத்தின் மீதே சுமத்திவிட்டு ஆளும் அதிகார வர்க்கம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறது. இதற்கு நல்ல உதாரணமாக ஜேர்மனியில் ஃபாஸிஸத்தின் எழுச்சியைக் கூறலாம்.

எழுச்சி பெற்று வந்த கரையோரச் சிங்கள வர்த்தகர்கள் முஸ்லிம் வர்த்தகர்கள் போலத் தைரியமாகக் கடனுக்குப் பொருட்களை விற்க ஆயத்தமாக இல்லாததால் முஸ்லிம்களுடன் போட்டியிடுவது கடினமாகவே இருந்தது. எனவே முஸ்லிம் வணிகர்கட்கு எதிராகப் பாவிக்கக் கூடிய ஒரே ஆயுதமாக இருந்தது மத வேறுபாடு. இலங்கையிலே இஸ்லாமிய மத மாற்றம் பெரிய அளவில், திட்டமிட்ட விதமாக நடந்ததாகக் கூற இயலாது. திருமணத்தின் வழியில் ஏற்பட்ட மத மாற்றங்களை விட்டால் இஸ்லாத்தைப் பரப்புவதற்கான ஒரு இயக்கமோ அதற்கான அதிகார வலிமையோ மட்டுமன்றித் தேவையும் இலங்கையின் முஸ்லிம்களின் சமூகத் தலைமையில் எவரிடமும் இருக்கவில்லை. வாய்ப்பிருந்த போது சாதியால் தாழ்த்தப்பட்டவர்கள் கத்தோலிக்கத்தை அல்லது புரட்டஸ்தாந்து கிறிஸ்துவத்தை நாடினர். அதுவுங் கூடத் தமிழகத்தில் நடந்தளவுக்கு இலங்கையில் நடக்கவில்லை. போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கரானோருக்குப் பின்பு கிறிஸ்துவத்திற்கு மாறினோர் பலர் தமது சமூக மேம்பாடு கருதி மதம் மாறிய ஓரளவு வசதி படைத்தவர்களாகவே இருந்தனர். முஸ்லிம்களையும் தமிழரையும் அந்நியர்களாகப் பார்க்கிற போக்கு அநகாரிக தர்மபாலாவின் காலத்திலிருந்து ஊக்குவிக்கப்பட்டது. அது ஒரு அரசியற் கொள்கையாகிப் பேரினவாத வெறியாவதற்கு வாய்ப்பான சூழ்நிலை அப்போது இல்லை. அதை முன்னெடுத்துச் செல்லக் கூடிய ஒரு நடுத்தர வர்க்கம் அன்று உருவாகி இருக்கவுமில்லை. எனினும் 1914இல் முதலாம் உலகப் போர் எனப்படுகிற ஐரோப்பிய நாடுகளின் போர் வெடித்ததை அடுத்து இலங்கையின் பொருளாதாரம் பாதிப்படைந்தது.

1915 வெசாக் காலத்தில் கண்டியில் முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்களிற் தொடங்கிய இன மோதல் நாட்டின் பல பாகங்கட்கும் பரவியது. இதன் பின்னணியில் முக்கியமான பிரச்சனையாகக் காட்டப்பட்டது மதம். பள்ளிவாசல்கட்கு முன்பாக உரத்த சத்தத்தோடு பௌத்த ஊர்வலங்கள் செல்வதன் பின்னணியில் வளர்த்தெடுக்கப்பட்ட மோதலுக்கு மத அடிப்படையிலான தோற்றம் காட்டப்பட்டாலும் வணிகர்களிடையிலான போட்டியே உண்மையான ஊக்குவிப்பை வழங்கியது. இது கலவரங்களின் போது இலக்கு வைக்கப்பட்டவை பெரும்பாலும் முஸ்லிம்களின் கடைகளும் பிற வணிக நிறுவனங்களுமே என்பதிலிருந்து தெளிவாகவே தெரிந்தது. இந்திய முஸ்லிம்கள் தான் இலக்கு வைக்கப்பட்டனர் என்று கூறப்பட்டாலும் இலங்கை முஸ்லிம்களும் கணிசமாகப் பாதிக்கப்பட்டனர்.

இக் கலவரங்கள் கவனமாகத் திட்டமிடப்பட்டவை என்பதில் ஐயமில்லை. பிரித்தானியக் கொலனிய எசமானர்களிடையே இவை பிரித்தானிய நிருவாகத்திற்குக் குழிபறிக்கிற நோக்கிலேயே முன்னெடுக்கப்பட்டன என்ற கருத்து பழமைவாத அதிகாரிகளிடையில் வலுவாகவே இருந்தது. இதன் விளைவாகக் கொலனிய நிருவாகம் கலவரத்தை அடக்கக் கடும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது.

இக் கலவரங்களின் போது கொழும்பிலும் பிற நகரங்களிலும் சில்லறை வியாபாரிகளின் கடைகள் உடைத்துக் கொள்ளையிடப்பட்டன. கொழும்பில் இவ்வாறான கொள்ளையடிப்பில் தொழிலாளர்கள் பெருமளவிற் பங்குபற்றினர். இதற்கான காரணம் மதமல்ல. முஸ்லிம்கள் பற்றியும் பிற சிங்கள பௌத்தரல்லாத சமூகத்தினர் பற்றியும் அவிழ்த்து விடப்பட்ட இனத் துவேஷம் ஒரு வசதியாக இருந்த போதும் பொருளாதாரக் காரணங்கள் முக்கியமான பங்கு வகித்தன.

1941ஆம் ஆண்டு போர் தொடங்கியதை அடுத்துப் பொருளாதாரத்திற் சரிவு ஏற்பட்டதுடன் பண்டங்கட்கான தட்டுப்பாடும் நிலவியது. இச் சூழலில் அதிருப்தி பல வேறு வடிவங்களில் வெளிப்பட்டது. ஒரு பகுதி கொலனிய நிருவாகத்தினருக்கு எதிரான சிங்கள தேசியவாத எழுச்சியாக இருந்தது. நூற்றாண்டுகள் முன் இழந்து போன சிங்கள இராச்சியத்தை மீட்பது பற்றிய கருத்துக்களும் சில பத்திரிகைகள் வாயிலாக வெளிப்பட்டன. இன்னொரு புறம் வேலையின்மையும் விலைவாசி உயர்வும் எழுந்தமான முறையில் வேலை நிறுத்தங்கட்கு வழிகோலின. பொருளாதார நெருக்கடி, குறிப்பாகப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் விலைகளின் உயர்வும், வியாபாரிகட்கு எதிரான உணர்வாக, அதிலும் முஸ்லிம் வியாபாரிகட்கு எதிரான பகைமையாக வளருவது எளிதாயிருந்தது.

அன்றாட உழைப்பிலே தங்கியிருக்கிற ஒரு தொழிலாளி தனக்கு கடனுக்குப் பொருள் விக்கிற காரணத்திற்காக ஒரு வியாபாரிக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டியதில்லை. அதைவிட, அந்தக் கடன் வசதியை விடப் பொருட்களின் கூடிய விலையாலான மனக் கசப்பின் பாதிப்பு நெருக்கடியான சூழ்நிலைகளில் அதிகமாகிவிடும். அத்துடன் பணத் தட்டுப்பாடுள்ள போது வியாபாரிகளும் வாடிக்கையாளர்கள் தமது கடனை விரைவாக அடைக்க வேண்டும் என்பதில் அதிகங் கவனமாயிருப்பார்கள். எல்லாமாகச் சுமுகமாக இருந்த வியாபாரி–வாடிக்கையாளர் உறவுக்குக் குழி பறித்து விடுகின்றன. இவ்வாறான பின்னணியிலேயே பல முஸ்லிம் கடைகள் சூறையாடப்பட்டன. அந்தச் சூறையாடலை ஊக்குவிப்பதில் முஸ்லிம் விரோதக் கருத்துக்கள் முக்கியமான பங்கு வகித்தன. இதனால் சிங்களத் தொழிலாளரிடையே சிங்கள இன உணர்வோ முஸ்லிம் விரோதமோ இல்லையென்றாகிவிடாது. ஆயினும் முஸ்லிம்கட்கெதிரான கலகத்தின் கர்த்தாக்கள் அவர்கள் அல்ல என்பதும் ஒரு பொருளாதார நெருக்கடி அவர்களை அக் கலவரத்தின் ஒரு கருவியாக்கின என்பதும் முக்கியமாகக் கவனிக்கத் தக்கவை.

தொழிலாளர் குறுகிய தேசியவாதத்திற்கும் பேரினவாதத்திற்கும் இரையாவது ஒன்றும் புதிதானதல்ல. அவை உலகிற் பல நாடுகளிலும் நடந்துள்ளன. எனினும் சமூகத்தின் வேறெந்த வர்க்கத்தையும் விடத் தொழிலாளி வர்க்கம் ஒன்றிற்கு மட்டுமே இனவாதத்தைக் கடந்து உயர முடியும் என்பதையும் அது தனிமனித முறையில் அல்லாமல் ஒரு வர்க்கமாகவே அதைச் செய்கிறது என்பதையும் உலக வரலாற்று நிகழ்வுகள் நமக்கு உணர்த்தியுள்ளன.

தொழிலாளர்களிடம் வர்க்க உணர்வு இயல்பாகவே ஏற்படுகிறது. அவர்களுடைய சமூக நிலையும் உற்பத்தி உறவுகளின் தன்மையும் சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்குமிடையிலான முரண்பாடும் அவர்கட்கு அவர்களது வர்க்கத்தை அன்றாடம் நினைவூட்டுகின்றன. ஆனால் அது வர்க்கச் சிந்தனையாக, அதாவது பாட்டாளிவர்க்கச் சிந்தனையாக, உருவெடுக்காத வரை வர்க்க உணர்வைப் பிற முரண்பாடுகள் சார்ந்த உணர்வுகள் மேவிவிடலாம். தொழிலாளி வர்க்கம் என்ற கேள்விக்கிடமற்ற ஒரு அடையாளத்தை அந்த இருப்புடன் தொடர்பற்ற சாதி, மதம், மொழி, இனம், தேசியம், பிரதேசம் என்பன மேவி விடுவதை நாம் காணுகிறோம். பல இடங்களில் இவ்வாறான உணர்வுகள் யதார்த்தமான நிலைமைகளினால் உருவாகின்றன. அவை புறக்கணிக்க இயலாததாயும் அமைகின்றன.

தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடியான ஏ.ஈ.குணசிங்ஹ ஒரு பேரினவாதியாகச் சீரழிந்த காரணங்களில் அவரது நடுத்தர வர்க்கக் கண்ணோட்டமும் வெளிவெளியான கம்யூனிஸ எதிர்ப்பும் முக்கியமான பங்களித்தன. குணசிங்ஹ ஆக மிஞ்சித் தொழிலாளரை அணி திரட்டிப் போராடினாரே ஒழிய அவர்களது அதிகாரம் என்ற சிந்தனை அவரிடம் இருக்க வில்லை. பிற நடுத்தர உயர் நடுத்தர வர்க்கத் தலைவர்கள் போலவே அவரிடமும் மலையகத் தமிழர் பற்றிய அக்கறையோ அவர்கள் இந் நாட்டு மக்கள் என்ற எண்ணமோ இருக்கவில்லை. இந்த இடத்தில் 20ஆம் நூற்றாண்டின் முதல இரண்டு தசாப்தங்களிலும் மலையகத் தமிழ்த் தொழிலாளர்களுக்காகவும் குரல் கொடுத்ததோடு அதற்கான அரசியல் ஆதரவைத் திரட்டவும் செயற்பட்ட பொன்னம்பலம் அருணாசலம் தனது வர்க்கத்தினின்றும் குணசிங்ஹ போன்ற 'கிளர்ச்சிக்காரத்' தலைவர்களிலும் பார்க்க உயர்ந்து நிற்கக் காணுகிறோம்.

தொழிற்சங்க இயக்கம் குறுகிய தேசியவாதத்தினின்று விடுபடுவதற்கான வாய்ப்பை அதற்கு மறுத்தது அதனுடைய தலைமையின் வர்க்கப் பார்வையும் வர்க்க நிலைப்பாடுமே. முடிவில் குணசிங்ஹ தொழிலாளி வர்க்கத்தை தனது மேம்பாட்டுக்கான ஏணிப்படியாகப் பாவித்தார். இது அவரது திசை மாற்றம் என்பதை விட ஒரு குறிப்பான அணுகுமுறையின் தவிர்க்க இயலாத ஒரு அவலமான முடிவு என்றே கொள்ள வேண்டும்.

1915 சிங்கள – முஸ்லிம் கலவரம் தமிழ், முஸ்லிம் தேசியவாதிகளின் எழுச்சிக்கும் வழி செய்த ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அவை பற்றி அடுத்து வருகிற பகுதிகளிற் கவனிப்போம்.

# பேரினவாதத்தின் சுரண்டும் வர்க்கப் பற்கள்

9ம் பக்க தொடர்ச்சி

...லிய வாதிகளை ஓரங்கட்டுவதிலும் காட்டுகிற கவனத்தைப் பெண்கள் வர்க்க அடிப்படையிற் சுரண்டப்படுவது பற்றிக் காட்டுகிறார்களா? வன்னியிலல்ல. இவர்கட்கு எட்டக்கூடிய தொலைவில் ஆடைத் தொழிற்சாலைகளும் சுதந்திர வர்த்தக வலயக் கம்பெனிகளும் உள்ளன. அங்கே மிக மோசமான முறையிற் சுரண்டப்படுவோர் பெண்கள்.

அவர்கட்குத் தொழிற்சங்க உரிமைகள் இல்லை. சாதாரண மனித உரிமைகள் பலவும் இல்லை. அவர்களின் உழைப்பு மட்டுமன்றி அவர்களது உடலும் சுரண்டலுக்கு உட்படுகிறது. இவை பற்றி ஏன் நமது பெண்ணிய வாதிகளாற் பேச இயலவில்லை? இவற்றுக்கெல்லாம் ஒரே ஒரு காரணந்தான் உண்டு. அவர்களது வர்க்க நலன்கள் அவர்களது நடத்தையைத் தீர்மானிக்கின்றன.

நமது நடுத்தர வர்க்கப் பெண்ணியவாதிகள் பாலியற் சமத்துவமும் சுதந்திரமும் பேசுவார்கள். வர்க்க அடிப்படையிலான பாலியற் சுரண்டல் கண் முன்னே நடக்கிறது அது பற்றிப் பேசமாட்டார்கள். தேசிய இன அடிப்படையில் பாலியற் கொடுமைகள் நடக்கின்றன. தட்டிக் கேட்க மாட்டார்கள். இது தான் அவர்கள் அறிந்த சமத்துவம். இவர்கள் கேட்பது தங்கள் வீடு அலுவலகங்களின் நாலு சுவர்கட்கு நடுவில் வரையறுக்கப்பட்ட சமத்துவமே ஒழிய நாட்டுக்கான அனைத்துப் பெண்களுக்கான சமத்துவம் அல்ல. பிற சமூக அக்கறைகளற்ற பெண்ணியம் பேசுகிறவர்களில் என்.ஜி.ஓ. நிதி பெறும் பெண்ணியவாதிகளே இன்று அதிகமாக அறியப்பட்டவர்கள். அவர்கள் மறுக்கிற பிற சமூக அக்கறைகள் எல்லாம் அவர்களுக்குள் மறைவாக இருக்கின்றன. அவர்களால் தங்களது வர்க்கம் பிரதேசம், சாதி, தேசிய இனம் உட்பட்ட பல்வேறு சமூக அடையாளங்களில் ஊறிப் போய் உள்ளவர்கள் என்பதனாலேயே அவை பற்றிய போராட்டங்களை முக்கியப்படுத்துவதை அவர்கள் விரும்பவில்லை. அவை பற்றிப் பேசினால் பெண்ணுரிமைக்குக் கேடு என்று உள்ளூர அவர்களும் நம்பவில்லை; நாங்களும் நம்ப வேண்டியதில்லை. வர்க்கங்கள் உள்ளவும் வர்க்கச் சார்பற்ற எதுவுமே இல்லை. பெண்ணியம் அதற்கு விலக்கல்ல.

—புவனம்—

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ்த் தேசிய வாதத்தின்

## பழைய / புதிய தலைமைகள்

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கான பொறுப்பு பாராளுமன்ற அரசியல்வாதிகளிடம் இருந்த போது அதில் அடிப்படையான தவறுகள் பல இருந்தன. அவைகளைப் பற்றிக் கதைத்தவர்கள் தமிழ்த் துரோகிகள், இனத் துரோகிகள் என்று நிந்திககப்பட்டார்கள். என்றாலும் யார் துரோகிகள் என்பதைக் காட்டுவதற்கு வரலாறு அதிக காலத்துக்குக் காத் திருக்கவில்லை. தமிழ்ச் சமூகத்தை யாரிடமிருந்து யாருக்காக விடுதலை செய்கிறது என்கிறதிலே தான் தமிழ்த் தேசிய வாதிகளுக்கும் தமிழ் முற் போக்கு, இடதுசாரிச் சிந்தனைக் காரர்களுக்கும் வித்தியாசங்கள் இருந்தன.

எந்த விதமான ஒடுக்கு முறைகள் முக்கியமானவை என்ற கேள்வி க்கும் யாருக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற கேள்விக்குமான விடைகளில் தமிழ்த் தேசியவாதிகளின் நிலைப்பாடு மாறவில்லை. மாறி யது போலத் தெரிந்தால் அவர்கள் போராட்டத்திலிருந்து விலகி விட்டார்கள் என்று தெரிந்து கொள்ளலாம். என்றாலும் எப்படிப் போராடுவது என்பதில் ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அந்த மாற்றமும் மக்களின் போராட்ட அனுபவத்தின் அடிப் படையில் உண்டாகின ஒரு மாற்றம் என்று சொல்லி விட முடியாது.

தமிழ்த் தேசிய இன விடுதலை என்ற எண்ணம் உண்டாகிறதற்குக் கனகாலத்துக்கு முதலே தமிழ் இனம் அல்லது தமிழ்த் தேசிய இனம் என்கிற எண்ணம் அரசியலில் வேர்கொண்டுவிட்டது. அது எல்லாத் தமிழரையும் குறிக்க வேண்டும் என்று நினைத்தவர்கள் சிலபேர் இருந்தாலும் நடைமுறை வித்தியாசமாகத்தான் இருந்தது. அது உண்மையில தமிழரிடையே குறிப்பிட்ட ஒரு பகுதியினருடைய நலன்களைப் பற்றியதாகத் தான் இருந்தது. அவர்கள் சாதியாலும் பொருளாலும் உயர்ந்த நிலையில் இருந்தவர்களாகவும் உயர்ந்த அரச பதவிகளை வகிப்பவர்களாகவும் உயர் வருமானமுள்ள தொழில்களைச் செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். அவர்களை மையப்படுத்தி முன்வைக்கப்பட்ட தமிழ் இன அடையாளம் பேரளவில் வடக்குக் கிழக்கின் எல்லாத் தமிழரையும், சில நேரங்களில் எல்லா தமிழ் பேசும் சமூகத்தினரையும், உட்படுத்தியது. செயல்முறையில், உயர்ந்த நிலையில் இருந்த ஒரு சிறுபான்மையினரையும் அவர்களுக்கு ஆதரவாகவும் அரணாகவும் அமையக்கூடிய ஒரு நடுத்தர வகுப்பினரையும் பற்றியே அந்தச் சிந்தனையின் கவனம் இருந்தது.

வர்க்கமும் சாதியமும் பேச்சளவில் தமிழ்த் தேசியவாதிகட்கு முக்கியமானவையாக இருக்கவில்லை. அவற்றைப் பற்றிப் பேசுகிறவர்கள் தமிழினத்தின் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டி வந்தார்கள். உண்மையில் அவர்கள் ஒடுக்கு முறைக்கும் ஒடுக்குமுறையாளர்களுக்கும் ஆதரவாகவே நடந்து வந்தார்கள். அதனாலேயே அவர்களால் என்றுமே அரசியலை மக்கள் மயப்படுத்த இயலவில்லை. எங்களுக்கு வாக்குகளைத் தந்து பாராளுமன்றத்துக்கும் உள்ளுராட்சிக்கும் தெரிவு செய்யுங்கள். எல்லாவற்றையும் நாமே செய்து தருகிறோம் என்பது தான் அவர்களுடைய அணுகுமுறையாக இருந்து வந்தது. 1970இல் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்த காரணத்தினாலேயே ஒரு தமிழரசுத் தலைவர் தமிழ இளைஞர்களை உசுப்பி விட்டார். தமக்கு எதிரான பாராளுமன்ற எதிராளிகளைத் துரோகிகளாகக் காட்டி இல்லாதொழிக்கவும் விரல் காட்டினார். அடுத்த தேர்தலில் வாக்குக்களைப் பெற வேண்டியே தமிழரசுக் கட்சி விடுதலைக் கூட்டணியாகி தமிழீழம் பற்றிப் பேசியது. அன்று மாக்ஸிஸ லெனினிசவாதிகள் இதை சாத்தியமற்றது என அம்பலப்படுத்திய போது அவர்கள் மீது திரும்பவும் துரோகிகள் என்று அவதூறு பொழியப்பட்டது.

1977 தேர்தலில் யூஎன்.பியின் மாபெரும் வெற்றியும் சுதந்திரக் கட்சியின் படு தோல்வியும் அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவராகும் வாய்ப்பை உருவாக்கிய பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றி மாக்ஸிச லெனினிசவாதிகள் எச்சரித்தது உண்மை என்று விளங்கியிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கிறதிற்கு முன்னால், யூஎன்.பி ஆட்சி தனது திறந்த பொருளாதாரக் கொள்கையிலிருந்து கவனத்தைத் திருப்புகிற விதமான இனஒடுக்கலை அரச வன்முறையின் மூலம் தீவிரப்படுத்தத் தொடங்கிவிட்டது.

தமிழ் இளைஞர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் வகுத்த போராட்ட வரம்புகளை மீறி ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலைக்கு உள்ளானார்கள். ஆனாலும் அந்தப் போராட்டத்திற்கான அரசியல் வழிகாட்டல் பழைய பாராளுமன்றத் தேசியவாதத் தலைமையின் சிந்தனையிலிருந்து அடிப்படையில் விடுபடவில்லை.

முக்கியமாக மக்கள் போராட்ட அரசியல் என்பதை அவர்கள் ஏற்கத் தயாராயிருக்கவில்லை. முந்திய தலைவர்கள் "எங்களிடம் பொறுப்பைத் தாருங்கள் வென்று தருகிறோம்" என்று சொன்ன தோரணையிலேயே முக்கிய இளைஞர் இயக்கங்கள் ஒவ்வொன்றும் நடந்து கொண்டன. இலங்கையில் வெற்றி பெற்ற ஒரே வெகுஜன ஆயுதப் போராட்டமான சாதியத் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்திலிருந்து சரியான பாடத்தைக் கற்கத் தவறிய காரணத்தால், மக்களை நம்புவதற்குப் பதிலாக ஆயுதங்களையும் ஆட் பலத்தையும் நம்பினார்கள். அதற்கும் மேலாக, ஆயுதப் பயிற்சி, நிதி உதவி, இலவச ஆலோசனை என்று வழங்க முன்வந்த அந்நியர்களின் பின் செல்ல முற்பட்டார்கள். இதன் விளைவாக இயக்கங்களிடையில் மேலும் மேலும் வேறுபாடுகளும பகைமையும் போட்டியும்

> **வர்க்கமும் சாதியும்**
> **மறைக்கப்பட்டு**
> **நட்பு சக்திகள்**
> **நிராகரிக்கப்பட்டு**
> **துரோகிகள்**
> **பட்டியலிடப்பட்டு**
> **வென்று தருவோம்**
> **என்ற வாக்குறுதி**
> **அன்றும்**
> **இன்றும் தொடர்கிறது**

உருவாகின. அந்நிய எசமானர்களால் அவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக வைத்திருக்க முடிந்தது. தங்களது நோக்கத்துக்கு உடன்படாதவர்களுக்கு எதிராக அவர்களது இயக்கத்தவர்களது துப்பாக்கிகளையே திருப்ப முடிந்தது. இதிலிருந்து இன்று வரை இந்த இயக்கங்களின் பாரம்பரியத்தில் வந்தவர்கள் எதையுங் கற்றார்களா, இல்லை!.

மறுபுறம், விடுதலைப் புலிகளின் ஜனநாயகமின்மை, விடுதலைப் போராட்டச் சக்திகளைப் பலவீனப்படுத்தியது. சினேக முரண்பாடுகளைப் பகை முரண்பாடாக்கியதற்கு அவர்களை மட்டுமே குற்றஞ் சொல்ல இயலாது. என்றாலும் பகைமையான முரண்பாடுகளைக் கூட மக்களின் பங்குபற்றுதல் மூலம் பகைமையின்றித் தீர்க்க இயலும் என்பது வெகுஜன அரசியல் தருகின்ற பாடம். எதிரிகளுடன் நிற்பவர்களைக் கூட நடுநிலையாக்கவும் முடிந்தால் நண்பர்களாக்கவும் இயலும் என்பது ஐக்கிய முன்னணிப் போராட்ட அனுபவங்கள் கூறுகின்ற பாடம். அவைகளைத் தவறவிட்ட தமிழ்த் தேசிவாதம் குறுகிய நோக்கங்களின் மீதும் உயர் வர்க்க நலன்களின் மீதும் தங்கியிருந்ததன் விளைவுகள் எல்லா விடுதலை இயக்கங்களையும் பாதித்ததையே நாங்கள் காண முடிகின்றது.

தமிழ்த் தேசியவாத மரபின் இடதுசாரி எதிர்ப்பும் வலிய முதலாளிய நாடுகள் மீது (முக்கியமாகப் பிரித்தானியா, பின்பு அமெரிக்கா) இருந்த நம்பிக்கையும் இந்தியா பற்றிய வலிய எதிர்பார்ப்புக்களும் விடுதலை இயக்கங்கள் ஒவ்வொன்றையும் வெவ்வேறு அளவுகளில் ஊடுருவியிருந்தது. இன்று விடுதலைப் புலிகள் இந்தியா குறுக்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளா விட்டாலும் அவர்கள் சார்பில் பேசுகிறதாகக் காட்டிக் கொள்ளுகிற ஆய்வாயர்களும் கட்டுரையாளர்களும் இந்தியக் குறுக்கீட்டுக்கும் அதை இயலுமாக்குவதற்கும் தமிழக அரசியல் வாதிகள் இந்திய ஆட்சியாளர்களை வற்புறுத்துவதற்கும் சாதகமான எண்ணத்தை உருவாக்குவதில் தீவிரமாக இருக்கிறார்கள். சர்வதேச சமூகம் மனித உரிமை மீறல்கட்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஐ.நா கண்காணிப்பாளர்களோ பாதுகாப்புப் படைகளோ வரவேண்டும் என்றும் அடிக்கடி கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

இதில் வினோதம் என்ன வென்றால் முற்றிலும் எதிர்மாறான நோக்கங்கட்காக வெவ்வேறு குழுவினர் இந்தியக் குறுக்கீட்டை விரும்புவது தான். இந்தியாவோ எந்த அயல் நாடுமோ தனது நோக்கங்கட்காக மட்டுமே எந்த அயல் நாட்டின் உள் அலுவல்களிலும் குறுக்கிடுகிறது என்கிற உண்மை இவர்களுக்கு விளங்காமல் இருக்கலாம். விளங் கும் என்றால், தெரிந்து கொண்டே விலைகொடுத்து வினையை வாங்கித் தரப் பார்க்கிறார்கள். இப்போதெல்லாம் தமிழீழ விடுதலையை விட அதிகமாகப் பேசப்படுவது மனித உரிமை மீறல்கள் தான். பெரும் அழிவுகளின் நடுவே விடுதலைப் புலிகள் இடையிடை நடத்துகிற வெற்றிகரமான தாக்குதல்களின் போது இவர்களுடைய பேச்சின் தொனி கொஞ்சம் வேறுபடும்.

தமிழ் மக்கள் எல்லாரும் ஒரு குறிப்பிட்ட கட்சியையோ அல்லது இயக்கத்தையோ முற்றாகவும் வேறெதற்கும் இடமில்லாமலும் நம்ப வேண்டும் என்கிற அணுகுமுறை தமிழக தேசிய அரசியலின் பெரிய பலவீனமாக இருந்து வந்துள்ளது. ஆயினும் அதைவிடப் பெரிய பலவீனமாக இருந்து வருகிறது எதுவென்றால், அந்நியர்கள் பற்றிய எதிர்பார்ப்பாகும்.

நம்முடைய அனுபவங்களிலிருந்து மட்டுமில்லாமல் உலக மக்களுடைய விடுதலைப் போராட்டங்களிலிருந்தும் நாம் அந்நியக் குறுக்கீடுகள் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆனாலும், அவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டு, அந்நியர்களுடைய நோக்கங்களை மக்களுக்கு விளக்குவதற்கு மாறாக, அவைகளை மூடி மறைத்து மக்களின் எதிர்பார்ப்புக்களை வளர்க்கிற நோக்கிலேயே எல்லாத் தேசியவாதிகளும் செயற்பட்டு வருகிறார்கள். இவர்கள் தமிழ் மக்களை ஒரு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்கிற பேரில் இன்னொரு அடிமைத்தனத்திடம் கொண்டு போய்ச் சேர்க்கவா விரும்புகிறார்கள்?.

உள் முரண்பாடுகள் காரணமாக இந்திய மேலாதிக்க வாதிகளிடம் ஆளை ஆள் காட்டிக் கொடுத்ததும் இலங்கை அரசாங்கத்தின் படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அழிவிற்குப் பங்காற்றியது போதாது என்று மேலை ஏகாதிபத்தியத்துடனும் அதனுடைய கருவியான ஐ.நாவிடமும் தமிழ் மக்களைப் பலியிடப் போகிறார்களா?

இன்று தமிழ் மக்களுக்குத் தேவையானது ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையும் அவர்கள் துணிந்து முன்னெடுக்கக் கூடிய ஒரு மக்கள் விடுதலைப் போராட்டமுமே. அதற்கு சகல போராளி அமைப்புக்களினதும் அரசியற் கட்சிகளினதும் சுய விமர்சனப் பங்கு முக்கியமானது. போராட்டத்தை நெறிப்படுத்துவதில் அவர்களுக்கு உள்ள பங்கைப் போராட்டம் முழுவதற்கும் மேலான அதிகாரமாகக் கருதுகிற போது தான் தவறு நிகழுகிறது. அத்தகைய அதிகாரம் ஆதிக்கம் அற்ற சுய விமர்சனத்தை மக்கள் முன் செய்ய போராளி இயக்கங்கள் தயாராக உள்ளனவா?

அன்றைய தலைமை, எங்களிடம் விட்டு விடுங்கள் என்று சொல்லியது. ஒரு சமூகத்தின் விடுதலை என்பது எவரிடமும் விட்டுவிடக் கூடிய பொறுப்பல்ல. அதை அச் சமூகத்தின் விடுதலையை வேண்டி நிற்கும் பெரும்பா ன்மையான மக்கள் தங்களுடைய பொறுப்பில் ஏற்றாக வேண்டும். யாரும் அதை வழ ங்குவதற்காக ஒரு சமூகம் காத்திருக்க முடியாது.

போராடுகிற ஒரு சமூகத்தைக் காப்பாற்ற வெளியிலிருந்து ரட்சகர்கள் வருவார்கள் என்று காத்திருந்த காலம் முடிவுக்கு வர வேண்டும். மக்கள் இனிமேலும் வெளியார் யாரையும் நம்பிக் காத்திருக்க முடியுமா?

**-அபிமன்யு-**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் மக்களை ஏமாற்றும் கிணற்றுத் தவளைகள்

நமது வார ஏடுகளிற் பக்கங்கள் அதிகம். அவற்றை நிரப்புவதற்கென்றே சினிமா, ஆன்மீகம், இலக்கியம், அரசியல், வர்த்தகம், விளம்பரம், விளையாட்டு என்ற பல படைப் பிரிவுகளை ஒவ்வொரு ஏடும் வைத்திருக்கிறது. இதில் அரசியல் ஆய்வாளர்கள் வலு விஷேசம். சிலர் மூன்று வாரம், மூன்று மாதம் முன்னால் எழுதிய கதையையே வைத்து ஐந்து பந்தி நீளத்துக்கு அளப்பார்கள். பதிப்பாசிரியர் தன் பங்குக்குக் கொட்டை எழுத்தில் பரபரப்புத் தலைப்பு ஒன்றைப் போட்டால் பக்கம் நிரம்பிவிடும். விஷயம் தெரிந்து எழுதுகிறவர்கள் வெகு சிலர். தெரிந்தாலும் தெரிந்ததை எழுத முடியாமல் தவிக்கிறவர்கள் பலர். ஆனாலுங் கூசாமலே வாய்க்கு வந்தபடி பொய்களாகவே எழுதித் தள்ளுகிறவர்கள் போதியளவில் இருக்கிறார்கள்.

என்றாலுந் தமிழ் வாசகர்களுக்கு உலக அறிவு தேவை என்று நினைக்கிற தரவழிகளும் இருக்கிறார்கள். மாறாகத் தாங்கள் நம்பும் தலைவர்மாருக்கு எல்லாமே தெரியும் என்பதால் அது தேவை இல்லை என்று நினைக்கிறவர்களும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரகிருதிகள் தமிழ் மக்கள் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திலிருந்தோ நேபாள விடுதலைப் போராட்டத்திலிருந்தோ கற்க வேண்டும் என்கிற மாதிரி யாராவது எழுதினாற் போதும். அலறித் துடித்து "அபசாரம், அபசாரம். எல்லாரும் தமிழரின் விடுதலைப் போரிலிருந்து கற்க வேண்டிய நேரத்தில் யாரிங்கே தமிழர்கள் மற்றவர்களிடமிருந்து கற்க வேண்டும் என்பது?" என்று கர்ச்சிப்பதாக எண்ணிக் கொண்டு ஊளையிடுவார்கள். இவர்களில் ஒருவர் அண்மைக் காலமாக, இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளையும் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தையும் ஒன்றாகப் பிணைந்து குழைபலாக முன்வைத்து வருகிறார்.

இரண்டு வருடம் முந்தி இலண்டனிலிருந்து எழுதுவதாகப் பாவனை பண்ணிய இந்தப் புண்ணியவான், இப்போது இலண்டனிலிருந்து ஒரேயடியாகப் புலம்பெயர்ந்து விட்டார் போலத் தெரிகிறது. அவருடைய அண்மைய பத்தி ஒன்றில் ஜே.வி.பியை இப்போதைய இனவாதப் பாதையில் உசுப்பி விட்டிருப்பது சீனா தான் என்பதற்கு அவர் முன்வைத்திருந்த ஆதாரங்கள் ஜேர்மன் இலக்கியத்தில் வரும் பரன் வொன் முன்ச்சௌசன் என்ற புளுகு மன்னனையே அதிர வைத்திருக்கும். சீனா நேபாளத்தில் மாவோவாதிகளை வைத்து நேபாளத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயல்கிறது என்ற அவரது இன்னொரு அபார கண்டுபிடிப்பை அவரது பத்திரிகை மொழி பெயர்த்துப் "பரம இரகசியம்" என்று உறையின் மீது குறிப்பிட்டு அமெரிக்கத் தூதரகத்துக்கு அனுப்பி வைத்தால், சி.ஐ.ஏ க்குக் கற்பனை வளமுள்ள ஒரு புதிய உளவாளி கிடைப்பார். ஆனால் நமது வார ஏட்டுக்கு ஒரு உளறல் பத்தியாளர் நட்டம். இங்கே அதற்கா ஆட் பஞ்சம்? இலக்கியப் பத்தி என்று குப்பை கொட்டிக் கொண்டு சிலர் இருக்கிறார்களே. அவர்களில் யாரையாவது பிடித்துப் போடலாம். அவர்களால் பர்மாவின் சனநாயகப் போராளி அவுங்சான் சூ கி ஒரு சீன வம்சாவளி என்கிற மாதிரிப் புதிய 'பயனுள்ள' தகவல்களைத் தர இயலாதா? என்கிற விதமான ஆதாரங்களை உற்பத்தி செய்ய 'அவுங்சான் சூ கியின் கனவில் டெங்சியாவோபிங் இரகசியமாக வந்து போயிருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு' என்கிற விதமான ஆதாரங்களை உற்பத்தி செய்ய அதிகம் பயிற்சி தேவையில்லையே.

எனக்கு விளங்கக் கடினமாக இருக்கிறது என்னவென்றால், இந்தப் புண்ணியவானும் இன்னுஞ் சிலருஞ் சொல்லுகிறது போல இலங்கையின் மீது சீனாவும் பாகிஸ்தானும் செல்வாக்குச் செலுத்துகிறதால் இந்தியா தமிழர்கள் சார்பாகக் குறுக்கிடுவது தான் வழி என்று ஏன் இந்தியாவை ஆளுகிற மொக்கர்கட்கு விளங்கவில்லை என்பதுதான். ஊழல் மிக்க ஒரு அடக்குமுறை அரசாங்கம் நடத்துகிற போருக்கு ஏன் மொக்கர்கள் போல இந்தியாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு உதவுகின்றன? முன்னாள் லண்டன் நிபுணர் சொல்லுவாரா?

அமெரிக்கா என்ன செய்யும் என்பதைத் துருக்கியின் குர்திய விடுதலைப் போராளிகளிடங் கேட்டறியலாம். அல்லது பலஸ்தீன விடுதலைப் போராளிகளிடங் கேட்டறியலாம். சோமாலிய மக்களிடமும் எரித்திரிய மக்களிடமுங் கேட்டு அறியலாம். லத்தின் அமெரிக்காவின் ஒவ்வொரு நாட்டு மக்களிடமுங் கேட்டு அறியலாம். ஆனால் நம்முடைய ஆசாமிக்கு இரண்டு சிக்கல்கள். ஒன்று உலகின் போராடும் மக்கள் யாரிடமும் எதையுமே கற்கக் கூடாது என்று ஒரு முனிவர் அவருக்கு நிபந்தனை விதித்திருக்கிறார். மற்றது அமெரிக்காவுக்கு எதிராக எதையும் காதாற கேட்கவுங் கூடாது என்றும் ஒரு முனிவர் (அதே முனிவரோ தெரியாது) நிபந்தனை விதித்திருக்கிறார்.

இந்த முனிவர் கதையெல்லாம் எனக்கு எப்பிடித் தெரியும் என்று கேட்காதீர்கள். அவருக்குத் தகவல் தருகிற நம்பகமான வட்டாரங்கள் போல "முனிவர் நிபந்தனை விதித்திருக்கலாம்" என்று எனக்கும் தகவல் தர யாரும் இருக்கக் கூடாதா?

தெரிந்து கொண்டே மூர்க்கமான பொய்த் தகவல்கட்கு முக்கியத்துவம் தந்து பிரசுரித்து வருகிற சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் சிலரும் அவர்களை ஊக்குவிக்கிற முதலாளிமாரும் இந்த அரசியல் ஆய்வுக் கோமாளிகளை விட மோசமானவர்கள் என்பது என் திட்டவட்டமான அபிப்பிராயம். நாமென்ன செய்யலாம் என்கிறீர்களா? ஆதாரமில்லாத விடயங்களை வைத்துப் பத்திரிகை நடத்துவதில் சிங்கள நாளேடுகட்குத் தமிழ் நாளேடுகள் சளைத்தவையல்ல என்று தமிழரெல்லாம் பெருமைப்படலாமே! ஏனென்றால நாம் பெருமைப்படும்படி இந்த நாட்களில் எதுவுமே நடக்கவில்லை அல்லவா!

—ஆறுமுகம்—

# கம்யூனிஸ்ட் போராளி தோழர் பசுபதி

மாக்சிசம் பேசுவதும் கம்யூனிஸ்ட் கட்சியில இணைந்து செயலாற்றுவதும் சிலரது இளமைக் கால நிலைப்பாடாக மட்டுமே இருந்து வருவதாகச் சுட்டிக் காட்டுவோர இன்றும் இருக்கிறார்கள். அதாவது தொழில் திருமணம் குடும்பம் என வந்தவுடன் மேற கூறியவற்றைக் கைகழுவிக் கொண்டு விடுவார்கள். ஏனெனில் பழைமைவாதத்தை இன்றும் கெட்டியாகப் பற்றி நிற்கும் தமிழர் வாழ்வுக்கும் மாக்சிசம் கம்யூனிஸ சத்திறகும் எட்டாப் பொருத்தம் என கூறுவோர் இன்றும் இல்லாமல் இல்லை.

ஆனால் இவ் விதமான நிலைப்பாட்டை மறுத்து தமது இளமைக் காலம் முதல் முதுமையடைந்து இறுதி மூச்சு விடும் வரை கம்யூனிஸ்டாக வாழ்ந்து வந்தவர்களையும் இன்றும் வாழ்ந்து வருபவர்களையும் நம்மால் காண முடிகிறது. அவ்வாறு தனது 79ம் வது முதுமை வயதில் வாழ்ந்து வருபவர் தோழர பாலன பசுபதி. ஒரு நேர்மையான கம்யூனிஸ்டாகவும் போராளியாகவும் மககள் சேவையாளனாகவும் வாழ்ந்து வந்தவர்.

1929ம் ஆண்டு வடபுலத்தின் சங்கானையில் அடி மட்ட உழைக்கும் குடும்பத்தில் பிறந்த பசுபதி வறுமை இல்லாமை சமூகநீதி மறுப்புகளின் மத்தியில் வளர்ந்து வந்தவர். தானும் தனது குடும்பமும் அயலவர்கள் உறவினர்கள் படும் துன்பங் களுக்கு காரணம் கண்டறிய முற்பட்ட இளைஞரான பசுபதி அவற்றுக்கான மாற்றம் வேண்டியும் நின்றார். சாதிய ஒடுக்குமுறையும் தீண்டாமைக் கொடுமையும் அவரைக் கனலாக எரிய வைத்தது. இவை அனைத்திற்கும் மாக்சிச லெனினிசமும் கம்யூனிஸ்ட் கட்சியும் மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என நம்பினார். 1949ம் ஆண்டில் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் இயக்கத்திலும் அதன் பின் கட்சியின் உறுப்பினராகவும் தனது இருபதாவது வயதில் இணைந்து கொண்டார். அன்றிலிருந்து இன்று வரை தான் வரித்துக் கொண்ட மாக்சிச லெனினிசத்திலிருந்து வழி தவறாத ஒரு நேர்மையான கம்யூனிஸ்டாக வாழ்ந்து வருகிறார்.

தோழர் பசுபதி தனது வாழ்நாளில் எப்பொழுதும் போராட்டங்களின் முன்னணிப் போராளியாகவே இருந்து வந்துள்ளார். அவர் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எச் சந்தர்ப்பத் திலும் பார்த்து வாளாதிருந்ததில்லை. அநீதிகள் அடக்கு முறைகளைத் தட்டிக் கேட்டு மக்களுக்கான நீதி நியாயங்களுக்காக போர்க் குணத்துடன் வாதாடியும் போராடியும் வந்த ஒரு போராளித் தோழர்.

தோழர் பசுபதி வாழ்ந்து வந்த சங்கானைச் சந்தையடிக் கிராமத்திற்கு அண்மையில் அப்பிரதேசத்தின் பிரபல்யமான சுரட்டிப்பனை அம்மன் கோவில் அமைந்திருந்தது. அக்கோவிலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திருவிழா வழங்கப்பட்டிருந்த போதிலும் அம் மக்கள் உள்ளே சென்று வழிபட அனுமதிக்கப்படவில்லை. இதனை எதிர்த்து அப்பிரதேச தாழ்த்தப்பட்ட மக்களை அணி திரட்டி ஆலயப் பிரவேசப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் தோழர பசுபதி முன்னணியில் இருந்தார். அவ் ஆலயப் பிரவேசம் நீதிமன்றம் வரை சென்றது. பத்து வருடங்களின் பின் அதன் தீர்ப்பு கிடைத்தது. அதில் ஆலயத்திற்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்வதை நீதிமன்றம் அனுமதித்து தீர்ப்பு வழங்குகிறது.

1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியில் முன்னின்றவர்களில் தோழர் பசுபதியும் ஒருவர். அதனைத் தொடர்ந்து 1967ல் சங்கானைத் தேனீர்க் கடைப்பிரவேசப் போராட்டம் ஆரம்பமான போது அதற்கு தலைமை தாங்குவதிலும் தோழர் பசுபதி வகித்த பாத்திரம் முக்கியமானதாகும். புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை வழிகாட்டலில் சங்கானைப் போராட்டம் புரட்சிகர வெகுஜனப் போராட்டமாக முன் சென்றது. 1967- 69 வரை இடம் பெற்ற அப்போராட்டம் பல்வேறு அனுபங்கள் படிப்பினைகள் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களின் போராட்டங்களுக்கும் வழிகாட்டி எழுச்சியூட்டியது. இப்போராட்டம் சங்கானைப் பிரதேசத்தில் அமைந்திருந்த பல பகுதிகளின் தாழ்த்தப்பட்ட மக்களையும் ஐக்கியப்படுத்தியது. அவ்வாறே உயர் சாதியினர் எனப்படுவோர் மத்தியில் இருந்த ஜனநாயக முற்போக்கு சக்திகளை ஐக்கியப்படுத்தியது. அதே போன்று வலி மேற்கின் பல பகுதி மக்களையும் ஐக்கியப்படுத்தியது. இவற்றுக்கு மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட வேலை முறைகளை முன்னெடுத்த தோழர்களில் தோழர் பசுபதி எப்பொழுதும் முன்னணியில் இருந்து செயலபட்டார். அவர் இயல்பிலேயே போர்க் குணம் மிக்கவர். பசுபதி என்றால் அப்பிரதேசத்தில் பிற்போக்கு வாதிகளுக்கும் சாதிவெறியர்களுக்கும் சிம்ப சொற்பனமாக விளங்கியவர். ஆனால் தனது போர்க் குணத்தையும் வீர உணர்வுகளையும் தனிமனித வீரதீரத்திற்குப் பயன்படுத்தியது கிடையாது. கட்சியினதும் மக்களினதும் தேவைகள் நலன்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராகப் பயன்படுத்தி பிற்போக்குத் தனங்களை உடைத்தெறிவதில் தனது வீரத்தை புரட்சிகர வீரமாகப் பயன்படுத்தியவர்.

சங்கானைப் போராட்ட காலத்தில் தோழர் பசுபதி பல தடவைகள் பொலீசாருடன் மோதலில் ஈடுபட்டார். பல தடவைகள் பொலிஸ் கைதுக்கும் பொலீஸ் நிலையச் சித்திரவதைகளுக்கும் ஆளானார். பொன்னாலையில் குடி நீர் பெறுவதற்கான அப்பிரதேச தாழ்த்தப்பட்ட மக்கள் நடாத்திய போராட்டத்தின் போது அங்கு மக்கள் மத்தியில் வேலை செய்து வந்த தோழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்ட வேளை அவர்களில் பசுபதியும் ஒருவராக இருந்தார். சங்கானைப் போராட்டத்தின் உச்சக்கட்டத்தின் போது ஒரு பிரதான சாதிவெறியன் சுட்டுக்கொல்லப்பட்ட வேளை மூன்று போராளிகள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சுமார் 2 1/2 வருடங்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். அம் மூவரில் தோழர் பசுபதி ஒருவராவார். இறுதியில் அவ் வழக்கு கொழும்புக்கு மாற்றப்பட்டு உயர் நீதிமன்ற விசாரணையில் தள்ளுபடி செய்யப்பட்டது. அவ்வாறு சிறையில் இருந்த போது தோழர பசுபதி சங்கானைப் பட்டின சபையின் ஒரு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு கம்யூனிஸ்ட் போராளியாக இருந்த அதேவேளை சமூகம் சார்ந்த பல்வேறு மக்கள் பணிகளில் அவர் சளைக்காது ஈடுபட்டும் வந்தார். அதன் மூலம் அவர் பட்டின சபை உறுப்பினராகவும் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்தார். சங்கானைப் போராட்டத்தின் மத்தியில் உருவாக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் செயற்குழுவில் அங்கம் பெற்ற பசுபதி வடபுலத்தில் இடம் பெற்ற ஆலய தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்களில் கலந்து கொண்டு போராட்டங்களுக்கு உரம் சேர்த்தவர். குறிப்பாக 1968ம் ஆண்டின் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசத்திற்கான போராட்டத்தின் போது ஆலய முன்றலில் சாதிவெறியர்களும் பொலீஸ் படையும் ஒரு புறமாகவும்



போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மறுபுறமாகவும் ஏற்பட்ட மோதலில் தோழர் பசுபதியும் ஏனைய போராளிகளும் வகித்த நிலைப்பாடு இன்றும் நினைவில் நிழலாடச் செய்கிறது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் எஸ்.ரி.என். நாகரட்ணத்தைச் சூழ்ந்த சாதி வெறியர்கள் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் தாக்குதலில் ஈடுபட முயன்ற போது அதனை முறியடித்து சாதிவெறியர்களைப் போராடி விரட்டியவர்களில் தோழர்கள் பா. பசுபதி, கு.சிவராசா, எஸ். நவரட்ணம் ஆகியோர் முக்கியமானவர்களாக இருந்தனர் என்பது வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாகும்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான தோழர் பசுபதி ஒரு தொழிலாளியாகவே வாழ்ந்தவர். நேர்மையான ஒரு குடும்பத் தலைவனாகவும் தியாக அர்ப்பணிப்பும் புரட்சிகர வீரமும் கொண்ட கம்யூனிஸ்டாக வாழ்ந்தவர். அவரது துணைவியார் மாரிமுத்து கணவனின் கம்யூனிஸ்ட் வாழ்வுக்கு உறு துணையாக இருந்து வந்தவர். தோழர் பசுபதி சிறையில் இருந்த வேளையிலும் தலைமறைவாக வாழ்ந்த காலங்களிலும் பொலீஸ் கெடுபிடிகள் மிரட்டல்களுக்கும் மத்தியில் உறுதியாக இருந்து பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் கணவனுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கியவர். தோழர் பசுபதியும் அவரது குடும்பமும் போலித்தனமான ஆடம்பரங்களை விரும்பாதவர்கள். இன்றும் மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வருபவர் களாகவே அவர்களது குடும்பம் வாழ்ந்து வருகின்றது. இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்களில் பலர் பணம் பொருள் வசதிகள் பெற்றுக் கொண்டதன் மூலம் தம்மை மேன் நிலையாக்கத்திற்கு உள்ளாக்கி கடந்த காலங்களை மறந்தவர்களாகி வாழும் நிலை காணப்படுகிறது. அதேவேளை சிலர் தொடர்ந்தும் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார கல்வி சமூகப் பண்பாட்டுப் பிரச்சினைகளுக்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தும் வருகின்றனர். தோழர் பசுபதி இன்றும் தனது பிள்ளைகளின் பணம் பொருள் வசதி வாய்ப்புகளால் தனது கம்யூனிஸ்ட் வாழ்வையும் சிந்தனையையும் இழந்து விடாத ஒரு தோழராக வாழ்ந்து வருவது தான் அவரிடம் காணும் சிறப்பாகும். தனக்கான அவ் அடையாளத்தை இறுதிவரை பேணி வருவதன் மூலம் அவர் புதிய தலைமுறையினருக்கு சிறந்த முன்னுதாரணம் மிக்க கம்யூனிஸ்ட் போராளியாக தன்னை நிலை நிறுத்தி நிற்கின்றார்.

புதிய- ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டு விழாவில் (2003-07.25) தோழர் பசுபதியும் ஏனைய ஆறுமுத்த தோழர்கள் கட்சியால கௌரவிக்கப்பட்டனர். செஞ்சால்வை அணிவிக்கப்பட்டு கட்சியின் நட்சத்திரம் மத்தியிலான அரிவாள் சம்மட்டி பொறித்த விருது வழங்கிப் புரட்சிகர கௌரவம் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய தோழர் பசுபதியை கட்சியும் மக்களும் வாழ்த்துகின்றனர்.

—சி.கா.செ—

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகப் பார்வை

உலகோன்

## பயங்கரவாதிகள் யார் என்பது பற்றி

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில "அமெரிக்காவையும் அதன் நேச நாடுகளையும் எதிர்ப்பவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளே" என்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ். மொத்தத்தில் அவரின் கருத்துப்படி பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை எதிர்ப்பவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளே. இது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம என்ற முத்திரையுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும்.

இந்தோனேசியாவின் பாலித் தீவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்குக் காரணமானவர்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ள இந்தோனேசியாவின் முன்னணி மதத் தலைவர்களின் ஒருவரான அபூபக்கர் பசீர் "பாலிக் குண்டுவெடிப்பைச் செய்தவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. அவர்கள் பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள். உலகின் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் செய்யும் பயங்கரவாதத்தைத் தடுக்கும் முகமாக அவர்கள் எதிர்ப் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளிலேயே ஈடுபடுவதாகச் சொல்வதால் இவர்கள் யாருமே பயங்கரவாதிகள் அல்ல எனக் கொள்ளத்தான் முடியுமா?

## மனித உரிமையின் காவலர்கள்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆசியுடன் தேர்தல்கள் நடைபெற்றதாலும் இந்திய ஆசியுடன் புதிய பாராளுமன்றக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாலும் அங்கு ஜனநாயகம் மலர்ந்துவிட்டதாக எல்லோரும் சொல்கிறார்கள். அதனால் குவான்டனோமோ சிறைக்கூடத்திற்கு நிகரான சிறைக்கூடங்களை ஆப்கானிஸ்தான் எங்கும் அக்கறையுடன் பராமரித்து வருகிறது அமெரிக்கா. குறிப்பாக பக்ரான் விமானத் தளத்தில் (Bagran Airbase) உள்ள சிறைக்கூடம் உலகில் உள்ள மிக மோசமான சிறைக்கூடமாகச் சொல்லப்படுவது. எந்தவொரு அடிப்படை உரிமையும் இல்லாமல் கைதிகள் மிருகங்களை விடக் கேவலமாக நடாத்தப்படுகிறார்கள் என ஆப்கானிஸ்தான் மக்கள் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள்.

இதற்கிடையில் "சுதந்திரமான மனித உரிமைகள் ஆணைக்குழு" என்றவொரு அமைப்பு ஆப்கானிஸ்தானில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் தடுக்கவும் இவ் ஆணைக்குழு உதவும் என ஜனநாயகம் பேசும் நாடுகள் பாராட்டுகின்றன. ஆனால் இந்த ஆணைக்குழுவின் ஆணை மட்டுப்படுத்தப்பட்டது. உள்ளூர் யுத்தப்பிரபுக்களால் (Warlords) மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க மட்டுமே இவ் ஆணைக்குழுவுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்கக் காங்கிரசின் நிதியுதவியில் உருவாக்கப்பட்ட "சுதந்திரமான மனித உரிமைகள் ஆணைக்குழு" சுதந்திரமாக, அமெரிக்கப் படைவீரர்களின் மனித உரிமை மீறல்களை விசாரிக்குமா என்ன?

அவர்கள் மனித உரிமையின் காவலர்கள். மனித உரிமை மீறல்களுக்கெதிராக குரல் கொடுப்பவர்கள். பிற நாடுகளில் உள்ள மனித உரிமையின் காவலர்களுக்கு விருதெல்லாம் கொடுப்பவர்கள். அவர்கள் மனித உரிமை மீறல்களை செய்வார்களா? சீச்சீ அப்படி இராது என்று எங்களை நம்பும்படி அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் செய்வதும் இங்கே இவர்கள் செய்வதும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை மட்டுமே.

## கவனம் ஐயோ கவனம்!

தமிழ்த் தேசியம் என்றும் தமிழ் இனமென்றும் தமிழ் அடையாளம் என்றும் சொல்லிச் சொல்லி காலம் கடத்தியாயிற்று. தமிழ் தேசியவாதிகளே கவனம் ஐயோ கவனம்.

அமெரிக்காவின் உள்நாட்டு புலனாய்வு நிறுவனமான எப்.பீ.ஐ (FBI) உலகில் உள்ள மக்கள் தொடர்பிலான உடல்வாகு உடலமைப்பு முறைகளைக் கொண்ட மிகப் பெரிய தகவல் சேகரிப்புச் கோவையை (Database) உருவாக்கியுள்ளது. இதில் ஒவ்வொரு இனத்தினதும் தோற்ற மாதிரி, தோலின் மாதிரி எனப் பல வகைகளில் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. தற்போது வரை 1,50,000,000 மக்களது தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இதன் அடுத்த கட்டமாக உலகில் உள்ள எல்லா இனமக்களின் டி.என்.ஏ (DNA) மாதிரிகள் சேர்க்கப்படப் போகின்றன. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக உலகெங்கும் உள்ள அமெரிக்கச் சிறைகளில் இருப்போரது டி.என்.ஏ மாதிரிகள் அமெரிக்கப் படைவீரர்களால் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்படுகிறது. உலகை எல்லா வழிகளிலும் கட்டுப்படுத்த முயலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புதிய வழிமுறைகளில் ஒன்றாகவே இதைக் காணமுடியும்.

"இவை எல்லாம் நல்ல விடயங்கள். தமிழரை காப்பதற்கு அமெரிக்கா மேற்கொள்ளும் முற்காப்பு நடவடிக்கை, உச்ச அரசியல் சாணக்கியம்" என்ற தமிழ் தேசியவாதியின் ஈனக் குரல் ஒலிக்கிறது.

## சுனாமியும் கத்தரீனாவும்

'உலகில் சமத்துவம் பேணப்பட வேண்டும்' என்ற குரலை மிக நீண்ட காலமாகக் கேட்டு வருகிறோம். இது எந்த விடயத்தில் ஒத்துப் போகிறதோ இல்லையோ 'மக்கள் நலன் பேணும் அரசுகள்' என்று வரும் போது அமெரிக்காவும் இலங்கையும் சமத்துவம் பேணுகின்றன என்று நினைக்கும் போது மகிழ்ச்சி கொள்ள முடிகிறதா. சுனாமி தாக்கி 3 வருடங்கள் முடிந்துவிட்டது. கதரீனா தாக்கி 2 ½ வருடங்கள் முடிந்துவிட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உருப்படியாக எதையும் அரசாங்கம் செய்யவில்லை. தற்காலிக இருப்பிடங்கள் இன்னும் இருக்கின்றன. அவர்களின் வாழ்க்கை இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. இரண்டு நாடுகளிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் மட்டும் தொடர்ந்து நடக்கிறது. அரசாங்கங்கள் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மக்களை மீட்பதாகச் சொல்கின்றன. இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கத்தான் யாருமே இல்லை.

# பலஸ்தீனம்: மக்கள் நிமிர்ந்தனர், மதில்கள் சரிந்தன!



பலஸ்தீனத்தில் ஹமாஸ் இயக்கம் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, ஹமாஸ் பதவி வகிக்கிற அரசாங்கம் ஒன்று இருக்கக் கூடாது என்பதில் பலஸ்தீன அதிகாரசபையின் தலைவரான மஃமுத் அபாஸ், இஸ்ரேலிய ஆட்சியாளர்கள், அமெரிக்க ஆட்சியாளர்கள், அமெரிக்காவுக்கு உடந்தையான அரபு ஆட்சியாளர்கள் ஆகிய அனைவருமே குறியாக இருந்தனர்.

அவர்களது பல வேறு சூழ்ச்சிகளும் தோல்வியடைந்த நிலையில் ஹமாஸ் தலைமையிலான ஒரு கூட்டரசாங்கம் நிறுவப்பட்டது. எனினும் அந்த ஆட்சியைக் கலைப்பதற்குப் பல வேறு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

ஒரு புறம் ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் நடவடிக்கைகளை மேற் கொண்டது. பலஸ்தீன அதிகார சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட சில ஹமாஸ் பிரதிநிதிகளையும் அமைச்சர்களையுங் கூடச் சிறையில் வைத்தது. இன்னொருபுறம் அபாஸின் தூண்டுதலாலும் ஏற்கனவே இருந்த அரசியற் போட்டியாலும் ஹமாஸுக்கும் அல் ஃபதாஹ் இயக்கத்திற்கும் மோதல்கள் வலுத்தன. முரண்பாடுகளைச் சரிவரக் கையாளாத குற்றம் இருதரப்பிலும் இருந்தாலும் இம் மோதல்கள் அதிகாரத்திற்கானவை என்பது பற்றி ஐயமிருக்கவில்லை. மோதல்களைத் தீவிரப்படுத்துகிற விதமாகப் பலஸ்தீன அமைச்சரவையைக் கலைத்துத் தன்னுடைய விசுவாசி ஒருவரை அபாஸ் பிரதமராக நியமித்த பின்பு நிலைமைகள் மோசமாயின.

இருதரப்பினருக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கிற பேரில் அரபு நாடுகள் சில மேற்கொண்ட முயற்சிகள் பலஸ்தீனப் பிரச்சனையில் இஸ்ரேலிடம் மேலும் விட்டுக் கொடுப்புடன் நடக்குமாறு ஹமாஸை வற்புறுத்துகிறதற்காகவே மேற்கொள்ளப்பட்டன. அந்த முயற்சிகளால் தமது உள்நோக்கத்தை நிறைவேற்ற இயலவில்லை. எனினும் ஹமாஸும் அல் ஃபதாஹ் அமைப்பும் சுமுகமாகத் தமது பிணக்குகளைத் தீர்க்க உடன்பட்டன.

அந்த உடன்பாடு நிலைக்காமல் வேறு சக்திகள் செயற்பட்டன. அதன் விளைவாக மோதல் மிகவும் வளர்ந்தது. ஹமாஸ் தனது செல் வாக்கு அதிகமாக இருந்த காஸா பகுதியிலிருந்து அபாஸ் ஆட்சிக்கு ஆதரவாயிருந்த அல் ஃபதாஹ் அமைப்பின் போராளிகளை விரட்டி, காஸாவைத் தனது பூரண கட்டுப் பாட்டுக்குட் கொண்டு வந்தது. மறுபுறம் "மேற்குக் கரைப்" பகுதி யில் அபாஸ் தனது ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஹமாஸுக்கு ஆதரவானவர்களைப் பழிவாங்குகிற நடவடிக்கைகளை முடுக்கி விட்டார். ஹமாஸுக்கு ஆதரவாக யாரும் வாய் திறக்க இயலாத விதமாக அவரது ஆட்சியின் கட்டுப்பாடு அங்கு அமைந்தது.

மேற்கூறிய பின்னணியிலேயே காஸாவின் மீது இஸ்ரேல் தனது கடும் நடவடிக்கையை முன்னெடுத் தது. ஹமாஸ் போராளிகளை (முன்னர் அல் ஃபதாஹ் போராளிகளை இலக்கு வைத்தது போல) இலக்கு வைத்துத் தாக்குவதும் அதேவேளை மக்களது நலன்களைப் பாதிக்கிற விதமாகப் பொது மக்களின் பாவனைக்குரிய கட்டிடங்களையும் மின்சார உற்பத்தி நிலையங்களையும் தாக்கிச் சேதப்படுத்துவதும் தீவிரப்படுத்தப்பட்ட அதேவேளை, பலஸ்தீனத்தின் மீது கடுமையான பொருளாதாரத் தடையொன்றையும் இஸ்ரேல் விதித்தது. முக்கியமாக எரிபொருள் மீதான தடை காஸாவில் நீர் வழங்கல் சேவைகள் உட்படப் பலவற்றையும் பாதிக்கத் தொடங்கியது. இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்தால் மக்களின் அதிருப்தி, ஹமாஸை நோக்கித் திரும்பும் எனவும் ஹமாஸ் ஒரு பொதுவான இயக்கமாக விருத்தி பெறும் வாய்ப்பு மறுக்கப்பட்டு மறு படியும் ஒரு இஸ்லாமிய தீவிரவாத, பயங்கரவாத இயக்கமாக அடையாளப்படுத்தப்படக் கூடிய நிலை ஏற்படலாம் என்றும் அரசியல் அவதானிகள் சிலர் கூறினர். இதுவே இஸ்ரேலின் எதிர்பார்ப்பாகவும் இருந்திருக்க நியாயமுண்டு.

ஹமாஸ் இன்று முடக்கப்படுவது பலஸ்தீன மக்களின் போராட்ட உணர்வுக்குக் கிடைக்கும் ஒரு பலத்த அடியாகலாம் என்பதே பலஸ் தீன மக்களின் எதிரிகளதும் அபாஸ் தலைமையினதும் அல் ஃபதாஹ் அமைப்பிலுள்ள 'மிதவாதிகள்' எனப்படுகிறவர்களதும் எதிர் பார்ப்பாக இருந்தது. ஹமாஸால் இஸ்ரேலியப் பொருளாதாரத் தடையை இன்னும் எத்தனை வாரங்கட்குத் தாக்குப் பிடிக்க இயலும் என்றோ எத்தனை மாதங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியும் என்றோ தான் அரசியல் ஆய்வாளர்கள் தங்களது கணிப்புக்களைச் செய்து கொண்டிருந்தனர்.

ஆனாலும் எல்லாரது கணிப்புக்களையும் பொய்ப்பிக்கிற விதமாகப் பலஸ்தீனத்தின் மக்கள், காஸா நிலப்பரப்பில் வாழுகிறவர்கள், துணிகரமான ஒரு காரியத்தில் இறங்கினார்கள். ஜனவரி 23ஆம் நாள் காஸாவையும் எகிப்தையும் பிரிக்கிற உயரமான தடித்த உருக்குத் தகட்டாலான வேலியையும் கொங்கிறீற் சலாகைகளிலான சுவரின் ஒரு பகுதியையும் விழுத்தினர். இது 2006 ஜனவரி முதல் இஸ்ரேல் காஸா மீது பிரயோகித்து வந்த பொருளாதாரத் தடைகளின் மீதான ஒரு பலமான பதில் தாக்குதல் என்பதை எல்லாரும் அறிவார்கள். எனினும் சப்பைக் கட்டுக் கட்டுகிற விளக்கங்கள் பலவும் இன்னமும் வந்தபடியே உள்ளன.

இஸ்ரேல் விதித்த பொருளாதார, எரிபொருள் தடைகள் பற்றிய உலக அபிப்பிராயம் இஸ்ரேலுக்கு மேலும் சங்கடத்தை ஏற்படுத்த முன்னரே பிரச்சனை இப்படித் தீர்ந்து விட்டது என்றும் விளக்கங்கள் தரப் பட்டுள்ளன. இவ் வகையில் எகிப் திய சர்வாதிகாரி முபாரக்கிற்கும் இது ஆறுதல் தருகிற விடயம் என்றுஞ் சொல்லப்பட்டது. பலஸ்தீன நிர்வாகத்தின் தலைவருக்கும் அவருக்கு எதிராக மக்களின் உணர்வுகள் திரும்பாமல் தடுக்க இது உதவியாயுள்ளது என்றுஞ் சொல்லப்பட் டுள்ளது. மேலோட்டமாகப் பார்த் தால் இவற்றிற் கொஞ்சம் உண்மை இருப்பதாகத் தோன்றும். ஆனால், இத்தரப்பினர் யாவரும் எதிர்பார்த்தது நடக்கவில்லை என்பதே முக்கியமான உண்மையாகும். ஹமாஸ் பலவீனப்பட்டு மக்களிடையே செல்வாக்கிழக்கும் என்ற எதிர்பார்ப்பில் மண் விழுந்துள்ளது.

இதன் விளைவாகவே, பலஸ்தீனர்கள் எகிப்துக்குள் அளவுக்கதிகம் வந்து போகாதவாறு தடுப்பது பற்றி முபாரக் பேசியுள்ளார். இந் நிகழ்வின் பின்பு எகிப்தியப் படையினருடன் காஸா வாழ் பலஸதீனர் மோதியுள்ளனர். இதுபோல மேலுஞ் சில சம்பவங்களை உரு வாக்கி மறுபடியும் எல்லை முழுவதையும் மதிலாகவே கட்டுகிற வாய்ப்பும் எல்லை நெடுகிலும் வலுவான காவலை வைப்பதும் சாத்தியமானவையே.

எவ்வாறாயினும் இந்த நிகழ்வின் அடிப்படையில் காஸாவின் மக்கள் பெரும்பாலானோர் மேற்குக் கரை மக்களுடனான அரசியல் முரண்பாடு கடந்தும் அப்பால் ஒரு போராட்ட ஒற்றுமையை வளர்க்கும் வாய்ப்பு உண்டு. வீண் மோதல்களைத் தவிர்ப்பதன் மூலம் அமெரிக்காவின் கைப்பாவையாகவும் இஸ்ரேலின் இழுப்புக்கு வளைந்து கொடுப்பவராயும் உள்ள அபாஸ் ஆட்சியில் உள்ளவர்களையும் அவர்கள் போன்ற சிறுபான்மையினரையும் மேலும் தனிமைப்படுத்த முடியும்.

இந்த நிகழ்வு பலஸ்தீன மக்களின் மாபெரும் வெற்றி என்பதில் ஐயமில்லை. இதன் முக்கியத்துவம் ஏதெனில், இந்த எல்லை வேலியும் மதிலும் மக்களாலேயே தகர்க்கப்பட்டன என்பது தான். இஸ்ரேலைப் பணிய வைத்துப் பேச்சுவார்த்தைக்கு இணங்கச் செய்த இன்ற்றி ஃபாடா என்கிற எதிர்ப்பியக் கத்தின் தன்மையிலேயே இந்தத் தகர்ப்பும் நடந்துள்ளது. இதன் அதி சாதகமான அம்சம் மக்களின் ஒற்றுமையும் போராட்ட உணர்வுமே. இத் தகர்ப்பை ஹமாஸ் போராளிகள் மட்டுமே செய்திருக் கலாம். ஆயினும் மக்கள் முன்னின்று செய்ததன் மூலம் அதைப் பற்றி யாரும் வெளிவெளியாகக் கண்டிக்க இயலாத ஒரு சூழ்நிலை உருவாகிவிட்டது. இதன் மூலம் தாங்களே செய்தார்கள் என்று சொல்லிப் பெருமையும் உரிமையுங் கொண்டாடுவதை விடப் பெரியதொரு அரசியல் வெற்றி இம் மக்களது நடவடிக்கையால் ஹமாஸுக்குக் கிட்டி உள்ளது.

இந்த அத்திவாரத்தின் மீது ஹமா ஸின் எதிர்கால அரசியல் அமையு மானால் ஹமாஸின் ஒரு பகுதியினரின் மூர்க்கத்தனமான மதத் தீவிரவாதமும் அல் ஃபதாஹ் அமைப்பின் தலைமையில் உள்ள சந்தர்ப்பவாதிகளும் ஓரங்கட்டப்பட வாய்ப்புண்டு. அது பலஸ்தீன விடுதலைக்கு ஒரு புதிய வேகத்தை வழங்கும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மத்திய வங்கியின் புள்ளி விபரமும் வறுமையின் வளர்ச்சியும்

இவ் வருட பொருளாதார வளர்ச்சி 7 வீதமாயிருக்கும் என முன்பு எதிர்வு கூறியிருந்த மத்திய வங்கி தற்போது 6.7 வீதமாயிருக்கும் எனக் கூறுகிறது. இத்தகைய முன்னுக்குப் பின் முரணான புள்ளி விபரங்களை வெளியிடுவது மத்திய வங்கிக்குப் பழக்கப்பட்ட ஒன்றாகியுள்ளது. ஆளும் வர்க்க த்தின் பொருளாதார வளர்ச்சி என்ற செப்படி வித்தையை மூடிக் கட்டி மக்களை ஏமாற்றுவதே மத்திய வங்கி வெளியிடும் புள்ளி விபரங்களின் தன்மையாகும். இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 51 வீதத்தை மேல் மாகாணம் கொண்டுள்ளது. முதலாளித்துவ நாடுகளில் பொருளாதார வளர்ச்சியென்பது நகரங்களை மையமாகக் கொண்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். முதலாளித்துவ அமைப்புள்ள நாடுகளில் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன. ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற்றுள்ள அமெரிக்காவும் இதற்கு விதிவிலக்கல்ல.

2006ஆம் ஆண்டு தலா வருமானம் 1410 டொலர்கள் எனத் தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ரால் மேற்கு மாகாணத்தில் தலா வருமானம் 2000 டொலர்களாக விளங்கியதாகக் கூறுகிறார். எனினும் ஏனைய மாகாணங்களில் தலா வருமானம் 730இல் இருந்து 790 டொலர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மிலேனியம் வளர்ச்சி இலக்கு பற்றிய கடைசித் தகவல்களின்படி ஆசியப் பிராந்தியத்தில் அதி உயர்ந்த சமத்துவமற்ற நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடத்தில் உள்ளது. அந்த அறிக்கையின்படி வறுமையும், சுற்றாடல் சீரழிவும் இலங்கையில் அதிகரித்துள்ளது. மிலேனியம் வளர்ச்சி இலக்கு 2007ல் ஆசிய பசிபிக்கில் அதன் முன்னேற்றம் என்ற தலைப்பில் புள்ளி விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைய வருடங்களில் பொருளாதார வளர்ச்சியென்பது வறிய மக்களைச் சென்றடையவில்லை. ஆசிய நாடுகளில் பாரிய ஏற்றத் தாழ்வான வாழ்க்கைத் தரம் உடைய நாடுகளில் இலங்கை நாலாம இடத்தில் உளளது. ஆசியாவில் சமத்துவம் இன்மை பாரிய இடைவெளியாகியுள்ளது.

1990களில் தினம் ஒன்றிற்கு ஒரு அமெரிக்க டொலர் வருமானத்தில் (இன்றைய கணக்கின்படி ஒரு டொலர் என்பது 110 ரூபாவாகும்.) சனத்தொகையில் 3.8 வீதமான மக்கள் வாழ்க்கையைக் கொண்டு நடாத்தினர். 2002இல் 5.6 வீதமான மக்கள் தினமொன்றிற்கு ஒரு டொலர் வருமானத்தைப் பெற்றனர். வறுமைக் கோட்டில் உள்ள மக்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது. தேசிய வருமானத்தில் வறிய மக்களுக்கு இருந்த பங்கானது சுருங்கிக் கொண்டு



போகின்ற வேளை செல்வந்தர்கள் மேலும் மேலும் பெரும் செல்வந்தர்களாகியுள்ளனர். 20 வீதமான வறிய மக்களுக்கு 1990களில் 9 வீதமான தேசிய வருமானமே கிடைத்தது. 2000ஆம் ஆளவில் அது 7 சதவீதமாகச் சுருங்கிவிட்டது.

2000ஆம் ஆண்டிற்கான விபரத்தின்படி மூன்று மாதத்திற்கும் 5 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகளில் 30 சதவீதமான குழந்தைகள் எடை குறைந்து காணப்பட்டனர்.

2001-2003ஆம் ஆண்டுகளில் சராசரியாக முழுச் சனத்தொகையில் 22 சதவீதமான மக்கள் போசாக்கு குறைந்து காணப்பட்டனர்.

சூழலில் நாம் வறுமையடைகிறோம்

காடுகள் குறைவடைந்து போகும் அதேவேளை கரியமில வாயு வெளியேற்றம் அதிகரித்த வண்ணமுள்ளது. 1990களில் காடுகளால் சூழப்பட்ட நிலம் 36 வீதமாயிருந்தது. 2005ஆம் ஆண்டளவில் காடுகள் 29 சதவீதமாகச் சுருங்கிவிட்டது. 1990க்கும் 2004ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தலா 0.2 மெற்றிக்தொன் கரியமில வாயு வெளியேற்றத்திலிருந்து 0.6 மெற்றிக்தொன்களாக அதிகரித்துள்ளது. அதாவது மூன்று மடங்கால் கரியமில வாயு வெளியேற்றம் அதிகரித்துள்ளது.

ஆசிய நாடுகளில் வளங்களுக்குப் பற்றாக்குறையில்லை. தேசிய வருமானத்தைப் பங்கிடுவதில்தான் சிக்கல்கள் உள்ளதென இலங்கைக்கான ஐ.நா வதிவிட இணைப்பாளர் நீல் வூனே கூறுகிறார்.

5 சதவீதமான மக்கள் தினமொன்றிற்கு ஒரு டொலர் வருமானத்துடனும் 40 சதவீசமான மக்கள் 2 டொலர்களுக்கு குறைவான வருமானத்திலும் வாழ்கிறார்கள். வேறு வகையில் சொல்வதானால் நாட்டு மக்கள் அரைவாசிப் பேர் வறியவர்களாகவுள்ளனர் என்பதுதான் கசப்பான உண்மை. இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறி அறுபது வருடங்களாகிய பின்பு நாட்டின் நிலைமை இவ்வாறுதான் உள்ளது. கடந்த மூன்று தசாப்த காலத்தின் உலகமயமாதலின் கீழான தாராள தனியார் பொருளாதாரத்தின் கீழ் செல்வந்தர்கள் மேன் மேலும் செல்வந்தர்களாகி உள்ளனர். அதேவேளை ஏழைகள் மேலும் ஏழைகளாகியுள்ளனர். கீழ் நடுத்தர வர்க்கத்தினர் மேன்மேலும் கீழே தள்ளப்பட்டே வந்துள்ளனர். இதனை ஏகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் விவசாயிகளின் வாழ்க்கைத்தர வீழ்ச்சி எடுத்துக்காட்டி வருகின்றது.

அதற்கு அடிப்படைக் காரணம் ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் கொண்ட இன்றைய பொருளாதார அரசியல் சமூக அமைப்பு முறையாகும். கொலனித்துவ காலத்தின் தொடர்ச்சியாகத் தொடரப்படும் இவ் உளுத்துப் போன அமைப்பானது ஏகப் பெரும்பாண்மையான மக்களுக்குப் பாதகமானதாகவே அமைந்துள்ளது. இது அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டியது. அம் மாற்றத்தைப் பாராளுமன்றப் பாதையால் கொண்டு வர முடியாது. மாற்றத்திற்கான மாற்றுவழி புரட்சிகர வெகுஜன எழுச்சிக்கும் புரட்சிக்கும் பரந்து பட்ட மக்களை அணி திரட்டுவதேயாகும். அந்த வழிமுறை இலகுவானதொன்றல்ல என்ற போதிலும் அதனை விட வேறு மார்க்கம் இருக்க முடியாது.

– [illegible] –

# ஏகாதிபத்தியப் பின்னணியை ஆராயும் நூல்



தேசிய இனப் பிரச்சனையில் ஏகாதிபத்தியங்களின் சதி, சபா. நாவலன், வெளியீடு: தேசம்- சர்வதேச தமிழ் சஞ்சிகை லண்டன் டிசெம்பர், ப.104 இந்திய ரூ.45.00

நூல் தலைப்புக் கூறுவது போல, தேசிய இனப் பிரச்சனைகளை உருவாக்குவதிலும் தேசிய இனப் பிரச்சனையைத் தீவிரப்படுத்துவதிலும் அவற்றின் மூலம் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்துவதிலும் ஏகாதிகத்தியத்தின் நடைமுறையை இந்நூல் இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையை மையப் படுத்தி விவரிக்க முற்படுகிறது.

நூலாசிரியரின் குறிப்பான அரசியல் அனுதாபங்களும் தமிழ்த் தேசியவாதப் பின்னணியும் தம்மை நூல் நெடுகிலும் தெளிவாகவே அடையாளப்படுத்தினாலும் பலவாறான தமிழ்த் தேசியவாதிகள் முன்வைக்கிற வரலாற்று ஆய்வுகளிலிருந்து இந்த நூலின் தெளிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு இதனை வேறுபடுத்துகிறது. அது போலவே நூலாசிரியர், தமிழ்த் தேசியப் பாரம்பரியத்திற்குரிய, இடதுசாரிக் கட்சிகட்கு எதிரான நிலைப்பாடுகளிலிருந்தும் கணிசமாக விடுபட்டு நிற்பதும் கவனிக்கத்தக்கது

எவ்வாறாயினும் வரலாற்றை ஆய்வதற்கு நூலாசிரியர் கையாண்டுள்ள தகவல்களும் விளக்கங்களும் குறைபாடானவை. அக் குறைபாடுகள் நூலிலும் தொற்றிக் கொண்டுள்ளமை வருந்தத் தக்கது.

திரிபுவாதிகளும் மாக்ஸிய லெனினியர்களும் முதலாக ஜே.வி.பி வரையிலான இடதுசாரிகள் தேசிய இனப்பிரச்சனையை வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்ளத் தவறியுள்ளனர் என்று (ப. 17) கூறுகிற போது தவறாகவே பொதுமைப் படுத்தப்படுவது போக அதற்கான உசாத்துணை ஆதாரம் எதுவுமே தரப்படவில்லை. இவ்விடத்து நூலாசிரியர் தமிழ்த் தேசியவாதிகளது வரலாற்றுப் புனைவுகளையே அதிகஞ் சார்ந்திருப்பதாகத் தெரிகிறது. 22வது பக்கத்தில் தேசிய முதலாளிய வர்க்கம் இலங்கையில் இருந்ததாகக் கூறிய 'மாஓ சார்பு தேசிவாதிகள்" குழப்பமாகச் சிந்தித்ததாகக் கூறுகிற நூலாசிரியர் அதற்கு அடுத்த பக்கத்தில் மூன்றாமுலகின் தேசிய முதலாளிகள் அந்நிய முதலாளிகளுடன் சமரசம் செய்வது தவிர்க்க இயலாதது என்கிறார். இதையே தான் மாக்ஸிய லெனினியவாதிகள் கூறுகிறார்கள். தேசிய முதலாலித்துவம் என்பது நிலையான நிலைப்பாடுள்ள நிரந்தரமான ஒரு வர்க்கமல்ல. அதனால் அவர்கள் இல்லாமற் போவதில்லை.

6ஆம் நூற்றாண்டு வரை சிங்களம் என்ற மொழி பேசப்பட்டதற்கு ஆதாரமில்லை என்பது மொழிகளின் வரலாறு பற்றித் தெரியாதோர் சிலரது கூற்று. சிங்களம் தமிழினின்றும் பாளியினதும் கலப்பால் உருவானது என்ற கருத்தும் பலவீனமானது. இவை மிகவும் அகச் சார்பான கூற்றுக்கள். சிங்களத்தில் தமிழின் செல்வாக்கு கூடுதலாக மிக உண்டு. அதே அளவுக்கு தமிழ் உட்பட்ட தென்னிந்திய மொழிகளில் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு உண்டு. இது போன்ற விடயங்களில் நூலாசிரியர் வேறு உசாத்துணைகளது உதவியை நாடியிருக்கலாம்.

இவ்வாறே ஆரியர் தத்துவம் என்பதும் ஆரிய – திராவிட வேறுபாடும் பிரித்தானிய ஏகாதிபத்திய நோக்கிற் புகுத்தப் பட்டவை என்ற விதமான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. பிரித்தாளும் சூழ்ச்சியை எல்லாவிடத்தும் தேடுகிற போது நாம் தவறான முடிவுகட்கும் வரலாம். இந்தியா என்பது பிரித்தானிய ஆட்சிக்குட்படும் வரை ஒரு நாடே அல்ல. அசோகனின் கீழும் மொகலாயரின் கீழிருந்தவை சாம்ராஜச்சியங்களே ஒழியப் பெரிய தனி நாடுகளல்ல. சோழச் சாம்ராச்சியமும் அவ்வாறே. எதுவுமே இன்றைய இந்திய நிலப்பரப்பின் முழுமையையும் அதிகாரத்திற்குட்படுத்தவில்லை. எனவே ஏகாதிபத்தியம் பிரித்தாளுவதற்கு வசதியாக எத்தனையோ கருவிகள் இருந்தன. உண்மையில் ஆரிய – திராவிடம் என்பது பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான சக்திகளைப் பலவீனப்படுத்த அதிகம் உதவவில்லை. தனித் தமிழ் இயக்க முன்னோடிகள் சிலர் ஆங்கிலேயப் பற்றாளர்களாயிருந்தனர். இந்து – முஸ்லிம் முரண்பாடு பயன்பட்ட அளவுக்கப்பால் எதுவுமே பயன்படவில்லை. இலங்கையின் ஆரிய-சிங்கள, சிங்கள-பௌத்த மயக்கங்கள் பற்றியும் குழப்பமான கருத்துக்கள் உள்ளன. இவை அகச்சார்பான வரையறுக்கப்பட்ட வாசிப்பின் விளைவுகளாகவே தெரிகின்றன.

இடதுசாரிச் சிந்தனை பற்றி நூலாசிரியரது அறிவின் போதாமை "...தனிநபர் வழிபாட்டையே மக்கள் தத்துவமாகக் கருதிய இடதுசாரிகள்" போன்ற வாக்கியங்களினூடு தெரிகிறதோடு அவற்றின் தோற்றுவாய் தமிழ்த் தேசியவாதிகளது வியாக்கியானங்களே என்றும் எண்ணத் தூண்டுகின்றன. (ப.76) தமிழர் விடுதலைக் கூட்டணி அமிர்தலிங்கத்தின் தலைமையின் போது நிலப்பிரபுத்துவக் கூறுகட்கும் அந்நிய மூலதனத்திற்கும் எதிரான போக்குகளைக் கொண்டிருந்ததாகவும் நூலாசிரியர் கூறுகிறார். தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தமிழரசுக் கட்சியுடன் சில இடங்களிற் குழப்பிக் கொண்டாற் போலத் தெரிகிறது.

இயக்கங்கள் பற்றிய குறிப்புக்களில் விடுதலைப் புலிகளின் தவறான செயல்கள் கூறப்பட்டுள்ளன. அவர்கள் 'பாஸிச வாதிகள் என்றுங் கூறப்பட்டுள்ளது. ஆயினும் 1987-90 காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் நடந்து கொண்ட விதம் பற்றி ஒரு விமர்சனமும் இல்லை. இங்கே நூலாசிரியர் தமிழ்த் தேசியவாத இயக்கங்கட்கும் இடதுசாரி இயக்கங்கட்கு முள்ள அடிப்படையான ஒரு வேறுபாடு உட்கட்சி சனநாயகமும் மக்கள் போராட்டமும் பற்றியது என்பதைத் தவறவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் ஏகாதிபத்தியம் பற்றியும் உலகமயமாதல் பற்றியுமான தெளிவான ஒரு பார்வையை நூலாசிரியர் கொண்டுள்ளமை மெச்சத்தக்கது.

இந்நூலை அவர் தேசிய இனப் பிரச்சனை பற்றிய வரலாறு தொடர்பான புதியபூமி வெளியீடுகள் சிலவற்றின் துணையுடனும் புதிய- ஜனநாயகக் கட்சியின் அரசியல் அறிக்கைகளின் துணையுடனும் மீள வாசித்தால் மேலுந் தெளிவும் தகவல்களின் செம்மையும் கொண்ட இன்னொரு பதிப்பைக் கொண்டுவர இயலுமாயிருக்கும்.

– [illegible] –

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மறைந்த படைப்பாளி செ. யோகநாதனின் எழுத்தும் வாழ்வும்



அண்மையில் காலஞ் சென்ற படைப்பாளி செ. யோகநாதன் இலங்கை முற்போக்கு எழுத்து இயக்கத்தின் மிக முக்கியமான ஒரு எழுத்தாளராகவும் செயலூக்க மிக்க ஒரு இலக்கியச் செயற்பாட்டாளராகவும் இருந்தவர். அவர் மாணவப் பருவத்திலேயே மார்க்சிச இயக்கச் சிந்தனையால் ஈர்க்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் பற்றியும் பிற சமூகப் பிரச்சனைகள் பற்றியும் தொழிலாளி வர்க்கச் சார்பாகவும் சமூக நீதியை வற்புறுத்தியும் எழுதி வந்தார். அவரது எழுத்தின் வலிமையும் நேர்மையுங் காரணமான இடதுசாரி எழுத்தாளர்களை வெறுத்து நொட்டை சொல்லுகிறவர்களாற் கூட அவரைப் புறக்கணிக்க இயலவில்லை.

தான் ஒரு நல்ல படைப்பாளியாக உயர்வு பெறுகிறது என்ற நோக்கத்திற்கும் அப்பால் தான் சார்ந்த சிந்தனைக்குச் சாதகமான ஒரு படைப்பாளிகளின் அணியை உருவாக்க வேண்டும் என்ற தீவிரத்துடனும் அவர் இயங்கி வந்தார். இதன் விளைவாக மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கியவாதிகளுடன் இணைந்து அவர் வசந்தம் என்ற சஞ்சிகையின் ஆசிரியராகச் செயற்பட்டார். ஓராண்டு காலமாகத் தனது கடும் உழைப்பின் மூலம் இலங்கையின் முக்கியமான ஒரு தமிழ்ச் சஞ்சிகையாகவும் அதேவேளை புரட்சிகர இடதுசாரி முற்போக்குச் சிந்தனைகட்கான காத்திரமான ஒரு களமாகவும் வசந்தம் அமைந்தது. பின்னர் தனது உயர்கல்விக்காக அவர் பல்கலைக்கழகம் சென்றதன் விளைவாக அவரால் வசந்தம் சஞ்சிகையைத் தொடர்ந்து நடத்த இயலவில்லை.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவின் பின்னணியில் திரிபுவாதிகள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைப் பிடித்தது மட்டுமன்றி அதன் செயற்பாட்டைத் தங்களது வங்குரோட்டுத் தனத்தால் பயனற்றதாக்கியும் தவறான நோக்கங்களுக்காகத் திசை திருப்பவும் முற்பட்ட வேளையில் வசந்தத்தின் வருகை நேர்மையான இடதுசாரிப் படைப்பாளிகளை ஊக்குவித்து ஒரு முக்கியமான பணியை ஆற்றியது. வசந்தத்தின் அடிச்சுவட்டிலேயே பின்னர் வேறு சஞ்சிகைகள் உருவாகிச் செயற்பட்டன என்றுஞ் சொல்லக்கூடியளவுக்கு யோகநாதனின் பணி முன்னோடியானது.

எனினும் படித்துப் பட்டம் பெற்று அரசாங்க உத்தியோக பெற்ற சில ஆண்டுகளில் அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் அவரது இடதுசாரிச் சிந்தனையிலும் பாதிப்பை ஏற்படுத்தின. அவரது கட்சி இயக்க அடிப்படையிலான செயற்பாடுகளும் குறைந்தன. ஒரு தனிமனிதராக குடும்பவட்டத்திற்குள் தனது தனிப்பட்ட உயர்வு பற்றிய அக்கறை அவரது சமூக அக்கறையை மேவியது. அதன் தவிர்க்க இயலாத ஒரு பகுதியாகவே அவரது சீரழிவு அமைந்தது. அச் சீரழிவை அவரது எழுத்திலும் அடையாளங்காணக் கூடிய அளவுக்கு அவரது சிந்தனை ஒடுக்கப் பட்ட மக்களின் சிந்தனையினின்று பெயரத் தொடங்கியது. இயல்பான உத்வேகத்தின் இடத்தை வலிந்து புனைகிற தன்மை பிடித்துக் கொண்டது.

தமிழ்த் தேசியவாதம் எழுச்சி பெற்ற போது அவர் அதன் பக்கம் சாயத் தொடங்கினார். அச் சாய்வில் சந்தர்ப்பவாதத் தன்மைகள் தெளிவாகவே தெரிந்தன. 1983 வன்முறைக்குப் பின்பு அவர் தமிழகத்திற்குச் சென்று குடியேறி வாழ்ந்த போது அங்கிருந்த வணிகச் சூழலில் அவர் சிக்கிக் மக்கள் சார்ந்த இடதுசாரி எழுத்தாளனுக்கு வெறுப்பூட்டுமோ அவை எல்லாம் அவருக்கு உடன்பாடான உறவுகளாயின. தமிழகத்தின் நேர்மையான இடதுசாரிச் சக்திகளின் தொடர்பு அவருக்கு கிட்டாதது அவரது பாதை தடம்புரண்டு போனதன் விளைவு என்பதில் ஐயமில்லை.

தமிழகத்திலிருந்து திரும்பி வந்த யோகநாதன் தனது படைப்புலக வாழ்வின் உச்சக்காலத்தில் இருந்த ஒரு படைப்பாளியின் மங்கலான ஒரு நிழல் என்றே கூற வேண்டும்.

யோகநாதனை விமர்சிக்கிற சிலர் அவரது தொடக்கக்கால இடதுசாரி அரசியலின் காரணமாக அந்தப் பங்களிப்பின் விளைவுகள் பற்றிய தமது அக வெறுப்பின் காரணமாக அவரைத் தாக்கி வந்தனர் என்பதில் நமக்கு ஐயம் வேண்டாம். இத் தாக்குதல் அவரது தனிப்பட்ட குறைபாடுகளை அவரது பிற் கால வாழ்வில் மோசமான பகுதிகளை முதன்மைப்படுத்தி அவற்றை அவரது இடதுசாரி அரசியலின் நேர்மையான காலத்துடன் பின்னி, எல்லா இடதுசாரிப் படைப்பாளிகளும் இரட்டை வாழ்க்கை வாழ்கின்றனர் என்று காட்டுவதற்குச் சில விஷமிகள் முயன்று வந்துள்ளனர். இது பற்றி யோகநாதனை மதிப்பிடுவோர், குறிப்பாக நேர்மையான இடதுசாரிகள் கவனமாக இருக்க வேண்டும்.

யோகநாதனின் சீரழிவு போல வேறு ~~பல~~ நல்ல இடதுசாரிகட்கும் நடந்துள்ளது. அதனால் அவர்கள் ஆற்றிய நல்ல பணிகளை நாம் மறுப்பதும் மறைப்பதும் தவறானது. அவரது படைப்புக்களையும் பணியையும் அவை வழங்கப்பட்ட காலம் அவற்றின் பலன் என்பனவற்றின் அடிப்படையில் உரிய மதிப்பு வழங்காமல் விடுவது ஏற்கத் தக்கதல்ல.

குறுகிய காலத்திற்குள், தனது தொடக்கக் காலத்தில், அவரது பங்களிப்பு காத்திரமானது. முற்போக்கு இலக்கிய இயக்கம் தடுமாறி நின்ற போது நல்ல படைப்பாளிகளை நெறிப்படுத்த உறுதுணையாயிருந்தன என்பன அவருக்கு ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் ஒரு நல்ல இடத்தை என்றென்றைக்கும் வைத்திருக்கும்.

மற்றவை மங்கி மறைந்து விடும்.

மார்க்சிசத்தில் இருந்து தொடங்கி தேசியவாதத்தில் முடிவை அடைந்தவர் யோகநாதன். அவரது எழுத்துக்கும் வாழ்வுக்கும் சொந்த அனுபவ சேகரத்துக்கும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை அர்த்தமும் குறிக்கோளும் இருந்தது. ஆனால் மாக்சியத்திலிருந்து பிறள்வடைந்து தமிழ்த் தேசியவாத நிலைக்குள் புகுந்து கொண்டதும் எழுத்தில் சந்தர்ப்பவாதத்திற்கும் சொந்த வாழ்வில் சீரழிவுகளுக்கும் உள்ளாக வேண்டியதாயிற்று. மறைந்த ஒரு படைப்பாளியை வெறும் புகழ்ச்சியாகவோ அன்றி இகழ்ச்சியாகவோ மதிப்பிடுவதற்கு அப்பால் அவரது ஆரம்ப முதல் முடிவுவரையான எழுத்தையும் வாழ்வையும் வைத்து சமூக நோக்கில் மதிப்பிடுவதே இளந் தலைமுறைப் படைப்பாளிகளுக்கு பயன்தருவதாக அமையும்.

-திருமுகன்-

## சிந்தித்துப் பார் பெண்ணே!

கலை

இரும்புக் கம்பிகளுக்குப் பின்
சற்றும் திறவாத சாளரங்களை
பலம் கொண்டு ஒரு முறை
திறந்து பார் பெண்ணே!
வெளியுலகம் எவ்வளவு
பரந்துபட்டுத் தெரிகிறது.
அங்கே நீ சாதிக்கவென
காத்துக் கிடப்பவை எத்தனை
அதை விடுத்து வெறுமனே
நாகரீக மோகத்தில் திளைத்து
சமத்துவம் பெற்றதாய் பிதற்றுவதா?
பூவென யாரும் புகழ்ந்தால்
புன்னகை புரிந்து வரவேற்பதா?
உள்ளார்ந்தம் புரியாத நீ.....
உண்மையை அறியாத நீ.......
ஒருமுறை சிந்தித்துப் பார்.
உச்சி வெய்யில் சுடும் போது
பூக்கள் படும் வேதனையை.........
பாலைக்காட்டு கள்ளிச் செடியென
வரண்டாலும் துவழாத குணம்
உனக்குள்ளும் வரவேண்டும்!
சாதிக்கத் துடிக்கும் உன் கரங்கள்
சற்றேனும் தளர்ந்து விடாது,
ஒரு புயலாக மாறவேண்டும்!
இல்லை, தீயாக எழவேண்டும்!
உனது ஆற்றலை உலகமே
வியந்து பார்த்து வியர்த்தும் போகும்!
சமத்துவம் பற்றி சரமாரியாக
சத்தமிட்டுக் கொள்வதால் மட்டும்
சமத்துவம் பெற்றிடமுடியாது.
சபதம் உள்ள பெண்ணாக
சாதிக்கவென ஒவ்வொரு பெண்ணும்
தலைநிமிர்த்திக் கொண்டால்......
பாரதி கண்ட புதுமைப் பெண்ணுக்கு
உதாரணம் காட்டிடலாம்
சுட்டு விரலுக்கு நேர்
ஒரு பெண் தெரியமாட்டாளா???

# 'உழைப்பால் உயர்ந்தவர்கள்' இருக்கிறார்களா?

இரா. சடகோபனாகிய எனது சிங்கள மொழிபெயர்ப்பு நாவலான "உழைப்பால் உயர்ந்தவர்கள்" அண்மையில் வெளிவந்தது. இந் நாவல் தொடர்பான விமர்சனமொன்றை 'சிவா' என்பவர் புதிய பூமி டிசம்பர் இதழில் எழுதியிருந்தார்.

குறுகிய நோக்கில், நாவலை முழுதும் வாசிக்காமல் எழுதப்பட்ட விமர்சனம் போல் இது காணப்படுவதால் சில தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுகின்றன.

சிவாவின் விமர்சன உரையின் இரண்டாம் பந்தியில் "தோட்டத்துக்கு வந்து அச் சமூகத்துடன் வாழ்ந்து மீண்டும் கிராமத்தில் வசதியுடன் வாழக் கனவு காண்கிற ஒரு சிங்களக் குடும்பத்தின் கதைதான் இது என்று இந் நாவலின் மார்த்தேனிஸ் அப்பு என்கின்ற கதாபாத்திரம் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிவாவின் இக் கருத்து இந் நாவலின் தொனிப் பொருளையே சிதைக்க எடுத்திருக்கும் முயற்சியாகும். மதார்த்தேனிஸ் அப்பு என்ற பாத்திரம் இந் நாவல் முழுவதும் தொடர்ச்சியாக "தோட்ட நிர்வாகத்தின் கெடு பிடிக்குள்ளிருந்தும், பெருந்தோட்டத் தொழிலாளி என்ற அரையடிமை வாழ்வில் இருந்தும் விடுபட்டு, கிராமத்தில் ஒரு சிறு காணித் துண்டில் சொந்தமாக அமைக்கப்பட்ட குடிசையில், சுதந்திரமான வாழ்வை நோக்கி" முன்னேற வேண்டுமென வலியுறுத்துகின்ற தேயன்றி வசதியான ஆடம்பரமான வாழ்வை அடைய வேண்டுமென எச்சந்தர்ப்பத்திலும் கூறவோ, அத்தகைய மறைமுகக் கருத்தோ இந் நாவலில் காணப்படவில்லை.'

உண்மையில் தோட்டத் தொழிலாளி எத்தகைய அரையடிமை வாழ்வை வாழ்கின்றான் என்பதை தோட்டத்தில் வாழ்பவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். சிவா போன்ற கொழும்பில் வாழ்பவர்களுக்கு அவர்களின் கொத்தடிமை வாழ்க்கையை புரிந்து கொள்ளும் திராணி கிடையாது. வேறுவிதத்தில் கூறுவதாயின் வசதியான வாழ்வு பற்றி கற்பனை செய்யவோ, கனவு காண வோ கூட தோட்டத் தொழிலாளர்களால் முடியாது. இது அவர்கள் தொடர் பான யதார்த்தம்.

இந் நாவலின் பக்கம் 130இல் மார்த்தேனிஸ் அப்பு என்ற கதாபாத்திரம் பின்வருமாறு குறிப்பிடுவதாக வருகின்றது. "சுகத்தபால, உங்கள் அனைவரையும் மீண்டும் கிராமத்தில் குடியேற்றிவிட வேண்டுமென்பது தான் எனது முக்கிய தேவை, இன்று இத் தோட்டத்தில் வசிப்பவர்களை விட மேலும் வறுமைப்பட்ட மக்கள் கிராமத்தில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தோட்டத் தில் இருப்பவர்களைப் போல அடிமைத் தொழில் செய்பவர்கள் அல்ல. இவற்றுக்கெல்லாம் மேலான சுதந்திர வாழ்வொன்று அவர்களுக்கிருக்கிறது" என்று குறிப் பிட்டுள்ளதை ஏன் சிவா வாசிக்கவில்லை. இதனால் தான் சிவா இந் நாவலை முழுமையாக வாசிக்கவில்லை என்ற சந்தேகம் எழுகின்றது.

சிவாவின் மற்றொரு தவறான கணிப்பீடு "அப்படியா னால் தோட்டத்தில் இருந்து வெளியேறி எல்லாரும் பட்டணத்துக்கு வந்தால் எல்லாம் சரியாகி விடுமா?" என்ற அங்கலாய்ப்பில் வெளிப்படுகின்றது. பொதுவாக கிராமங்களில் இருந்து பட்டணம் நோக்கிய மக்கள் நகர்வு அதிகரித்து வருகின்றது என்பதை சமூக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டித்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. தோட்டத்தில் இருந்து வெளியேறுவது "யாருக்கு எப்படி இயலும். எத்தனை பேருக்கு இயலும்" என்று குறிப்பிடுவது சிறுபிள்ளைத் தனமான கேள்வியா யுள்ளது. இக் கதையின் மொழிபெயர்ப்பாளருக்குத் தோட்டத்தில் இருந்து வெளியேற முடிந்தது போல் எல்லாருக்கும் முடியுமா? என்று மொழிபெயர்ப்பாளரின் தனிப்பட்ட வாழ்வையும் ஆராய்கிறார்.

மேற்படி கதை 1970களில் நிகழ்ந்ததாக வருகின்றது. இக் கதையை ஊன்றிப் படிப்பவர்களுக்கு அது விளங்கும். 2001ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி மொத்தம் 15 இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர் இலங்கையெங்கும் வசிக்கின்றனர் என்பது கணிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 750, 000 பேர்களே தோட்டத்துறையை அண்டி வாழ்கின்றனர். 1995 ஆம் ஆண்டு கணிப்பீடு ஒன்றின்படி (Tea plantations in crisis - P.P. Manikam Published by Social Secientists Association) பெருந்தோட்டங்களில் 183,000 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றனர். அவர்களின் மொத்த சனத்தொகை 788,000 ஏனையோர் எங்கே போய்விட்டனர்.

அவர்கள் பட்டணத்துக்குப் போய்விட்டார்களா? இல்லை. அவர்கள் மேற்படி நூலாசியர் பந்துபால குருகே நினைத்தது போல் மேற்படி தோட்டங்களில் இருந்து வெளியேறி சிறு நகர்களில்தான் வாழ்கிறார்கள்.

வரலாற்றில் எங்கும் நசுக்கி, ஒடுக்கப்பட்ட மக்கள் அதற்கு எதிராக போரடி யது ஒரு புறமிருக்க, தாம் வாழ்ந்த பிரதேசங்களில் இருந்து வெளியேறி வாழ்வொன்றைத் தேடி தூரதேசங்களுக்கு செல்கின்றமை இன்றும் நிகழத்தான் செய்கின்றது.

தோட்டத் தொழிலாளியின் பிள்ளைகள் வேலைக்காரர்களாக செல்வதும், தோட்ட உத்தியோகத்தரை மணமுடிப்பதும், தோட்ட உத்தியோகத்தர்களின் வீட்டிலேயே வேலைக்கமர்த்தப்படுவதும், வேலைக்குச் சென்ற இடங்களில் கொடுமை, சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதும், சீரழிவதும் பட்டவர்த்தனமான உண்மைகள். அவை கதைகளில், கட்டுரைகளில் வெளிப்படுத்தப்படுவது மூலம் தான் அம்பலப்படுத்தப்படுகின்றன. பிறருக்குத் தெரியவருகின்றன. நூலாசிரியர் இம் மக்களை இழிவுபடுத்துகி றார் என்று கூறுவது அவர் மேல் சுமத்தும் அப்பட்டமான பழியாகும்.

"செனஹசின் உப்பன் தருவோ" என்ற நாவலுக்கு "உழைப்பால் உயர்ந்தவர்கள்" என்று பெயரை மூல நாவலாசிரியரின் அனுமதியுடனும், அனுசரணை வழங்கிய நூலக சேவை சபையின் அனுமதியுடனுமே மாற்றப்பட்டுள்ளது. அந்த பெயர் கதை மாந்தர்கள் உழைப்பால் உயர்கிறார்கள் என்ப தற்காக இடப்படவில்லை. "சுய உழைப்பை வாழ்வின் அடிநாதமாகக் கொள்பவர்கள் சற்று உயரவே வைத்துப் பார்க்கப்பட வேண்டியவர்கள்" என்பதே தலைப்பின் பொருள் விளக்கமாகும்.

-இரா. சடகோபன்-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

மார்ச் 2008

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org

சென்னை பல்லாவரம் பகுதியில் சாக்குப் பையில் வைத்துத் தெருவில் வீசப்பட்ட பெண் குழந்தை அக்கம்பக்கத்திலுள்ள ஏழைகளால் காப்பாற்றப்படும் அவலம்.







அண்மையில் பலஸ்தீனத்தில் ஹமாஸ் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கான பொருளாதாரத் தடையை இஸ்ரேல் அமுல்படுத்தியது. இதன் மூலம் அப்பிரதேச மக்களை அடிபணிய வைக்கலாம் என மனப்பால் குடித்தது. ஆனால் மக்கள் எகிப்தின் எல்லையில் நாட்டப்பட்ட தூண் வேலிகளையும் கொங்கிறீட் சுவர்களையும் உடைத்தெறிந்து எகிப்திற்குள் புகுந்து தமக்கான பொருட்களை வாங்கி வந்தனர். இம் மாபெரும் மக்கள் எழுச்சியால் இஸ்ரேலிய சியோனிசவாதிகள் செய்வதறியாது திகைத்து நின்றனர். பலஸ்தீன மக்களின் வெகுஜன எழுச்சிக்கு இந் நிகழ்வு மற்றொரு சாட்சியமாகும்.












தமிழகத்தில் ஒங்கி ஒலித்த முழக்கங்கள்

பயங்கரவாதி நரேந்திர மோடியே தமிழகத்தில் நுளையாதே!
இனப்படுகொலைக் குற்றவாளி நரேந்திர மோடியே திரும்பிப்போ!
ஓங்கட்டும் போட்டம்! ஒழியட்டும் இந்து வெறிப் பாசிசம்!

குஜராத்தின் முதலமைச்சரும் மூவாயிரம் முஸ்லீம் மக்களைக் கொன்றழித்து பல ஆயிரம் முஸ்லீம்களைப் படுகாயப்படுத்திய கொலைகாரன் நரபலி - நரேந்திர மோடி துக்ளக் சோவின் அழைப்பில் தமிழ் நாட்டிற்கு வந்த போது புரட்சிகர அமைப்புகளும் மனிதஉரிமையாளர்களும் எதிர்ப்பு ஆர்ப்பட்டம் செய்தனர்.







வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரிண்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.